விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலைவனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 20 ஞாயிற்றுக்கிழமை (05.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 229



இன்று நடைபெறும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளை பெற வாழ்த்துகின்றோம்.
வலம்புரி
கல்விப்பிரிவு

# வடக்கு அபிவிருத்தியில் அரசு கூடிய கவனம்

## பிரதமர் ரணில் கிளிநொச்சியில் தெரிவிப்பு



(கிளிநொச்சி) வடக்கில் பெருமளவான பிரச்சினைகள் காணப்பட்டாலும் வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்துவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சியில் வைத்து தெரிவித்துள்ளார். மேலும் காணிகள் விடுவிப்பு தொடர்பான பிரச்சினைகள் படிப்படியாக தீர்வு பெற்று வந்தாலும் இராணுவம் மற்றும் பொலிஸ் தொடர்பான பிரச்சினைகள் இன்னும் வடக்கில் நிலவுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (15-ம் பக்.)

### தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை இன்று; ஏற்பாடுகள் பூர்த்தி

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2018-ம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை இன்று 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 16

### வடக்கில் குற்றங்களை கட்டுப்படுத்த மக்களின் ஆதரவு தேவை!

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர



(குருமன்காடு)

வடக்கில் போதைவஸ்து, சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்ற குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு சமுதாய ஒத்துழைப்பு பொலி 15

### கந்தரோடையில் குடும்பத் தலைவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடை பகுதியில் குடும்பத் தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் சங்குவேலி வடக்கைச் சேர்ந்த கணபதிபிள்ளை இராசதுரை (வயது -59) என்பவரே 15

### ஆவா குழுவுடன் தொடர்புடைய 11 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

ஆவா குழுவுடன் சம்பந்தப்பட்ட 11 இளைஞர்களை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

தென்மராட்சி பகுதியில் நேற்று மேற்கொண்ட தேடுதலின் போது, சாவகச்சேரி, சரசாலை, மறவன்புலவு உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 11 இளைஞர்களையே மானிப்பாய் பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

அண்மைக் 16

### மன்னார் மனித புதைகுழி மீட்பு பணிகளுக்கு

காணாமல் போனோர் அலுவலகம் நிதியுதவி

(கொழும்பு)

மன்னார் மனித புதைகுழியின் மீட்பு பணிகளுக்கு காணாமல் போனோர் அலுவலகம் நிதி வழங்குவதாக அறிவித்துள்ளது.

அந்த அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி 16

### சிறந்த பொறியியலாளர்கள் யாழில் உருவாகியிருந்தனர்

ரணில் விக்கிரமசிங்க பெருமிதம்

(கிளிநொச்சி)

இலங்கை பொறியியல் துறையில் பிரவேசித்த தலைசிறந்த பொறியியலாளர்கள் யாழ்.மாவட்டத்தில் இருந்தே உருவாகியதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொறியியல் பீட 15

### எதிர்க்கட்சி தலைவர் யார்?
### எதிர்வரும் 7-ம் திகதி சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தினேஷ் குணவர்தனவிற்கு வழங்குமாறு கூட்டு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ள நிலையில், அது குறித்த தீர்மானத்தை சபாநாயகர் கருஜயசூரிய எதிர்வரும் 7-ம் திகதி பாராளுமன்றில் அறிவிக்கவுள்ளார்.

2015-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 15

### பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

சம்பள அதிகரிப்பு இல்லை

(பொலநறுவை)

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்புக்கு ஒருபோதும் இடமளிக்கப்படாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கட்சி தலைவர்களின் உடன்பாட்டுடனேயே அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது என செய்தி பத்தி 15

### புலம்பெயர் அமைப்புகள் ஆட்சி மாற்றத்துக்கு நிதி

ஒன்றிணைந்த எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் புதிய ஆட்சியை ஏற்படுத்த அமெரிக்கா உள்ளிட்ட புலம்பெயர் அமைப்புகள் 585 மில்லியன் டொலரை வழங்கி 15

### யாழ்.குடாவில் அசாதாரண நிலையால்

இயல்பு வாழ்வு பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்களின் இயல்வு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேத 15

## அரசே ஜனநாயகத்தை அழிக்கிறது 2020-ல் ஆட்சி மாற்றம் நிச்சயம்!

அமெரிக்க பிரதிநிதிகளிடம் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு) நாட்டில் ஜனநாயகத்தை அழிக்கும் நடவடிக்கைகளையே தேசிய அரசாங்கம் முன்னெடுப்பதாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அமெரிக்க பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனநாயக தேசிய நிலையத்தின் பிரதிநிதிகளான ஜவன் டோஹடி, டேவிட் மெக்ராட்ஸ் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் இல்லத்தில் நேற்று காலை இடம்பெற்ற இச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் தாரக பாலசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடல் தொடர்பில் பேராசிரியர் ஜி.எல். 02

## சர்வதேச நீதிபதிகளுக்கு இலங்கையில் இடமில்லை

ஜனாதிபதி மீண்டும் தெரிவிப்பு

(பொலநறுவை)

இலங்கையில் போருக்குப் பிந்திய சம்பவங்கள் தொடர்பான விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் உறுதியாக தெரிவித்து 15



# வடக்கு இளைஞர்களுக்கு போதைப்பொருட்களை வழங்குவதில் அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு

## பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

போதைப்பொருட்கள் தென்னிலங்கையில் இருந்தே வடக்கிற்கு பகிர்ந்தளிக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி வடக்கு இளைஞர்களுக்கு போதைப்பொருட்களை வழங்குவதில் அரசியல்வாதிகளுக்கும் தொடர்பிருப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்ட கிண்ண அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றதுடன், பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதன்போது குறித்த விளையாட்டு கழகத்திற்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்தாங்கியையும் அவர் திரைநீக்கம் செய்து திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து குறித்த உதை பந்தாட்ட போட்டிக்கான கிண்ணம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து அங்கு தொடர்ந்து உரையாற்றுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். (ம)

# பரீட்சை விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை-ஆணையாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்குள் கையடக்க தொலைபேசி மற்றும் கணிப்பான் (கல்குலேட்டர்) உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்களைக் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கென சிறப்புக் கண்காணிப்பு குழுநிய மிக்கப்பட்டுள்ளது. பரீட்சை ஒழுங்குகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித் தெரிவித்தார்.

அத்துடன், பரீட்சை மோசடிகளைக் கட்டுப்படுத்தும் பணியில் இராணுவத்தினரை ஈடுபடுத்தும் தீர்மானம் கைவிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இன்று இடம்பெறவுள்ளது. கல்விப பொதுத்தராதர உயர்தர பரீட்சைகள் நாளை 6ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் முதலாம் திகதி வரை இடம் பெறவுள்ளது.

இவ்வாண்டு 3 இலட்சத்து 55, 321 பரீட்சாத்திகள் புலமை பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இவர்களில் 87 ஆயிரத்து 556 தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகளும், 2 இலட்சத்து 67, 765 சிங்கள மூலமான பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர்.

மேலும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 44 ஆயிரத்து 146 பாடசாலை மூலமான பரீட்சார்த்திகளும், 77 ஆயிரத்து 323 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

உயர்தர பரீட்சைகளை நடத்துவதற்காக 2 ஆயிரத்து 268 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்களில் இடம்பெறும் மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கென சிறப்பு கண்காணிப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை நிலையங்களில் கையடக்க தொலைபேசி மற்றும் கணிப்பான் உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்களை எடுத்துச் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை ஒழுங்குகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் மேலும் கூறினார். (ம)




## அரசே ஜனநாயகத்தை...

பீரிஸ் குறிப்பிடுகையில்,

"தேசிய அரசாங்கத்தில் ஜனநாயகம் என்பது வெறுமனமே பேச்சளவில் மாத்திரமே பின்பற்றப்பட்டு வருகின்றது. தேர்தல் காலத்திற்கு காலம் இடம் பெற வேண்டும். ஆனால் தேர்தல்களை நடத்தாமல் காலம் தாழ்த்துவதே தற்போது அரசாங்கம் நோக்கமாக கொண்டுள்ளது. உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக் காலம் நிறைவடைந்து 2 வருடத்திற்கு பிறகே உள்ளூராட்சிமன்ற தேர்தல் இடம் பெற்றது.

அரசாங்கம் விரைவில் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த வேண்டும் என்று நீதிமன்றத்தை நாடிய பின்னரே உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம் பெற்றது. இதன் தொடர்ச்சியே தற்போது மாகாண சபை தேர்தலிலும் தொடர்கின்றது.


அரசாங்கம் மேற்கொள்ளும் தீர்மானங்கள் வினைத்திறனற்றதாகவே காணப்படுகின்றது. மாகாண சபை தேர்தலை பழைய முறையிலே நடத்துவதாக பிரதமர் கடந்த மாதம் இடம் பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூட்டத்தில் குறிப்பிட்டார். அதன் பிறகு கட்சி தலைவர்கள் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கு இணக்கப்பாடு தர

(15ஆம் பக்கம் பார்க்க...)

## மரண அறிவித்தல்கள்

### அமரர் சுப்பிரமணியம் தம்பிஜயா

(ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர், கூட்டுறவுத் திணைக்களம்)



யாழ்ப்பாணம் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் இந்துக் கல்லூரி ஒழுங்கை யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் இல.147, வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தம்பிஜயா அவர்கள் 03.08.2018 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் சுப்பிரமணியம்-அன்னமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற தம்பு-பூரணம் தம்பதியரின் மருமகனும், பவளேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயச்சந்திரன், ஜெயந்தி, வசந்தி, ஜெயவதனி, ஜெயரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற றாஜி (ஆசிரியை), மனோறஞ்சன், பிறேம், சுதர்சன், மேஜெயா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திருமதி அழகரத்தினம் இராசதுரை, காலஞ்சென்ற துரைராஜா மற்றும் தங்கராசா, திருமதி நேசம்மா புவளராஜா, ஆனந்தராஜா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வவுனியா தோணிக்கல்லில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
பெறாமகள் ஆனந்தராசா-தர்சினி
தொடர்பு:-0774590948

தோணிக்கல்,
வவுனியா (சி-3447)

### பரமலிங்கம் இராஜேஸ்வரன்



வாடியடி பூநகரியை பிறப்பிடமாகவும், மட்டுவில் நாடு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரமலிங்கம் இராஜேஸ்வரன் அவர்கள் 03.08.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமலிங்கம்-கனகம்மா தம்பதிகளின் மூத்தமகனும், சறோயினிதேவி (கணக்காளர் பூநகரி-ப.தெ.வ.அ.கூ சங்கம்) அவர்களின் பாசமிகு கணவரும் நிரோஜன், நிதர்சன், சகீதனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வாடியடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் நாடு மேற்கு,
பூநகரி (5270)

தகவல்:-
குடும்பத்தினர்

# மணல் கடத்தியவருக்கு 84 ஆயிரம் ரூபா அபராதம்

(கரணவாய்)

சட்டவிரோதமான முறையில் அகழப்பட்ட மணலினை ஏற்றிவந்த சாரதி ஒருவரிற்கு அதிகபட்சமாக 84 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்து ஏற்றிவந்த போது நெல்லியடி பொலிஸார் நிறுத்துமாறு சைகை காட்டினர்.

அதனை அலட்சியப்படுத்தி தப்பியோடிய ஹன்டர் வாகனத்தை பொலிஸார் கைப்பற்றினர்.

சாரதி தப்பிசென்ற நிலையில் பின்னர் சரணடைந்தார்.

சரணடைந்த வேம்படி பகுதியைச் சேர்ந்த நபர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவ் வழக்கு கடந்த வியாழக்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்ட போது. அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அதிக பட்சமாக 84 ஆயிரம் ரூபா அபராத்ம் விதித்து தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன்.(ம-60)




## விற்பனைக்கு

முல்லைத்தீவுப் பகுதியில் மாடு, ஆடுகள் (கிடாய், மறி) விற்பனைக்குண்டு.

T.P:-0771681697,
0766205322 (சி-3444)

## மணல் ஏல விற்பனை

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட மணல் ஏல விற்பனை எதிர்வரும் 07.08.2018ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) காலை 8.30 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பதீவாளர்
மாவட்ட நீதிவான் நீதிமன்றம்
முல்லைத்தீவு (இ)

## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. கால்நடை வளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் இருப்பதுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஆரம்ப சம்பளம் மாதம் 30,000/- வழங்குவதுடன் பிற சலுகைகளும் உண்டு.

தொ.பே:0771681697, 0766205322 (சி-3444)

DATA
Differently Able Tamils Association
Differently Able Tamils Association
தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு
TAMIL PARA SPORTS

தமிழ் மாற்றுத்திறனாளிகள்
விளையாட்டு விழா






சக்கரநாற்காலிகள்..
ஊன்றுகோல்கள்..
வெண்பிரம்புகள்..
வந்து பாருங்கள்.

காலை 9 மணி

துரையப்பா விளையாட்டரங்கு

இன்று

ஒரு மாலை
மாற்றுத்திறனாளிகளோடு.....

இந்திய மற்றும் ஐரோப்பிய முன்னணி
கலைஞர்கள் மாற்றுத்திறனாளி கலைஞர்களோடு
பங்குபெறும் மாபெரும்

இசைநிகழ்ச்சி

யாழ்ப்பாணம் நகரசபை
மைதானம்

மாலை 7 மணி

(சி-3409)

# வெற்றியைக் கோட்டைவிட்ட ஹோலி

## ○ ஆயிரத்தில் இங்கிலாந்து மகுடம் ○ இந்தியாவின் போராட்டம் வீண்



இந்திய வீரர்களுக்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்த பென் ஸ்டோக்ஸ்

பேர்மிங்காம் டெஸ்டில் வெல்ல வேண்டிய வாய்ப்பை இந்திய அணி அநியாயமாக நழுவவிட்டது. வெறும் 31 ஓட்டங்களில் தோல்வியடைந்து ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளித்தது. அணித்தலைவர் ஹோலி கொஞ்சம் தாக்குப்பிடித்திருந்தால் நிலைமை மாறியிருக்கும்.

தனது 1000ஆவது போட்டியில் விளையாடிய இங்கிலாந்து அணி மறக்க முடியாத வெற்றி ஈட்டியது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இரு அணிகள் மோதிய முதல் டெஸ்ட் பேர்மிங்காமில் நடந்தது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 287. இந்தியா 274 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து 180 ஓட்டங்கள் எடுத்தது.

194 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய இந்திய அணி மூன்றாவது நாள் முடிவில் இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்கள் எடுத்து, 84 ஓட்டங்களால் பின் தங்கியிருந்தது.

தினேஷ் கார்த் த ி க (18), ஹோலி (43) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### கார்த்திக் ஏமாற்றம்

நான்காவது நாள் ஆட்டத்தில் முதல் ஓவரை அண்டர்சன் வீசினார். 4ஆவது பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்த தினேஷ் கார்த்திக் (20), கடைசி பந்தில் மாலனிடம் 'பிடி' கொடுத்து திரும்பினார். அடுத்து ஹோலியுடன் இணைந்தார் பாண்ட்யா. தங்களது சொந்தமண் என்பதால் அண்டர்சன், பிரோட் இருவரும் 'வேகத்தில்' சற்று கூடுதலாக மிரட்டினர்.

### ஹோலி அதிர்ச்சி

பொறுமையாக விளையாடிய ஹோலி, அண்டர்சன் பந்தில் பவுண்டரி அடித்து அரைச்சதம் எட்டினார். மறுபக்கம் பிரோட் ஓவரில் இரண்டு பவுண்டரி அடித்து பாண்ட்யா நம்பிக்கை கொடுத்தார்.

இதனால் ஸ்ரோக்ஸை பந்துவீச அழைத்தார் ஜோ ரூட். இவரது மூன்றாவது பந்தில் 'ரிவியு' முறையில் ஹோலி (51) ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார். இதனால், வெற்றியை கோட்டைவிட்டார். அதே ஓவரின் கடைசி பந்தில் மொஹமட் ஷமியும் 'டக்' அவுட்டாக, 141 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து தோல்விப் பாதையில் சென்றது.

### முடியாத இலக்கு

அடுத்து வந்த இஷாந்த் (11) 2 பவுண்டரி அடித்த திருப்தியுடன் திரும்பினார். கைவசம் ஒரு விக்கெட் மட்டும் மீதம் இருக்க இந்திய அணியின் வெற்றிக்கு 40 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இந்நிலையில் ஸ்ரோக்ஸ் பந்தில் பாண்ட்யா 31 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 162 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 31 ஓட்டங்களால் பரிதாபகரமாக வீழ்ந்தது.

உமேஷ் (0) ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்திய அணி டெஸ்ட் தொடரில் 0-1 என பின்தங்கியது.

இரு இன்னிங்சில் சேர்த்து 5 விக்கெட்டுக்களுடன் 87 ஓட்டங்கள் எடுத்த இங்கிலாந்தின் சாம் கர்ரன் ஆட்ட நாயகனாக தேர்வானார்.

இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் வரும் 9ஆம் திகதி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

### இஷாந்திற்கு அபராதம்

பேர்மிங்காம் டெஸ்டின் 3வது நாள் காலையில் இங்கிலாந்தின் மாலனை அவுட்டாக்கிய இஷாந்த் சர்மா, அவரைப் பார்த்து கோபமாக கத்தினார். இது ஐ.சி.சி., விதியை மீறிய செயல் என்பதால் இஷாந்த் சர்மாவுக்கு போட்டி சம்பளத்தில் 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. தவிர ஒரு தகுதி இழப்பு புள்ளி வழங்கப்பட்டது.

### நான்காவது இடம்

டெஸ்ட் அரங்கில் நான்காவது இன்னிங்சில் 'சேஸ்' செய்து குறைந்த ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா (31 ஓட்.) தோற்ற போட்டிகள் வரிசையில் இது 4வது இடம்பிடித்தது. 1999ல் 12 (சென்னை, பாக்.), 1987ல் 16 (பெங்களூரு, பாக்.), 1977ல் 16 (பிரிஸ்பேன், ஆஸி.) ஓட்டங்களில் தோற் றது.

### பாடம் கற்போம்

அணித் தலைவர் ஹோலி கூறுகையில்," துடுப்பாட்டத்தில் இன்னும் சற்று சிறப்பாக செயல்பட்டு இருக்க வேண்டும். வெற்றிபெறத் தேவையான ஒருசில வாய்ப்புகள் எங்களுக்கு கிடைத்தன. ஆனால் இங்கிலாந்து வீரர்கள் எளிதாக விட்டுத்தரவில்லை. ஓட்டங்கள் எடுக்க கடுமையாக போராட வேண்டி இருந்தது. இத்தொடரில் மீதமுள்ள போட்டிகளில் எப்படி செயல்பட வேண்டும் என்பதை இந்த தோல்வி உணர்த்தியது," என்றார்.

## மந்தனா சாதனைச் சதம்



லங்காஷயர் தண்டர் அணிக்கு எதிரான கிரிக்கெட் சுப்பர் லீக் போட்டியில் வெஸ்டேர்ன் ஸ்டோர்ம் அணியின் இந்திய வீராங்கனை ஸ்மிருதி மந்தனா சதம் கடந்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

இங்கிலாந்தில் பெண்களுக்கான கிரிக்கெட் சுப்பர் லீக் (சி.எஸ்.எல்.) 'ரி20'தொடர் நடக்கிறது. மான்செஸ்டர் நகரில் நடந்த போட்டியில் லங்காஷயர் தண்டர், வெஸ்டர்ன் ஸ்டார்ம் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய லங்காஷயர் அணிக்கு அமி சாட்டர்த்வைட் (85) கைகொடுக்க, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்க்ளை எடுத்தது.

சுலப இலக்கை விரட்டிய வெஸ்டேர்ன் ஸ்டோர்ம் அணிக்கு இந்திய வீராங்கனை ஸ்மிருதி மந்தனா, 61 பந்துகளில் 4 சிக்சர், 12 பவுண்டரி உட்பட 102 ஓட்டங்கள் எடுத்து கைகொடுத்தார்.

வெஸ்டர்ன் ஸ்டோர்ம் அணி 18.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களை எடுத்து, 7 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

### மிதாலிக்கு பின்...


இதன்மூலம் உள்ளூர் 'ரி20' போட்டி வரலாற்றில் மிதாலி ராஜுக்கு பின் சதமடித்த 2ஆவது இந்திய வீராங்கனை என்ற .பெருமை பெற்றார் மந்தனா.

கடந்த ஆண்டு ராஜ்கோட் நகரில் நடந்த சீனியர் பெண்களுக்கான 'ரி20' லீக் தொடரில் ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் ரயில்வே அணிக்காக விளையாடிய மிதாலி ராஜ், 66 பந்துகளில் 100 ஓட்டங்கள் (ஒரு சிக்சர், 13 பவுண்டரி) எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

## வரலாறு படைத்தது நேபாளம்

## ஒரு நாள் அரங்கில்

# முதல் வெற்றி



ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் முதல் வெற்றியை பதிவு செய்து வரலாறு படைத்தது நேபாளம்.

நெதர்லாந்து சென்ற நேபாளம் அணி 2 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது.

முதல் போட்டியில் நெதர்லாந்து வென்றிருந்த நிலையில், இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் ஆம்ஸ்டல்வீனில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற நேபாள அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய் தது.

நேபாள அணிக்கு கைனேந்திரா (13), சுபாஷ் (19) ஆட்டமிழந்தனர். ரோகித் குமார் 6 ஓட்டங்கள் எடுத்தார். அணித் தலைவர் பராஸ் கட்கா (51) அரைச்சதம் கடந்தார். மற்றையவர்கள் விரைவில் திரும்ப, நேபாள அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 216 ஓட்டங்களை எடுத்தது.

### வெஸ்லே ஆறுதல்

எட்டிவிடும் இலக்கை விரட்டிய நெதர்லாந்து அணிக்கு ஸ்ரீபன் டக் அவுட்டானார். டானியல் 39, கூப்பர் 19 ஓட்டங்கள் எடுத்தனர். வெஸ்லே (71) அரைச்சதம் விளாசினார்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இதில் 4 ஓட்டங்கள் மட்டுமே கிடைக்க, நெதர்லாந்து அணி 50 ஓவர்களில் 215 ஓட்டங்களை மட்டுமே எடுத்து ஒரு ஓட்டத்தால் வீழ்ந்தது.

இத்தொடரின், முதல் போட்டியில்தான் நேபாளம் அணி ஒரு நாள் அரங்கில் தடம் பதித்தது. தற்போது முதல் வெற்றியை பதிவு செய்தது.

# திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் புனிதத் தலங்களாக பிரகடனம் செய்யப்பட வேண்டும்

## அமைச்சர் மனோகணேசன் வலியுறுத்து



(கொழும்பு)

திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் ஆகிய தலங்கள், இந்துக்களின் புனிதத்தலங்களாக பிரகடனம் செய்யப்பட வேண்டும். இதற்கான அமைச்சரவை பத்திரத்தை, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, இந்து மத விவகார அமைச்சர் நண்பர் டி.எம்.சுவாமிநாதன் அமைச்சரவையில் சமர்ப்பிக்க வேண்டும். இத்தகைய முயற்சி சாத்தியமாக அவசியமான ஒத்துழைப்புகளை வழங்க நான் தயாராக உள்ளேன் என தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க, அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அமைச்சர் மனோ கணேசன், அமைச்சர் சுவாமிநாதனுக்கு அதிகாரபூர்வமாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

கடந்த அமைச்சரவை கூட்டத்தின்போது, சுமார் 400 ஆண்டுகால வரலாறு கொண்ட மன்னார் புனித மரியாள் மடு தேவாலய பிரதேசம் புனித பிரதேசமாக அறிவிக்கப்பட கோரும் அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்திருந்தார்.

இதுவே இந்நாட்டில் பிரகடனம் செய்யப்பட்டுள்ள முதலாவது கத்தோலிக்க புனித்தலமாகும். இது ஒரு நல்ல நடவடிக்கையாகும்.

எனவே இதை நாம் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளோம்.

இதே அடிப்படையில், திருஞானசம்பந்தரால் பாடப்பட்டு, இந்நாட்டில் தென்கைலாயம் என கொண்டாடப்படும் கிழக்கு கரையில் அமையப் பெற்ற திருக்கோணேஸ்வரம், மேற்கு கரையில் அமையப்பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆகிய தலங்களையும், வட கோடியில் அமைந்துள்ள நகுலேஸ்வரம் தலத்தையும், புனித தலங்களாக பிரகடனம் செய்ய வேண்டுமென இந்நாட்டில் வாழும் இந்துக்கள் என்னிடம் கோரியுள்ளனர்.

இந்து மத விவகாரம் உங்களை சார்ந்த அமைச்சு விவகாரம் என்பதால், இதை உங்கள் கவனத்துக்கு அதிகாரபூர்வமாக கொண்டு வருகின்றேன் என அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 | 07 |
| - | - |
| 09 | 07 |
| - | - |
| 1937 | 2018 |

அமரர். **இரத்தினம் கணபதிப்பிள்ளை**

(இரத்தினம் ரீச்சர்)


**கடந்த 07.07.2018 அன்று சிவபதம் அடைந்த அமரர் இரத்தினம் கணபதிப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 06.08.2018 திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன் நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**குறிப்பு: எமது தாயாரின் இறுதி நிகழ்வில் நாம் உணர்வுகளுக்கு அடிமையாகியிருந்த தருணத்தில் எமது நினைவுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் யாருக்காவது அழைப்பு வழங்கத் தவறியிருப்பின் பெருமனதோடு இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.**

**"வசந்தம்"**
**134, அரசடி குறுக்கு வீதி,**
**கரவெட்டி மேற்கு, கரவெட்டி.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



அமரர்.
**தம்பையா பரஞ்சோதி** (சிறீ)

(சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான தலைவர்)

**மலர்வு: 17.10.1950**
**உதிர்வு: 02.08.2018**

**சண்டிலிப்பாய் சீரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வரும் சண்டிலிப்பாய் நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான தலைவருமான தம்பையா பரஞ்சோதி அவர்கள் 02.08.2018 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பிரிவைப் பகிரும்
இந்து இளைஞர் மன்றம், சீரணி
நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

(5263)

## இராசி பலன்

**மீனம்:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**மேடம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றம் செய்யும் நிலை ஏற்படலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** எதிலும் பொறுமையாகச் செயற்படுவது நல்லது, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் மரியாதை கூடும்.

**கும்பம்:** வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | இராசி பலன் | | சூரி.புத. ராகு |
| செவ். கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி, விசாகம்<br>மாலை 5.23 மணிக்கு<br>இடப-சந் | | |
| சனி | | குரு | சுக் |

**05.08.2018**

ஆடி 20, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
அட்டமி காலை 7.10 மணிவரை
நவமி பின்னிரவு 5.45 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
கார்த்திகை விரதம்
அட்டமி - நவமி

**வளவன்**

**கடகம்:** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பணவரவு கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்:** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனை ஒன்றைக் கூறலாம், விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், தந்தை வழி உறவினர்கள் மூலம் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், உறவினர் வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** பகைவர்கள் விலகுவர், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொது நலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.



யாழ்.பாலகதிர்காம ஆடிவேல் பவனி கடந்த புதன்கிழமை இரவு ஆலயத்தை சென்றடைந்தது. பால கதிர்காம ஆலய தீர்த்தோற்சவத்தை அடுத்து ஆடிவேல் பவனி வருடம்தோறும் நடைபெற்று வருகின்றது. ஆலயத்திலிருந்து தொடங்கும் வேல் பவனி மூன்று நாட்கள் யாழ்.நகர்ப்பகுதியை வலம் வந்து ஆலயத்தை சென்றடையும். இம்முறை கடந்த 30ஆம் திகதி ஆலயத்திலிருந்து புறப்பட்ட வேல் பவனி, நல்லை ஆதீனம் , வீரமாகாளியம்மன் ஆலயம் , வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் , நாச்சிமார் கோவில், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் மற்றும் திருநெல்வேலி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயம் சென்று மீண்டும் ஆலயத்தை சென்றடைந்தது. பாரம்பரியக் கலைகளான காவடியாட்டம், கரகாட்டம், குதிரையாட்டம், பாம்பாட்டம் , பொம்மலாட்டம், மயிலாட்டம் , புலியாட்டம், கம்படி, சிலம்படி, தீப்பந்த விளையாட்டு என்பவற்றுடன் வேல் பவனி ஆலயத்தை சென்றடைந்தது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் வாழ்த்துச் செய்தி

(யாழ்ப்பாணம்)

"பதற்றமின்றி தன்னம்பிக்கையுடன் பரீட்சைக்கு தோற்றி வெற்றியடையுங்கள்" என வடக்கு மாகாண கல்வி அமைச்சு இன்று நடைபெற இருக்கும்ஐந்தாம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, மாகாண கல்வித்திணைக்களம், வலய கல்வி அலுவலகங்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் சார்பில் இந்த வாழ்த்துச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வாழ்த்துச் செய்தியில், "இன்று 5ஆம் திகதி ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், ஒரு குழந்தையின் வாழ்வின் எதிர்கால முன்னேற்றத்திற்கான ஆதாரமாக புலமைப்பரிசில் பரீட்சை அமைவதில்லை.

இந்தப் பரீட்சை முடிவடைந்தபின் அடுத்து வரும் ஆண்டுகளில் உங்கள் ஒவ்வொருவரின் விடாமுயற்சியும்,கல்வியில் மேல் நிலைக்கு வரவேண்டும் என்ற ஊக்கமும் உங்கள் ஒவ்வொருவரையும் இந்த நாட்டின் ஆற்றல் மிக்க பிரஜைகளாக உருவாக்கும்.

இன்று நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சை உங்களுக்குக் கற்கவேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

பதற்றமின்றி தன்னம்பிக்கையுடன் தோற்றி வெற்றியடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து. இந்த நாட்டின் ஆற்றல் மிக்க பிரஜைகளாக வளர எங்கள் வாழ்த்துக்கள்.

இவ்வாறு வட மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் குழந்தைகளுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வடமாகாணக் கல்வி அமைச்சு, வடமாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-9)

# மகப்பேற்று வைத்திய நிபுணரை நிரந்தரமாக நியமிக்க வேண்டும்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் நிரந்தர வைத்திய நிபுணரை நியமிக்குமாறு பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவினைச் சேர்ந்த ஒரு பகுதி மக்களும் சிகிச்சைக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

அதேவேளை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யாழ்.மாவட்டத்தில் இரண்டாவது பெரிய வைத்தியசாலையாகும்.

இங்கு மகப்பேற்று வைத்திய நிபுணரோ, குழந்தை வைத்திய நிபுணரோ கடந்த ஒருவருடத்திற்கு மேலாக இல்லை.

இதனால் கர்ப்பிணித் தாய்மாரும், குழந்தைகளுக்கு சிகிச்சை பெறவரும் தாய்மாரும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இந் நிலையில் தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரும் தற்காலிகமாகவே நியமிக்கப்பட்டுள்ளார்.

எனவே நிரந்தரமாக வைத்திய நிபுணர் ஒருவரை நியமிக்க வேண்டும் எனவும் அத்துடன், குழந்தை வைத்திய நிபுணர் ஒருவரையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

சாவகச்சேரி நுணாவில் மேற்கில் வீரபத்திரர் வீதியிலுள்ள காணிக்குள் திடீரென தீப்பற்றியதில் 7 வைக்கோல் கும்பிகள் முற்றாக எரிந்து நாசமாகின. காணியில் குப்பைக்கு வைத்த தீ அருகில் நின்ற வடலியில் பற்றி



அதிலிருந்து பறந்த தீப்பொறி வைக்கோல் கும்பத்தில் விழுந்ததாலேயே இவ்வனர்த்தம் நிகழ்ந்தது. இந்த தீ அனர்த்தத்தால் சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான வைக்கோல் எரிந்து நாசமானது. (படங்கள்:-விஜயவாசன்)



கணித பாட ஆசிரியர்களான வி.குகநாதன் மற்றும் எஸ்.வி.பாலமுரளி ஆகியோரால் எழுதப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கான தரம்-09 கணிதம் நூல் வெளியீடும் அன்பளிப்பும் அண்மையில் கிளிநொச்சி ஓய்வுநிலை அரசாங்க அதிபர் எஸ்.ஸ்ரீனிவாசன் தலைமையில் கரவெட்டி ஸ்ரீ பரமானந்த சிறுவர், முதியோர் இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவின் சிரேஷ்ட ஆலோசகர் சுப்பிரமணியம்-கிருஷ்ணகுமார் நூலை வெளியிட்டு வைப்பதையும் இல்லச் சிறார்களுக்கு நூல் அன்பளிப்பு செய்யப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்
## பழைய மாணவர் சங்க அங்கத்துவம்

கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்துவம் பெற விரும்புபவர்களும், ஏற்கனவே ஆண்டுச் சந்தா செலுத்தி அங்கத்துவம் பெற்றவர்களும் எதிர்வரும் 15.08.2018 ஆம் திகதிக்கு முன் பாடசாலையில் காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்/ புதுப்பித்துக் கொள்ளலாம்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் அங்கத்துவம் பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும் என்பதை அறியத் தருகின்றோம். (சி-3436)

தலைவர்/ செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்.


# இனவாதத்தை தூண்டுபவர்களாக சிறுபான்மையினர் திகழக்கூடாது

## றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இனவாத நடவடிக்கைகளுக்கு தீனிபோடும் சமூகமாக சிறுபான்மையினர் இருக்கக் கூடாது என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித் துள்ளார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "இனங்களுக்கும், மதங்களுக்கும் இடையிலான பிரச்சினைகளானது நாட்டில் தற்போது மலிந்து காணப்படுகின்றன.

இனவாதம் தற்போது ஒரு பேசுபொருளாக மாறியுள்ளது.



எனவே, நாம் இந்த இனவாதத்திற்கு தீனி போடும் சமூகமாக அன்றி, அதனை இல்லாதொழிப்பவர்களாக நாம் திகழவேண்டும்" என மேலும் தெரிவித்தார். (7)

## சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டகூடைப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்த சுற்றுப்போட்டி இன்று மாலை 4.30 மணியளவில் ஜே.டி.பி.ஏ.திடலில் (பழைய பூங்கா வீதி) மாவட்ட கூடைப்பந்தாட்டச்சங்க உபதலைவர் ர.யுவராஜ் தலைமையில் இடம்பெறும்.

இதில்பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, கௌரவ விருந்தினர்களாக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ.சகிலன், ஏ.எஸ்.ரி.பி. நிறுவன முகாமையாளர் ச.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)


## வேலை வாய்ப்பு

இயந்திரம் மூலம் கல் அரியும் நிறுவனத்துக்கு வேலை ஆட்கள் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும். (5254)

தொடர்புகளுக்கு:
077 650 8376,
077 220 9583



## மகாதேவ ஆச்சிரமம்

Regd.No.HA/04/KL02 of 25.11.1980
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.
தொ.இல:021 324 3443,
077 459 4283, 077 431 9281
இலங்கை வங்கி S/AC.82791221
கிளிநொச்சி.

### ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் சமாதித் திருக்கோயில் திருப்பணி.



மெய்யன்பர்களே!

சற்குருநாதனின் சமாதித்திருக்கோயில் 25ஆனி 2018 இல் அடிக்கல் நாட்டப்பட்டு, வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது. சற்குருநாதனின் முதலாம் ஆண்டு குருபூசைக்கு முன்னர் கும்பாபிஷேக நிகழ்வை நடத்த தீர்மானித்துள்ளோம். நிதிவளம் போதாமையால் தங்கள் வசம் நிதிப் பங்களிப்பை நாடியுள்ளோம். தங்களால் இயன்ற நிதிப் பங்களிப்பை, இலங்கை வங்கி ஊடாக அல்லது நேரில் செலுத்தி சற்குருநாதன் திருப்பணியை நிறைவு செய்வீர்களாக.

குருபாதம் பணிந்து குறைகளை போக்குவோம்.

சற்குருநாதன் பணியில்
அறங்காவலர்,
நிர்வாக உறுப்பினர்கள்.
(சி-3364)





11 வது TODAY
## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

செல்வி. ரா.வைஷாலி

திரு.திருமதி.ராஜ்கரன் விஜயலதா தம்பதியரின் செல்வப்புதல்வி வைஷாலி அவர்கள் கடந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் இன்றைய தினம் 11வது பிறந்த தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பல்லாண்டு காலம் சிறப்பாக கல்வியில் உயர்ச்சி பெற்று வாழ வாழ்த்துவோர்:
அப்பப்பா, அப்பம்மா மற்றும் தயா சித்தப்பா,
சித்தி, ஜெயா சித்தப்பா, சித்தி, வைகுந்தன் மாமா, அத்தைமார்
(5280)



# YICSD COLLEGE

YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

4500/= - 30,000/= வரையிலான கட்டணக்கழிவு



### அழகுக்கலை

- Diploma in Beauty Culture & Hairdressing
- Higher Diploma in Beauty Culture & Hairdressing

சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 11.30 am
கிழமை நாள் 20/08/2018 அன்று 11.30 am & 02.00 pm



### கேக் ஐசிங்

- Certificate in Cake Making & Decorating
- Diploma in Cake Making & Decorating
- Higher Diploma in Cake Making & Decorating

கிழமை நாள் 16/08/2018 அன்று 09.30 am & 02.00 pm
சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 09.00 am & 02.00 pm



### தையல்

- Certificate in Saree Blouse
- Diploma in Dress Making (Tailoring)
- Higher Diploma in Dress Making (Tailoring)

சனி, ஞாயிறு 18/08/2018 அன்று 11.30 am & 02.00 pm
கிழமை நாள் 20/08/2018 அன்று 09.00 am

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில் வருகைதரவும்

இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கண்ணாசிட்டி சந்தி Rolex வேதப்பகத்திற்கும் இடையில்)



YARL CITE Powered by RATHAM FOUNDATION

# CENTRE FOR IT EDUCATION
## Job Skills Development & Training

மாணவர்களே! உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

இளஞ்சிறார்களே! 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிந்ததும் தவணை மூன்றைப் பயனுள்ளதாக்குங்கள்.

**English Language & IT Skills Development & Training for Kids**

தகவல் தொழில்நுட்பம் செயன்முறை உட்பட அடிப்படையில் இருந்து மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச, எழுத, வாசிக்க, மற்றும் கேட்கவும் இலகு வழியில் Grammar, Vocabulary& Pronunciation கற்பிக்கப்படும்.

Use interactive learning methodology to learn IT
- Introduction to computer systems
- Introduction to windows operating systems & its applications.
- Word processing & Spread sheets
- Digital drawing & painting.
- Introduction to presentation & publication.
- Introduction to use internet & email.



Use interactive learning methodology to learn English
- Listening, Speaking, Reading & Writing Skills
- Vocabulary, Pronunciation & Grammar.
- Soft skills development.

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.08.2018
வகுப்புக்கள் ஆரம்பம் : 12.08.2018 காலை 10 மணி

தரம் 6 மற்றும் 7இல் ஆங்கில மொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கு விசேடமாக அவர்கள் தமது ஆங்கில அறிவை மேம்படுத்தவும், ஏனைய பாடங்களை ஆங்கிலத்தில் பிழையின்றி கற்றிடவும், அத்துடன் ஆரம்பத்தில் இருந்தே தகவல் தொழில்நுட்பத் துறையில் அறிவினை விருத்தி செய்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு

மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
PHONE: 0212214099 MOBILE: 0772928853, 0702583250.
#125 Main Street, Jaffna. (IOFM Buildings 2nd Floor, near to Courts Complex)

# வடக்கில் 194 பட்டதாரிகளுக்கு இன்று ஆசிரியர் நியமனம்

வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் 2018.06.19 ஆம் திகதி நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த 353 விண்ணப்பதாரர்கள் 2018.07.17, 2018.07.18 ஆம் திகதிகளில் வடமாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையுடன் இணைந்த பிரயோகப் பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள்.

அவர்களில் ஆட்சேர்ப்பு விளம்பரத்திற்கு அமைவாக, தகைமை பெற்றோர் ஆசிரியர் நியமனத்திற்காக 194 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் வைபவம்இன்று 2018.08.05 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொதுநூலக மண்டபத்தில் (Public Library Hall, Jaffna) நடைபெறும். தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர் விபரம் வருமாறு.

திருமதி.சரணிகா சிறிசங்கர்-நல்லூர், துஷிந்தா சண்முகலிங்கம்-உடுவில், தவராசா பார்த்தீபன்-மானிப்பாய், நிரோஜா மகேந்திரராசா-கரவெட்டி, உருத்திர சிவகணேசமூர்த்தி பிரணவதர்சன்-வல்வெட்டித் துறை, சிவச்சந்திரிகா அருள்தாஸ்-கொக்குவில், அனுசா சுந்தரலிங்கம்-கரவெட்டி, வினுஜா வில்வராஜா-ஆனைக்கோட்டை, தர்மிலி யோகேந்திரன்-சண்டிலிப்பாய், தேனுவதனி பாலச்சந்திரன்-கரவெட்டி, லக்சனா தங்கராசா-பருத்தித்துறை, மகிழினி விஜயராசா-இல. 43D,புவனேஸ்வரி அம்பாள் வீதி, இராஜரத்தினம் இறேஷியன்விஜயரத்தினம்-இளவாலை, பாலசூரியன் ஆஹீஷன்-வண்ணார்பண்ணை, தாட்சாயினி பாலச்சந்திரன்-எழுதுமட்டுவாழ், மயூரி ஜெயராஜசிங்கம்-வவுனியா, திருமதி.ராதிகா இரத்தினகுமார்-வவுனியா, ஹீர்த்தனா மணிவர்ணன்-கரவெட்டி, சதானந்தி வேலாயுதம்-வவுனியா, ஜந்தினி தம்பியையா-மருதங்கேணி, தர்ஷா வெற்றிவேல்-தெல்லிப்பழை, கதிர்காமநாதன் வினுஜன்-சாவகச்சேரி, ஞானசேகரன் கஜனன்-சுண்டுக்குளி, இராமநாதன் சுகுமார்-ஏழாலை, ஷசியா சிவபாலராசா-கொடிகாமம், தர்மலிங்கம் தீபன்-அரியாலை, கஜானி அருளானந்தம்-கைதடி, யோகநாதன் கார்த்திபன்-நீர்வேலி, அம்பிகைபாலன் பிறேமபாலன்-மானிப்பாய், டிசானி இர்ாசநாயகம்-சுன்னாகம், தர்சனா புலேந்திரன்-ஆனைக்கோட்டை, புவனேந்திரராசா சிரஞ்ஜீவ்-உடுப்பிட்டி, தனுசியா விக்கினேஸ்வரராசா-குடத்தனை, செல்வராசா துவாரக்ன்-கொக்குவில், கணேசலிங்கம் பிரஷாந்த்-மானிப்பாய், பாத்திமா றிஸ்னா ஜலால்தீன்-வவுனியா, விநாயகமூர்த்தி நிறோஜன்-வயாவிளான், சந்திரகுமார் திலீப்காந்த்-சங்கானை, தர்ஷா கைலாசப்பிள்ளை-கொக்குவில், பிரகாசிறெமி யூலியன் பிகிறாடோ-மன்னார், இருதயநாதன் யேசுராஜ்-மன்னார், சரவணபவன் பிரகலாதன்-செம்பியன்பற்று, குணரட்ணம் சஜீலன்-உரும்பிராய், திருமதி. தனுஜா பிரதீவ்-பருத்தித்துறை, திருமதி.வேஜினியா அன்ரன் தயஸ்-மாதகல், முருகையா சுகந்தன்-கரவெட்டி, திருமதி. நிறோஜினி தேவகருணன்-கரவெட்டி, திருமதி. தயாநிதி நித்தியானந்தன்-கொக்குவில், திருமதி. விஜிதாகார்த்திக்-அல்வாய், அனுசா இரத்தினசாமி-கரவெட்டி, திருமதி. சுஜாதா இளமாறன்-நீர்வேலி, திருமதி. நளாயினி சசிகுமார்-வவுனியா, திருமதி. நர்மதா ஜெஸிந்திரன்-வவுனியா. இதயதர்சினி சுப்பிரமணியம்-வவுனியா, அருந்தஷா முருகதாஸ்-மானிப்பாய், தனபாலசிங்கம் யனோச்-வேலணை, அருளானந்தம் சியாமளன்-கரவெட்டி, நாகேஸ்வரன் திலீபன்-சாவகச்சேரி, சிவபாலு நிசாந்தன்-நல்லூர், திருமதி. உதயநாயகி ஆனந்-தும்பளை, கனகதுர்க்கா கனகறட்ணம்-ஏழாலை, நிதர்சனா கணேசபாதம்-புலோலி, திருமதி. சுசேதா நந்தராஜ்-வயாவிளான், சங்கீதா செல்வராசா-கோப்பாய்,திருமதி. வதனரேகா அஜந்தகுமார்-கரவெட்டி, வரதாஷினி கந்தசாமி-கொடிகாமம், நவரத்தினம் சகிந்தன்-அல்வாய், தெய்வேந்திரம் றஜீவன்-மிருசுவில், மார்க்கண்டபிள்ளை ஜெயகுமார்-வட்டுக்கோட்டை, கஜிபா ஞானசேகரம்-தெல்லிப்பழை, திருமதி. கோகிலா ரங்கநாதன்-ஆழியவளை, ரவிச்சந்திரன் இளங்கேஸ்-ஆழியவளை, பேரம்பலம் விமலராஜன்-வட்டுக்கோட்டை, கேதீஸ்வரதாஸ் கஜவரதன்-பூநகரி, ஜரின் பாமினி பர்னாந்து-கிளிநொச்சி. அபிநயா குலேந்திரன்-கிளிநொச்சி, திருமதி. றஜனி யசோதரன்-கிளிநொச்சி, திருமதி. லலிதா கிருபாகரன்-பளை, ஷாலினி சிவராசா-வரணி, சிவறஜனி பரஞ்சோதி-வல்வெட்டித்துறை, திருமதி. ஜாவானி மயூரன்-சாவகச்சேரி, ரூபனா சின்னத்துரை-கந்தரோடை, திருமதி. பிரியதர்சினி நகுலேஸ்வரன்-ஆனைக்கோட்டை, சிறிஸ்கந்தராசா தர்ஷன்-ஏழாலை, இரத்தினம் ருசிபன்-ஆனைக்கோட்டை, சண்முகம் சிவலோகன்-ஒட்டுசுட்டான், திருமதி. விஜயலதா குகேந்திரன்-ஒட்டுசுட்டான், திருமதி. ஜெகதா விக்கினேஸ்வரன்-முள்ளியவளை, திருமதி. நிசாந்தினி கஜீவன்-மாங்குளம், நிவேதிதா பொன்னம்பலம்-மாதகல், மார்க்கண்டு சிவசோதி-தும்பளை, சாலினி விஜயராசா-அல்வாய், ஜகபர்தீன் முகம்மது அல்றபாயிதீன்-வவுனியா, இராசையா நிறூபன்-வவுனியா, நிரோஷா துரைசிங்கம்-வவுனியா, திருமதி. வித்தியா பிரதாப்-வவுனியா, அஜந்தா பிரான்சிஸ்-மன்னார், சித்தி நஸீஹா முஹம்மது நிஜாம்-மன்னார், தையூப்முகம்மது தன்ஸீம்-மன்னார். திருமதி. வினோஜா அல்டின்ஜச்-மன்னார், திருமதி. அஸ்மியாஉம்மா முஹம்மது பஸ்லி-மன்னார், யோகேஸ்வரி அன்ரன் டயஸ்-மன்னார், விஜீதா லெட்சுமணன்-வவுனியா, கிருஸ்ணராசா சசிரூபன்-வவுனியா, ஐயூப் முஹம்மது இப்றாஸ்-வவுனியா, சோதிலிங்கம் துவாரகன்-வவுனியா, ரவண்யா தங்கவேல்-திருநெல்வேலி, சுரேகா சொக்கலிங்கம்-ஆனைக்கோட்டை, ஜெயதீபா விக்கினேஸ்வரன்-நயினாதீவு, தருமராசா சுதஸ்சன்- அச்சுவேலி, திருமதி.கவிதா அருந்தாகரன்-வல்வெட்டித்துறை, பிரதீபா குலசிங்கம்-யாழ்ப்பாணம், தேவரஞ்ஜினி வேல்முருகன்-நாவற்குழி, திருமதி. வத்ஸலா குகதாஸ்-பருத்தித்துறை, சணடிகா விஜயராஜா-பருத்தித்துறை, யோகேஸ்வரன் பிரதீபன்-எழுதுமட்டுவாழ், ஆறுமுகராசா சுகேந்தன்-சாவகச்சேரி, சிவகாந்தன் தனூஜன் -யாழ்ப்பாணம், தனபாலசிங்கம் மதீசன்-சாவகச்சேரி, சோதிநாதன் பிரசாந்தன்-யாழ்ப்பாணம், நாகராசா சுசீவன்-அல்வாய், துளசிகா சிவசுப்பிரமணியம்-சாவகச்சேரி, அபிராமி மோகனராசலிங்கம்-சாவகச்சேரி, திருமதி. சரினா ஜெகதீஸ்-சித்தன்கேணி, நாகேஸ்வரன் பிரகாஷ்-ஆனைக்கோட்டை, திருமதி. கிஜாந்திவசீகஜன்-வேலணை, சங்கரலிங்கம் ஜனகன்-பருத்தித்துறை, மகாதேவன் விஜீதரன்-கோண்டாவில், சிந்துஜா நவரெட்ணம்-ஆனைக்கோட்டை, கதிரிப்பிள்ளை மதன்-ஏழாலை, ரவிசாந்தி துரைசிங்கம்-சுண்டுக்குளி, திருமதி. கீர்த்தனா அஜந்தன்-வரணி, திருமதி. காந்தரூபி அனுஷானந்தன்-பளை, திருமதி. தீபனா வசிகரன்-கிளிநெச்சி, சுகந்தினி சண்முகம்-பளை, கேதீஸ்வரநாதன் ஜனகசிவசுதன்-பளை, தில்லைநாயகம் சதீஸ்-கிளிநொச்சி, மெறின் சுகந்தினி அம்புறோஸ்-கிளிநொச்சி, மாணிக்கம் சிவரூபன்-ஒட்டுசுட்டான், சுவேதகி அருமைநாயகம்-மாங்குளம், திருமதி. சுகந்தினி முராரி-முள்ளியவளை, திருமதி. ஹேமா சிவவைகுந்தராஜா-முல்லைத்தீவு, திருமதி. நிரோசிகா மயூரன்-தெல்லிப்பழை, கோமதி மோகனதாஸ்-சாவகச்சேரி, கேதாரம் ஜிந்தீசன்-வவுனியா,கந்தசாமி மோகிலன்-முல்லைத்தீவு, யோர்கரூபிணி சிவபாலன்-வவுனியா, துரைராஜா அர்ஜன்-சாவகச்சேரி, திருமதி. நிரோஜா குகதீசன்-அச்சுவேலி, திவ்வியா பாலசுப்பிரமணியம்-அளவெட்டி, சிதாறா பர்வின் முஹம்மது சித்தீக்-மன்னார்.திருமதி. அஸ்மியா முஹம்மது றம்சீன்-மன்னார், றாசிகா சிவஞானம்-அச்சுவேலி, திருமதி. நவநிதி சாந்தகுமார்-கொடிகாமம், திருமதி. தயாபரி கிரிதரன்-யாழ்ப்பாணம், இராசேஸ்வரன் ஸ்ரீகரன்-பருத்தித்துறை, கலையரஜி சிவபாதசுந்தரம்பிள்ளை-புலோலி, சண்முகநாதன் கலைறஞ்சன்-வல்வெட்டித்துறை, ரஜிதா இரத்தினராசா-வல்வெட்டித்துறை, கிருஷாஜினி செல்வச்சந்திரன்-வரணி, திருமதி. உதயராணி செந்தூரன் பருத்தித்துறை, தங்கராசா விமலரூபன்-சுன்னாகம், திருமதி. நிரோஜனி பாலதரன்-அல்வாய், காஞ்சனா நவரத்தினம்-குடத்தனை, லோகேஸ்வரி கதிராமன்-நயினாதீவு, தேவராசா ஹெறன்ஸ்மன்-சித்தன்கேணி, திருமதி. கர்சினி சிவகுமார்-கோப்பாய், மதனகா தனபாலசிங்கம்-புத்தூர், தம்பிராசா வைஷ்ணவன்-வல்வெட்டித்துறை, கந்தலிங்கம் சிவகிருஸ்ணன்-ஏழாலை, திருமதி. சாந்தபற்றீசியா வசந்-கிளிநொச்சி, மரியசேகரன் ஜனிஸ்ரன்-கிளிநொச்சி, தனுசாந்தி யோகராசா-பளை, யோகராசா உதயணன்-கிளிநொச்சி, குமாரசாமி பிறேம்குமார்-கிளிநொச்சி, தர்ஸ்சிகா செல்வராசா-மல்லாகம், றஹீம் முஹமட் றிப்கான்-முள்ளியவளை, திருமதி. பிரசாந்தி சிவகுமார்-புதுக்குடியிருப்பு, முகம்மது றசீது முகம்மது பைறூஸ்-முள்ளியவளை, பாத்திமா ஜெரீனா இப்றாகீம்-முல்லைத்தீவு, திருமதி. சுபா திலகநாதன்-வவுனியா, றாஷிதா செயினுலாப்தீன்-வவுனியா, பாத்திமா மனால் ஐயூப்-வவுனியா, நிரோஜா பரமசிவம்-வவுனியா, அகமது லெவ்வை இர்பான்-வவுனியா, திருமதி. கிரிஷாந்தி சிவகாந்தன்-வவுனியா, திருமதி. அஜந்தா மேரிபங்கயற்செல்வன்-ஆனைப்பந்தி, ஷர்மினா பாறூக்-வவுனியா, திருமதி. முபஸ்ஸிலா முகம்மது அர்சத்-மன்னார், ஜெயப்பிருந்தா மோசேஸ்-மன்னார், பதியு தீன் முகம்மது அஷ்றார்-மன்னார், தமிழினியாள் திருச்செல்வம்-மன்னார், அமிர்தநாயகம் யூட்டின் ராஜ்-மன்னார், பிரான்சீஸ் சேவியர் யூட் தவராஜா-மன்னார்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.08 05

❖ 1100 - இங்கிலாந்து மன்னனாக முதலாம் ஹென்றி முடி சூடினான்.
❖ 1806 - இலங்கையில் முகமதியர்களுக்கான திருமணச் சட்ட விதிகள் அரசியல் நிர்ணய சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
❖ 1914 - ஐக்கிய அமெரிக்காவும் பனாமாவும் கூட்டாக பனாமாக் கால்வாய் ஒப்பந்தத்தைல் கைச்சாத்திட்டன.
❖ 1949 - எக்குவாடோரில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 6000 பேர் கொல்லப்பட்டனர். 50 நகரங்கள் அழிந்தன.
❖ 2006 - வறுமைக்கு எதிரான அமைப்பின் (Action Fiam) என்ற அரச சார்பற்ற அமைப்பின் 15 பணியாளர்கள் மூதூரில் (ஓகஸ்ட் 4 நள்ளிரவில்) இலங்கை இராணுவம் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

❖ 1898 - கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, தமிழக கருநாடக வயலின் இசைக்கலைஞர் (இ. 1970)
❖ 1905 - மு. அ. முத்தையா செட்டியார், தமிழக அரசியல்வாதி, சமூக சேவகர் (இ. 1984)
❖ 1908 - ஹரல்ட் ஹோல்ட், ஆத்திரேலியாவின் 17 ஆவது பிரதமர் (இ. 1967)
❖ 1915 - ஹரி கிருஷ்ண கோனார், மேற்கு வங்க அரசியல்வாதி (இ. 1974)
❖ 1923 - தேவன் நாயர், சிங்கப்பூரின் 3 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 2005)
❖ 1926 - சோ. அழகர்சாமி, தமிழக அரசியல்வாதி (இ. 2009)
❖ 1927 - ஜே. பி. சந்திரபாபு, தமிழக நகைச்சுவை நடிகர், பாடகர் (இ. 1974)
❖ 1930 - நீல் ஆம்ஸ்ட்றோங், அமெரிக்க விண்வெளி வீரர் (இ. 2012)
❖ 1931 - பாப்பா உமாநாத், இந்திய இடதுசாரி அரசியல்வாதி (இ. 2010)
❖ 1934 - கே. பாலாஜி, திரைப்பட நடிகர் மற்றும் தயாரிப்பாளர் (இ. 2009)
❖ 1968 - நளாயினி தாமரைச்செல்வன், ஈழத்து எழுத்தாளர்
❖ 1974 - கஜோல், இந்திய நடிகை
❖ 1987 - ஜெனிலியா, இந்திய நடிகை

### இறப்புகள்

❖ 1971 - கே. ஆர். ராமசாமி, தமிழக நாடக, திரைப்பட நடிகர், பாடகர்
❖ 2001 - அரசு மணிமேகலை, தமிழக எழுத்தாளர் (பி. 1945)

### சிறப்பு நாள்

❖ வெற்றி நாள் (குரோவாசியா)
❖ விடுதலை நாள் (புர்க்கினா பாசோ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 80 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 280 | 400 | 250 | 220 | 400 | 200 |
| தக்காளி | 100 | 100 | 100 | 90 | 100 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 150 | 140 | 170 | 100 | 200 | 180 |
| கரட் | 200 | 340 | 300 | 220 | 300 | 400 |
| பூசணி | 80 | 80 | 70 | 40 | 80 | 100 |
| புடோல் | 50 | 60 | 60 | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 70 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 100 | 100 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 110 | 95 | 120 | 110 |
| பாகற்காய் | 200 | 120 | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 30 | 60 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 60 | 120 | 60 | 40 | 80 | 50 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 | 90 | 120 | 180 |
| பீற்றூட் | 150 | 180 | 120 | 100 | 140 | 140 |
| கறிமிளகாய் | 200 | 300 | 300 | 240 | 200 | 400 |
| முருங்கைக்காய் | 50 | 100 | 80 | 60 | 80 | 30 |
| போஞ்சி | 200 | 200 | 250 | 260 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | -- | 50 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 40 | 30 | 30 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 | 40 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 50 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 150 | 160 | 180 | 130 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 100 | 90 | 200 | 100 |
| முள்ளங்கி | 50 | 40 | 60 | 40 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 40 | 120 | 60 | 40 |

# பசுவதைக்கு எதிராக கண்டனப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

பசுவதைக்கு எதிராக ராமநாம அமைப்பினால் நேற்றுக்காலை மருதனார் மடம் பகுதியில் கண்டனப் போராட்டம் இடம்பெற்றது.

இதேவேளை பசுவை இறைச்சிக்காகக் கொல்பவர்களின் தகவல்களை அறியத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும் எனவும் யாழ்.கிருஷ்ணா ஆலயம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில், வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் க.தர்சன், விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலான சுதந்திரக் கட்சி பிரதேச சபை உறுப்பினர்களான துவாரகன், அபிராமி, அனுசாவதி மற்றும் வலிகாமம் இணைப்பாளர் ஞானசீலன், சமூக ஆர்வலர் கின்ஸ்லி ஆகியோரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் இணைந்திருந்தனர்.

தற்காப்பற்ற மிருகங்களை நூற்றுக்கணக்கில் கொன்றால் தான் பட்டினி இருப்பதைத் தடுக்க முடியும் என்பது உண்மையல்ல.

மிருகங்களைக் கொல்பவன் அடுத்த பிறவியில் மிருகமாகப் பிறந்து அவன் கொன்ற அதே மிருகத்தினால் கொல்லப்படுவான் என்பது கர்ம விதி எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டிருந்தனர். (இ-101)

## மாகாணத் தேர்தலை பழைய முறைமையில் நடத்துவதானாலும் புதிய சட்டம் தேவை

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவதென இதுவரையில் தீர்மானம் இல்லையெனவும் பழைய முறையில் நடத்துவதாக இருந்தாலும் புதிதாக சட்டமூலம் ஒன்றை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும்தேர்தல்கள்ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை இவ்வருடத்தில் நடத்துவதற்கு முடியாது. புதிய சட்டமூலம் ஒன்றினால் பழைய முறைமையை மீண்டும் சட்டமாக்கினால் மட்டுமே அது முடியும்.



புதிய தேர்தல் முறைமை தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், நடைமுறையில் இருந்து வந்த பழைய தேர்தல் முறைமை குறித்த 1988 ஆம் இலக்க 2 ஆம் பிரிவு நீக்கப்படுகின்றது.

இதனால், மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையில் நடத்துவதிலும் சிக்கல் காணப்படுகின்றது. புதிய முறைமையில் நடத்துவதானால், எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியொன்றிலேயே இதனைத் தெரிவித்தார். (7)

## சம்பள உயர்வை ஏற்க முடியாது

### வாசுதேவ எதிர்ப்பு



(கொழும்பு)

பொதுமக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்ற நிலையில் ஆட்சியினை தக்க வைத்துக் கொள்ள அமைச்சர்களுக்கு சலுகைகளை அதிகரிப்பது என்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்க விடயம் என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாடு இன்று பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று குறிப்பிட்டே தேசிய அரசாங்கம்தேசிய வளங்களை பிற நாட்டு முதலீட்டாளர்களுக்கு தாரை வார்த்துக் கொடுக்கின்றது.

ஆனால் மறுபுறம் அமைச்சர்களுக்கு மாதக் கொடுப்பனவுகளை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. தற்போது அமைச்சுப் பதவிகளில் இருப்பவர்கள் ஏழ்மையான வாழ்க்கையினை வாழ்பவர்கள் அல்லர். அனைவரும் செல்வந்தர்களாகவே காணப்படுகின்றனர். ஆகவே இவர்களுக்கான சம்பள உயர்வு தேவையற்றதாகும்.

அமைச்சர்களின் சம்பள உயர்வு காரணமாக பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள். மக்களின் மீதான வரிச்சுமை அதிகரிக்கும். தற்போது அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாக மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல குடும்பங்கள் பாரிய இன்னல்களை அனுபவித்து தற்கொலையினை செய்து கொண்டுள்ளனர். மறுபுறம் சம்பள உயர்வு கோரி அனைத்து துறைசார் உறுப்பினர்களும் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இவற்றிற்கு எல்லாம் அரசாங்கம் தீர்வு வழங்காமல் சொகுசு வாழ்க்கை வாழும் அமைச்சர்களின் வாழ்க்கையினை மேலும் மேம்படுத்தும் வகையில் சம்பள உயர்வானது மக்களுக்கு இழைக்கும் துரோகமாகவே காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கோத்தபாய தலைமையில் ராஜபக்ஷவினர் மந்திராலோசனை



Namal Rajapaksa
@RajapaksaNamal

Met with the extraordinary @ViyathmagaSL community to discuss the many issues professionals in #lka face as a result of unplanned Gov policies. In-depth insights shared by @GotabayaR @ShehanSema @GodahewaNalaka @Rohitha_Chichi on the way forward & in the planning of ජන බලය කොළඹට

7:40 PM - Aug 3, 2018

62 · 17 people are talking about this



Gotabaya Rajapaksa
@GotabayaR

Members of Parliament from the JO including Hon Bandula Gunawardena, Hon Keheliya Rambukwella, Mr. Namal Rajapaksa, Mr. Shehan Semasinghe etc., met members of the Viyathmaga Executive Committee for a discussion on the current economic and social disasters faced by the country.

8:33 AM - Aug 4, 2018

43 · See Gotabaya Rajapaksa's other Tweets

(கொழும்பு)

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து கூட்டு எதிர்க்கட்சியின் பல முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் வியத்கம என்ற அமைப்பினால் இந்த கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதில், கோத்தபாய ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, ரோஹித ராஜபக்ஷ, பந்துல குணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல, செஹான் சமரசிங்க உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், இந்த சந்திப்பு குறித்து நாமல் ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ இருவரும் தமது டுவிட்டர் பக்கத்தில் புகைப்படங்களுடன் பதிவிட்டுள்ளனர்.

இதில், அரசாங்கத்தின் திட்டமிடப்படாத நடவடிக்கைகளால் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள், மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினைகள் மற்றும் சமூக பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அரசாங்கத்திற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி நடத்தியிருந்த மாபெரும் போராட்டத்திற்கு அடுத்ததாக இந்த கூட்டம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அரச வைத்திய அதிகாரிகளின் வேலை நிறுத்தம் நிறைவு

(கொழும்பு)

சிங்கப்பூருடனான வர்த்தக உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதால் நாட்டு மக்கள் மீது மேலும் வரி சுமத்தப்படும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த உடன்படிக்கை ஊடாக நாட்டிற்குள் பல்வேறு நெருக்கடி நிலை ஏற்படும் என்று அந்த சங்கத்தின் பதுளை மாவட்ட தலைவர் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை அரச வைத்திய அதிகாரிகளால் நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பரந்தளவிலான வேலை நிறுத்தம் நேற்றுக்காலை 8 மணியுடன் நிறைவுக்கு வந்தது.

சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கையெழுத்திடுதல், அடிப்படை சம்பளங்களை உயர்த்துதல், வைத்தியர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைகளை பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகள் வேலை நிறுத்தத்திற்கு காரணமாகும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (7)

## பணம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் வீடு ஒன்றில் சிறுதொகை பணம் திருட்டுப் போயுள்ளதாக வீட்டு உரிமையாளர் யோகநாதன் பூசனாதேவி கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள வீட்டில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த போது சமையலறையின் பின்புறமாக வைக்கப்பட்டிருந்த யன்னல் கதவு பலகைகளை கழற்றி வீட்டினுள் உட்புகுந்த திருடர்கள் சுவாமி அறையில் வைக்கப்பட்டிருந்த அலுமாரியில் பணத்தை திருடிச் சென்றுள்ளனர். (இ-7)

# எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு தினேஷை நியமிப்பதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைமைப் பதவி கூட்டு எதிர்க்கட்சிக்கு வழங்கப்படுமிடத்து அப்பதவியில் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவராகச் செயற்படும் தினேஷ் குணவர்த்தனவை நியமிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு பத்தரமுல்லையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டு எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைமை வழங்கப்படுமாக இருந்தால் அப்பதவிக்கு கூட்டு எதிர்க்கட்சியின் தலைவராகச் செயற்படும் தினேஷ் குணவர்த்தனவை நியமிக்க கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

எமது தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே உள்ளார். ஆகவே அவர் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சித் தலைமையை ஏற்காத சந்தர்ப்பத்தில் தினேஷ் குணவர்த்தனவே அப்பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார்.



எனவே கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அது குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கிணங்கவே தினேஷ் குணவர்த்தனவிற்கு எதிர்க்கட்சித் தலைமை வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (7)

# கலாசாரப் பேரவைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையின் 2018 ஆம் ஆண்டுக்குரிய பொதுக் கூட்டம் 10.08.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலரும் பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமாகிய திருமதி எ.அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுச்சபை உறுப்பினர்களையும் அன்றைய தினம் தவறாது கலந்து கொள்ளும்படி பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (இ

# "கலைஞானச் சுடர்" விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வருடந்தோறும் வழங்கப்பட்டு வரும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான "கலைஞானச்சுடர்" விருதுக்கு தகுதியான கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் 17.08.2018 இற்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்படும் என நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் தெரிவித்துள்ளார். (இ

# சுயாதீனமாக தீர்மானங்கள் எடுக்க முடியாததால் நான் பதவி விலகினேன்

(கொழும்பு)

இலங்கை வைத்திய சபையின் யாப்புக்கு அமைவாக சுயாதீனமாக தீர்மானங்கள் எடுக்க முடியாமை காரணமாக தான் தலைவர் பதவியில் இருந்து விலகியதாக அதன் முன்னாள் தலைவர் பேராசிரியர் கொல்வின் குணரத்ன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு இந்த விடயத்தை அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை வைத்திய சபையின் யாப்பு காலத்துக்கேற்ற வகையில் மாற்றமடையாமை இந்த நிலை ஏற்படுவதற்கான முதன்மை காரணம் என்றும் தெரிவித்த அவர்,



இதேவேளை நோயாளர் ஒருவருக்கு ஏற்படுகின்ற அநியாயத்தின் காரணமாக வைத்தியர் ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கை வைத்திய சபையால் விசாரிக்கப்படும் போது நியாயமான தீர்வொன்றை எதிர்பார்க்க முடியாத நிலை எழுந்துள்ளதாக மேலும் தெரிவித்தார். (7)

# அமெரிக்க அரசியல் கட்சி பணிப்பாளர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்க தேசிய ஜனநாயக நிறுவனத்தின் அரசியல் கட்சி நிகழ்ச்சிகளின் பணிப்பாளர் அய்வன் டோஹெர்டி நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ஹக்கீமை சந்தித்தார்.

அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.



இலங்கையின் சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் அமெரிக்க பிரதிநிதிகள் அமைச்சருடன் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.(7)

# தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இலவசமாகக் கைத்தொலைபேசி திருத்துதல், LED பல்ப் தயாரித்தல் மற்றும் கண் காணிப்பு கமரா பொருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் எதிர்வரும் 14.08.2018 தொடக்கம் கோப்பாய் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் நடைபெறவுள்ளன.

ஆர்வமுள்ள சுயதொழில் முயற்சியாளர்கள் மேற்படி பயிற்சியில் கலந்து பயன் பெறும் முகமாக பதிவினை மானிப்பாய் வீதி கோப்பாயில் அமைந்துள்ள பிரதேச செயலக விதாதா வளநிலையத்தில் மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.

பதிவினை மேற்கொள்ள தொடர்பு இலக்கம் 077 935 2827 என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# நடைமுறை விடயங்கள் & புள்ளிவிபரங்கள் நூல்

## - ஒரு நோக்கு -




ஆசிரியர் வே.கருணாகரன் பொருளியல் பாடத்தைக் கற்பிப்பதிலும் அது தொடர்பான நூல்களை வெளியிடுவதிலும் நீண்ட அனுபவமுள்ளவர். பொருளியல் சிறப்பு பட்டதாரியான வே.கருணாகரன் 30 வருடங்களுக்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவம் உள்ளவர்.

க.பொ.த உயர்தர பொருளியல் பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஏராளமான நூல்களை மாணவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ளும் வகையிலும் பரீட்சையில் உயர் புள்ளியைப் பெறக்கூடிய வகையிலும் வெளியிட்டுள்ளார்.

அவ்வகையில் 'நடைமுறை விடயங்கள் மற்றும் புள்ளிவிபரங்கள்' எனும் தலைப்பில் ஆசிரியரால் அண்மையில் வெளியிடப்பட்ட நூல் பொருளியலைக் கற்கும் மாணவர்களுக்கும் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாக அமைந்துள்ளது.

நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கான குறிக்கோள்கள், சனத்தொகை தொடர்பான விடயங்கள், வறுமைச் சுட்டெண் தொடர்பான விடயங்கள், வரவு-செலவுத்திட்டம், இறை விதிமுறைகள், அரசின் பொருளாதார தொழிற்பாடுகள், புதுப்பிக்கக்கூடிய வளங்கள், நாணயக் கொள்கைச் சட்டத்தின் மாற்றங்கள், இலங்கையின் ஏற்றுமதி போன்ற பல விடயங்கள் தெளிவாக ஆசிரியரால் எழுதப்பட்டுள்ளன.

அத்தோடு அண்மைக்காலப் பொருளாதார விடயங்கள் தொடர்பான புள்ளி விபரங்களையும் தொகுத்து வழங்கியுள்ளார். இந்நூலானது உயர்தர பொருளியல் மாணவர்களை இலக்காகக் கொண்டு எளிய முறையில் இலகுவாகக் கற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஆசிரியரால் எழுதப்பட்டமை சிறப்புக்குரியதாகும்.

**கலாநிதி சி.விஜயகுமார்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**பொருளியல் துறை,**
**யாழ்ப்பாணம்.**

# சிறுவர்களுக்கான நடமாடும் சேவை



(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 35 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளன. இதில் பிறப்பு பதிவற்ற சிறுவர்களுக்கான நடமாடும் சேவை கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது.

கே.என்.எச் மற்றும் சி.சி.எச் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு ஊடாக நடைபெற்ற குறித்த நடமாடும் சேவையில் இதுவரை பிறப்பு சான்றிதழ் பெற்றிராத பல சிறுவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் பதியப்படாத விவாகப் பதிவுகளும் இறப்பு பதிவுகளும் பதியப்பட்டு அதற்கான ஆவணங்கள் வழங்கப்பட்டன.



இதில் உதவி பிரதேச செயலர், உதவி பதிவாளர் நாயகம், மேலதிக மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள், ஏனைய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சி.சி.எச் நிறுவன உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்குபற்றினர். (இ-9-101)

# சம்பள அதிகரிப்புக்கு உள்ளார்ந்த விருப்பம்

## குமார வெல்கம



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோரின் சம்பள அதிகரிப்புக்கு பாராளுமன்றத்திலுள்ள அனைவரும் மனதளவில் உண்மையிலேயே விருப்பமுடன் காணப்படுவதாக கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆளும் கட்சியிலும், எதிர்க் கட்சியிலும் உள்ளவர்கள் பகட்டுத்தனமாக உள்ளொன்று வைத்துக் கொண்டு வெளியில் சம்பள அதிகரிப்பை விரும்பாதவர்கள் போன்று ஊடகங்களின் முன்னால் கருத்துத் தெரிவித்து வருகின்றார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரோஹித வெளிநாடு செல்ல அனுமதி



(கொழும்பு)

சட்டத்துக்குப் புறம்பான வகையில் சொத்துக்களைச் சேர்த்த குற்றம் சுமத்தப்பட்டுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவுக்கு வெளிநாடு செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரத்ன முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தனிப்பட்ட விஜயமாக ஜப்பானுக்கு செல்ல வேண்டி உள்ளதால் அனுமதி வழங்குமாறு ரோஹித அபேகுணவர்தனவின் சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார். அதன்படி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை அவருக்கு வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கி நீதிபதி உத்தர விட்டதுடன், நீதிமன்றத்தின் பொறுப்பில் உள்ள அவரது கடவுச் சீட்டை விடுவிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# உயர்தரப் பரீட்சை, புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு ஓர் விசேட சலுகை அமுல்

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்களுக்காக 770 சிசுசெரிய பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் முடிவடையும் வரை இந்த பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

மேலும், இந்த பேருந்து சேவையில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்பட்டால் 011 755 5555 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்யமுடியும் எனவும் இலங்கை போக்குவரத்து சபை மேலும் தெரிவித்துள்ளது. (7)

# அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் இதுவரை எடுக்கவில்லை

## சபாநாயகர் ஊடகப் பிரிவு விளக்கம்



(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிப்பது தொடர்பில் எந்தவொரு இறுதித் தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை. மக்கள் பிரதிநிதிகளின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக கிடைக்கப்பெற்ற கோரிக்கையை ஆராய்ந்து பார்க்குமாறு சபாநாயகர் கரு ஜெயசூரிய பாராளுமன்ற செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக சபாநாயகரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாராளுமன்றத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நீதிமன்ற உயர் நீதிபதிகளின் சம்பள உயர்வுக்கு சமாந்தரமாக அமைச்சர்களினதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன்படி நீதிபதி, நீதியரசர்களின் சம்பளம் அண்மையில் அதிகரிக்கப்பட்டமையையடுத்து அமைச்சர்களின், பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக செய்தி வெளியிடப்பட்டது.

ஆகவே அமைச்சர்களின், பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிப்பது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை.

மக்கள் பிரதிநிதிகளின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக கிடைக்கப் பெற்ற கோரிக்கையை ஆராய்ந்து பார்க்குமாறு பாராளுமன்ற செயலாளரிடம் சபாநாயகர் கரு ஜெயசூரிய ஆலோசனை வழங்கியுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கூட்டு எதிர்க்கட்சி தொடர்பான இறுதித் தீர்மானம் செவ்வாய்க்கிழமை



(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியை உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக ஏற்றுக்கொள்வதா, இல்லையா? என்பது குறித்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சபாநாயகர் தீர்மானிக்கவுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உத்தியோகபூர்வ எதிர்க்கட்சித் தலைமை கூட்டு எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் சபாநாயகரிடம் எழுத்து மூலமான கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே அது குறித்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தீர்மானிக்கவுள்ளதாக சபாநாயகர் கருஜெயசூரிய கூட்டு எதிர்க்கட்சியிடம் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (7)

# கோத்தபாயவை 7 ஆம் திகதி மன்றில் ஆஜராக உத்தரவு



(கொழும்பு)

தங்கல்லை வீரக்கெட்டிய மெதமுலன டீ.ஏ. ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை என்பவற்றை அமைப்பதற்கு அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணை பற்றிய நீதிமன்ற அறிவிப்பு கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட ஏழு பேரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக நிதி மோசடி தொடர்பான விசாரணைப் பிரிவு அறிவித்துள்ளது.

இவர்களுக்கு நாளை மறுதினம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நெரஞ்சலாடி சில்வா இந்த அறிவிப்பைப் பிறப்பித்துள்ளார். (இ-7)

# வாழ்க்கைச்செலவு உயர்ந்துள்ள நிலையில் அமைச்சர்களுக்கு சம்பள அதிகரிப்பா?

## பிரதியமைச்சர் அஜித் பெரேரா எதிர்ப்பு



(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளும் யோசனைக்கு, தான் முற்றாக எதிர்ப்புத் தெரிவிப்பதாக பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்தார்.

நாடு செலுத்த வேண்டிய கடன் சுமைகளுக்காக மக்கள் மீது வரிச் சுமைகள் அதிகரித்துள்ள நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு தற்போதைய சூழ்நிலையில் அவசியமற்ற ஒன்று எனவும் பிரதி அமைச்சர் நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு எதிர்ப்பு வெளியிட்டார்.

இதேவேளை, நிதி அமைச்சர் மங்கள சமரவீரவும் இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

இந்தப் பிரேரணை நிதி அமைச்சரின் ஊடாகவே பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இருப்பினும், நிதி அமைச்சர் இதற்கு எதிராக இருப்பதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# போதைப்பொருள் வியாபாரத்துக்கு புகலிடம் வழங்குபவர்களுக்கு தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய மக்கள் பிரதிநிதிகளை அந்தப் பதவிகளிலிருந்து நீக்கிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா ராமஞ்ஞா பீடத்தின் தென்னிலங்கைக்கான தலைமைப் பிக்கு ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் வியாபாரத்திலுள்ளவர்களுக்கு அரசியல் புகலிடம் வழங்கி பாதுகாப்பும் பெற்றுக் கொடுக்கும் எம்.பிக்கள் தொடர்பில் ஊடகங்கள் நிகழ்ச்சிகளை நடத்தும் போது ஊடகவியலாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது.

குறித்த நிகழ்ச்சியில் தங்களுக்கு பாதிப்புக்கள் இருந்தால் சட்ட நடவடிக்கை மூலமே அதனை அணுக வேண்டும். மாறாக, எச்சரிக்கை விடுப்பது ஆபத்தான ஒன்றாகும் என தெரிவித்தார். (7)

# மக்களுக்கு வரிச்சுமை, அமைச்சர்களுக்கு சம்பள அதிகரிப்பு, இதுதான் மாற்றம்-பசில்

(கொழும்பு)


நல்லாட்சி அரசாங்கம் நாட்டிலுள்ள பொது மக்களிடம் வரியை அதிகப்படுத்தி, பாராளுமன்றத்திலுள்ளவர்களினதும், அமைச்சர்களினதும் சம்பளத்தை அதிகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதுவா? மக்கள் எதிர்பார்த்த மாற்றம் எனவும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கேள்வி யெழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற கூட்டமொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)







கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொறியியல் பீட மற்றும் மாணவர்கள் விடுதி ஆகிய கட்டடத்தொகுதிகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார். கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் சுமார் இரண்டாயிரத்து நூறு மில்லியன் ரூபா செலவில் பொறியியல் பீடத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட பத்துக்கட்டடங்களையும் ஆண்,பெண் மாணவர்களுக்கான விடுதித் தொகுதிகள், விரிவுரையாளர்களுக்கான அலுவலகம் என்பவற்றை நேற்று முற்பகல் 11 மணியளவில் திறந்து வைத்துள்ளார். இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி.விஜயகலா மகேஸ்வரன், ரி.சித்தாத்தன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்கள், பல்கலைக்கழக விரைவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:- கண்டாவளை செய்தியாளர்)

# 'செமட்ட செவண' தேசிய வீடமைத்திட்டத்தின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள செல்வபுரம் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் "செமட்ட செவண" எனும் தேசிய வீடமைப்புத் திட்டத்தில் அமைக்கப்பட்ட 30 வீடுகளைக் கொண்ட 101 ஆவது மாதிரிக் கிராமத்தின் வீடுகளை சம்பிரதாய பூர்வமாக பயனாளிகளிடம் தேசிய வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ கையளித்துள்ளார்.

இந் நிகழ்வு நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

செல்வபுரம் கிராமத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் 1980 ஆம் ஆண்டு "கம் உதவ" தேசிய வீடமைப்பு திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்டு வன்னியில் நடை பெற்ற யுத்த சூழ்நிலைகளால் அழிவடைந்துள்ள மாதிரிக் கிராமத்தில் மீண்டும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் மகனான சஜித் பிரேமதாஸவின் "செமட்ட செவண" எனும் தேசிய வீடமைப்பு திட்டத்தின் ஊடாக 30 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமம் மீண்டும் உருவாக்கப்பட்டு அதனை சம்பிரதாயபூர்வமாக பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.




இந்த வீடுகள் காணிகள் இல்லாத மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு அமைச்சர் சஜித் பிரேமதாஸ சம்பிரதாயபூர்வமாக நேற்று கையளித்துள்ளார்.

இந் நிகழ்வின் போது 30 வீட்டு உரிமையாளர்களுக்கு வீடுகளுக்கான உரிமைப் பத்திரமும் வழங்கப்பட்டதுடன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் "விசிறி" திட்டத்தின் ஊடாக 145 பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் 145 இலட்சம் ரூபா கடன்களுக்கான காசோலைகளையும் மற்றும் "சில்ப சவிய" தொழில் பயிற்சித் திட்டத்தின் ஊடாக பயிற்சி நெறிகளை நிறைவு செய்த 175 பயிற்சியாளர்களுக்கு தொழில் உபகரணங்களும் கண்பார்வை குறைபாடுடைய பொருளாதார ரீதியாக பின்தங்கிய 300 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளையும் இதனைவிட பல்வேறு திட்டங்கள் ஊடாக 200 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு வீடமைப்பதற்கான கடன் பண காசோலைகளையும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ வழங்கி வைத்துள்ளார்.

இதில் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வைத்திய கலாநிதி சி.சிவமோகன், வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வல்லிபுரம் - கமலேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் விஜித கமகே, அதிகாரிகள், பயனாளிகள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்களும் கலந்து சிறப்பித்துள்ளார்கள். (2-15)



## மீனவர்கள் பிரச்சினைகள் குறித்து ஆராய வருகிறார் நீரியல்வளத்துறை அமைச்சர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் பிரச்சினையை ஆராய எதிர்வரும் 8 ஆம் திகதி எதிர்க்கட்சி தலைவர் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அமைச்சர் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் குறிப்பாக சுருக்குவலை மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் ஏனைய கடற்றொழிலாளர்களுக்கிடையில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டமொன்றை எதிர்வரும் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அலுவலக மண்டத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்கு கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் விஜித் விஜித முனி சொய்சா, எதிர்க்கட்சி தலைவர் .இரா.சம்பந்தன் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும் இதில் மீனவ அமைப்புக்களைச் சார்ந்த 10 பிரதிநிதிகளை கலந்துகொள்ள ஏற்பாடு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்று உரிய தீர்மானம் எடுக்கும் வரை மீனவர்களிடையே காணப்படும் சுருக்குவலை மீன்பிடி முறையைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு தகுந்த நடவடிக்கையை உடனடியாக எடுக்குமாறும் கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

## வலைகள் தீயிட்டு எரிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தில் தேசிய நீர உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையினரால் கடந்த சில வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகள் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நீதிமன்ற உத்தரவிற்கமைய வவுனியா மாவட்ட நீரஉயிரினச்செய்கை உத்தியோகத்தர் யோ.நிசாந்தன் தலைமையில் தீயிட்டு எரிக்கப்பட்டன.

மாமடு, வவுனியாகுளம், பாவற்குளம், மடுக்கந்தை ஆகிய பிரதேசங்களிலிருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 15 இலட்சம் பெறுமதியான வலைகளே தீயிட்டு எரிக்கப்பட்டன. கடந்த சில வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது 15 நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சட்டவிரோத தங்கூசி வலைகள் தீயிட்டு எரிக்கும் சம்பவத்தில் வவுனியா மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர், வவுனியா மாவட்டங்களுக்கான மாவட்ட நீர் உயிரினச் செய்கை உத்தியோகத்தர்கள், மீனவர்கள், மாவட்ட செயலகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்
கல்வி என்னும் தொல்கடல் பிழைத்தும்...
~ கீர்த்தித் திருவகவல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நெருப்பாற்றைக் கடக்கின்ற நீச்சலாகிப் போயிற்றோ!

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடைபெறுகின்றது.

இப் பரீட்சைக்கு தோற்றுகின்ற அத்தனை மாணவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை என்பது தனித்து மாணவர்களுக்கு மட்டுமல்ல. பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் என்ற தரப்பினருக்கும் இந்தப் பரீட்சை சவாலாக அமைந்து விடுகின்றது.

என் பிள்ளை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதை ஒரு பெரும் தோல்வியாக நினைக்கின்ற மனநிலைக்குப் பெற்றோர்கள் ஆளாகிவிட்டனர்.

இவ்வாறு ஏதோ பெரும் தோல்வியைச் சந்தித்து விட்டதாகப் பெற்றோர்கள் நினைப்பது சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் எதிர்காலத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்த்தல் கட்டாயமானதாகும்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் என் பிள்ளை கல்வியில் சாதனை படைப்பான் என்ற நம்பிக்கை எந்தப் பெற்றோரிடம் இருக்கிறதோ அந்தப் பெற்றோர்கள் நிச்சயம் தம் பிள்ளைகளை ஆளுமைமிக்கவர்களாக கல்வியில் சிறந்தவர்களாக ஆக்கிக் கொள்வர் என்பதே உண்மை.

ஆக, தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை என்பது ஏழை மாணவர்கள் நிதி உதவி பெறுவதற்கும் பாடசாலை அனுமதிக்கானதுமேயன்றி இதுவே எல்லாவற்றையும் தீர்மானிப்பது என்ற நினைப்பு மகா தவறாகும்.

இருந்தும் இந்த நினைப்புகளில் இருந்து பெற்றோர்கள் மீளமுடியாதவர்களாக உள்ளனர். இதற்கு வேறு பல காரணங்களும் வகிபங்கு செலுத்துகின்றன என்ற உண்மையையும் நாம் அடியோடு நிராகரித்துவிட முடியாது.

ஆம், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையே ஒரு பாடசாலையின் மாணவர் அனுமதியை தீர்மானிக்கின்ற காரணியாக அமைந்து விடுவதால்,

ஆரம்ப கல்வி இருக்கக்கூடிய அத்தனை பாடசாலைகளுக்கும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை என்பது சவாலாகவே அமைகின்றது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைகின்ற பாடசாலைகளை நோக்கி தங்கள் பிள்ளைகளை இழுத்துச் செல்கின்ற ஒரு கலாசார சூழ்நிலை உருவாகிய நிலையில் குறித்த பாடசாலைகளில் மாணவர்களின் அனுமதி மிகையாக இருக்க,

பல பாடசாலைகள் பிள்ளைகளின் வருகைக்காக தவம் கிடக்கின்றன.

எனினும் இந்தப் போக்கில் யாராலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாத நிலைமையே காணப்படுகிறது.

இத்தகையதோர் சூழ்நிலையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் பெறுபேற்றுக்குப் பின்பான தாக்கங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இங்குதான் புலமைப்பரிசில் பரீட்சை என்பது நெருப்பாற்றைக் கடக்கின்ற நீச்சலாக மாறுகின்றது.

இந்த நிலைமை மாற்றமடையாதவரை எங்கள் பிஞ்சுகளின் மனங்கள் ஏதோவொரு வகையில் வதைபட்டு வக்கிரமாக்கப்படப் போகின்றன என்பதுதான் துரதிர்ஷ்டமான உண்மை.

## திறப்பு விழா

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நுழைவாயில் திறப்பு விழாவும் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டுவிழாவும் நாளை திங்கட்கிழமை நண பகல் 12 மணியளவில் யாழ்ப பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கி.கந்தவேள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் அன்பகன் அரியதுரை கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் கௌரவ விருந்தினர்களாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதித் துணைவேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் புதிதாக அமைய உள்ள நான்கு மாடி கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கசிப்பினை வைத்திருந்த நபருக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் அபராதம்

(கரணவாய்)

கசிப்பினை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவருக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன் பத்து வருடங்களிற்கு ஒத்திவைத்த இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன்.

கடந்த 2016ஆம் ஆண்டு காங்கேசன்துறை போதைப் பொருள் தடுப்பு பிரிவினரினால் துன்னாலை பகுதியில் வைத்து கசிப்புடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்திய போது சுற்றவாளி என தெரிவித்து வழக்காடினார்.

கடந்த திங்கட்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவர் குற்றவாளியாகக் காணப்பட்டவிடத்து அதிகபட்சமாக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன். (ம-60)

## பருத்தித்துறை நகரிலுள்ள வர்த்தக நிலையத்தில் திருட்டு

பருத்தித்துறை நகரில் உளள வர்த்தக நிலையம் ஒன றில் திருட்டு இடம்பெற்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரின் நவீன சந்தைக்கு வடக்குப் பக்கமாக உள்ள குமாரி ஸ்ரோர்ஸ் என்ற வர்த்தக நிலையத்திலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வர்த்தக நிலையத்தினை பூட்டிவிட்டு சென்ற உரிமையாளர் மறுநாளான நேற்று சனிக்கிழமை காலை வர்த்தக நிலையத்தை திறக்க சென்றபோதே திருட்டு இடம்பெற்றமை தெரியவந்தது.

வர்த்தக நிலையத்தின் கூரையினை கழற்றி உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சிகரெட், தொலைபேசி மீள்நிரப்பு அட்டை என்பவற்றை திருடியதுடன் அங்கிருந்த சீசீரீவி கமராவின் ஒளிப்பதிவு பெட்டியினையும் திருடிச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

இவ் வர்த்தக நிலையத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னரும் பெருமளவான பொருட்கள் திருடப்பட்டிருந்தது.

அது தவிர கடந்த வருடம் தீயினாலும் எரிந்து நாசமானதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் வர்த்தக நிலையத்தில் இடம்பெற்ற திருட்டினை ஒத்ததான திருட்டு பருத்தித்துறை மருதடிப்பகுதியில் உள்ள விக்கினேஸ்வரா ஸ்ரோரில் இரண்டு வாரங்களிற்கு முன்னர் இடம்பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-60)

## பாவனைக்கு உதவாத பொருட்கள் விற்பனை; தண்டப் பணம் அறவீடு

(பனிக்கன்குளம்)

வவுனியா ஓமந்தை பொது சுகாதாரப் பரிசோதகரினால் ஓமந்தைப்பகுதியிலுள்ள வியாபார நிலையமொன்றில் காலாவதியான பிஸ்கட், வண்டு மொய்த்த பேரீச்சம் பழம் என்பனவற்றை விற்பனை செய்த வியாபார நிலைய உரிமையாளருக்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தினால் 13 ஆயிரம் ரூபாய் தண்டம் அறிவிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

வவுனியா ஓமந்தைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் ஓமந்தைப் பகுதியிலுள்ள வியாபார நிலையம் ஒன்றில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது பாவனைக்கு உதவாத வண்டு மொய்த்த பேரீச்சம் பழம் மற்றும் காலாவதியான பிஸ்கட் என்பன விற்பனை செய்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து வியாபார நிலைய உரிமையாளருக்கு எதிராக ஓமந்தை பொது சுகாதாரப் பரிசோதகரினால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது இவ்வழக்கு விசாரணைக்கு நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது பாவனைக்கு உதவாத காலாவதியான பிஸ்கட் மற்றும் வண்டு மொய்த்த பேரீச்சம்பழம் ஆகிய பொருட்களை விற்பனை செய்த வியாபார நிலைய உரிமையாளருக்கு நீதிமன்றினால் இவ்விரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் எதிராக 13 ஆயிரம் ரூபாய் தண்டமாக விதிக்கப்பட்டதுடன் கைப்பற்றிய பாவனைக்கு உதவாத பொருட்களை அழிப்பதற்கும் மன்று உத்தரவிட்டது. (2-281)

## கள்ளுத் தவறணை அமைக்க அல்வாய் மக்கள் எதிர்ப்பு

(கரணவாய்)

அல்வாய் கிழக்கு கலட்டி நாச்சிமார் கோவிலடி மக்கள் குடிமனைப் பகுதியில் கள்ளுத் தவறணை அமைக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நாச்சிமார் கோவிலடி மாயக்கை கலட்டி என்ற இடதில் கள்ளுத் தவறணை அமைக்கப்பட்டிருந்ததாகவும் அந்த இடத்தில் மீணடும் கள்ளுத்தவறணை ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது அப்பகுதியில் அதிக மக்கள் வாழ்ந்து வருகின்றமையினால் வேறு இடத்தைத் தெரிவு செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-60)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கிழமைகளுக்கு ஏற்ற ஆடைகள் எவை?**

ஒவ்வொரு நாளுக்குரிய வண்ணத்தில் அணிந்து வந்தால் எடுத்த காரியத்தில் வெற்றி கிட்டும். ஆரோக்கியம் வளரும்.

ஞாயிறு- செம்மஞ்சள்

திங்கள்- வெள்ளையில் சிவப்பு

செவ்வாய்- சிவப்பு

புதன்-பச்சை

வியாழன்- மஞ்சள், பொன்னிறம்

வெள்ளி-வெள்ளையில் நீலம்

சனி- கருநீலம், கறுப்பு

(தொடரும்)

## வேலை தேடுபவர்கள் பதிவுகளை மேற்கொள்க!

### வவுனியா வர்த்தக சங்கத் தலைவர்

(பனிக்கன்குளம்)

வவுனியா வர்த்தக சங்கத்தினூடாக வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு வவுனியா வர்த்தக சங்கத்தின் தலைவர் சுஜன் சண்முக ராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வர்த்தக சங்கத்தினால் வர்த்தகர்கள் மற்றும் ஊழியர்களுக்கான மற்றுமொரு சேவையாக வேலைவங்கி எனும் ஒரு தொனிப்பொருளில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்திற்கு தேவையான அனைத்து ஊழியர்களையும் வர்த்தக சங்கத்தினூடாகப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மிக முக்கியமாக வேலை தேடுபவர்கள் வர்த்தக சங்கத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

அவ்வாறே வர்த்தகர்கள் உங்களுக்கு தேவையான ஊழியர்கள் தொடர்பான விபரங்களை எம்மிடம் பதிவு செய்வதன் மூலம் தேவைகளைப் பூர்த்தி செய்வது இலகுவாக அமையும்.

எனவே உங்களது பதிவுகளை முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள எமது வர்த்தக சங்கத்தில் மேற்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

## யானைத் தந்தங்களுடன் இருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா கனகராயன் குளம் பகுதியில் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இரண்டு யானை தந்தங்களை மீட்டுள்ளதுடன் கனகராயன் குளம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரை கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட யானை தந்தங்களையும் கைது செய்யப்பட்ட நபர்களையும் அன்றையதினம் இரவு கனகராயன் குளம் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-281)

# இங்கிலாந்து மண்ணில் சாதிக்கும் ஹோலி - அஸ்வின்



இந்திய அணி வீரர்களான கோலி மற்றும் அஸ்வின் இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, தங்கள் மீது விழுந்த விமர்சனங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளனர்.

இந்திய அணி கடந்த 2014ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற போது, அங்கு நடந்த ஐந்து போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரை 1:3 என இழந்தது.

இந்த தொடரில் கோலி 10 இன்னிங்சில் 134 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார்.

இவர் மட்டுமின்றி அந்த தொடரில் அஸ்வினும் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தவில்லை.

இரண்டு போட்டிகளில் மட்டுமே விளையாடிய அவர் 3 விக்கெட்டுக்கள் மட்டுமே வீழ்த்தினார். இதனால் வெளிநாட்டு மண்ணில் அஸ்வின் சிறப்பாக பந்து வீசுவதில்லை என்றும், இவருடைய பழைய பார்ம் போய்விட்டது என்று விமர்சனம் எழுந்தது.

இதனால் தற்போது நடைபெற்று வரும் டெஸ்ட் தொடரில் அஸ்வினுக்கு இடம் கிடைக்குமா என்ற கேள்வியே நிலவியது.

இருப்பினும் இங்கிலாந்து அணியில் ஏராளமான இடது கை துடுப்பாட்ட வீரர்கள் இருந்ததால் கோலி - அஸ்வின் மீது நம்பிக்கை வைத்து ஆடும் லெவனில் சேர்த்தார்.

கோலியின் நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் அஸ்வின் அபாரமாக பந்து வீசி முதல் நாளில் நான்கு விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

இவரது பந்து வீச்சால் இங்கிலாந்து அணி 287 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

கடந்த சீசனில் மூன்று விக்கெட்டுக்கள் மட்டுமே வீழ்த்திய அஸ்வின், இந்த முறை முதல் டெஸ்டின் ஒரே இன்னிங்சில் நான்கு விக்கெட்டுக்கள் வீழ்த்தி விமர்சனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அதேபோல் 10 இன்னிங்சில் 134 ஓட்டங்கள் அடித்திருந்த கோலி நடைபெற்ற போட்டியின் 2வது நாளில் 149 ஓட்டங்கள் குவித்து விமர்சனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இரண்டு வீரர்களும் ஒரே நாளில் தங்களது விமர்சனத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். (க)

# புதியசாதனை படைத்தார் ரவிச்சந்திரன் அஸ்வின்



விராட் கோலியின் தலைமையின் கீழ் 200 விக்கெட்டுகளை வீழ்த்தி, சர்வதேச அளவிலான சாதனையில் முரளிதரனுக்கு அடுத்த இடத்தை அஸ்வின் பிடித்துள்ளார்.

இங்கிலாந்து-இந்தியா இடையிலான முதல் டெஸ்ட் போட்டி எட்ஜ்பாஸ்டனில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சேர்த்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதன் மூலம், விராட் கோலியின் தலைமையின் கீழ் 200 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். சர்வதேச அளவில், டெஸ்ட் போட்டிகளில் ஒரே அணித்தலைவரின் தலைமையின் கீழ் 200 விக்கெட்டுகள் வீழ்த்திய 2வது வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

மேலும், 34 டெஸ்டுகளில் 200 விக்கெட்டுகள் வீழ்த்தியதால், அவுஸ்திரேலியாவின் ஷான் வார்னேயுடன் இணைந்துள்ளார் அஸ்வின். அத்துடன் இந்திய அளவில் முதல் வீரர் என்ற பெருமையையும் அஸ்வின் பெற்றுள்ளார்.

இலங்கையின் முத்தையா முரளிதரன் 30 போட்டிகளில் இந்த சாதனையை படைத்து முதலிடத்தில் உள்ளார். சனத் ஜெயசூர்யாவின் தலைமையின் கீழ் அவர் இந்த சாதனையை படைத்திருந்தார். (க)

# ஆனோல்ட்டின் டுவிட்டால் ஆத்திரத்தில் ரசிகர்கள்

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரஸ்ஸல் ஆனோல்ட் கோலி விளாசிய சதம் குறித்து ஒன்றும் தெரியாது போல் பதிவிட்ட டுவிட்டால் ரசிகர்களின் கோபத்திற்கு ஆளாகியுள்ளார்.

இங்கிலாந்து-இந்தியா டெஸ்ட் தொடரின் முதல் இன்னிங்ஸில், விக்கெட்டுகளை இழந்து இந்தியா தடுமாறிய வேளையில் அணித் தலைவர் விராட் கோலி நிலைத்து நின்று ஆடி 149 ஓட்டங்கள் விளாசினார்.

கோலியின் இந்த ஆட்டத்தை பாகிஸ்தான் வீரர்கள் உட்பட பலரும் பாராட்டி வருகின்றனர். முன்னதாக, கோலி சதம் விளாசிய நேரத்தில் இலங்கை கிரிக்கெட்டின் முன்னாள் வீரர் ரஸ்ஸல் ஆனோல்ட், தனது டுவிட்டர் பக்கத்தில்

'இங்கே என்ன நடக்கிறது? கிரிக்கெட் தொடர்பான டுவிட்கள் அதிக வருகிறதே... என டுவீட் பதிவிட்டிருந்தார். அதன் பின்னர், சில நிமிடங்களில் 'ஓ.... இங்கே ஏதேனும் போட்டி நடக்கிறதா? எனவும் பதிவிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்திய ரசிகர்கள் ஆனோல்டை சமூக வலைத்தளங்களில் திட்டியும், கோலியும் செய்து வருகின்றனர். (க)




## ஒரு ஓவரில் மூன்று விக்கெட்டுக்கள் அனல் பறக்கவிடும் இஷாந் சர்மா

பர்மிங்ஹாம் டெஸ்டில் வேகத்தில் மிரட்டிய இஷாந்த் சர்மா, ஒரே ஓவரில் பேரிஸ் டோவ், ஸ்டோக்ஸ், பட்லர் என மூன்று பேரையும் வெளியேற்றி அசத்தியுள்ளார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இதன் முதல் டெஸ்ட் போட்டி பர்மிங்ஹாமில் நடைபெற்று வருகிறது.


இப்போட்டி இங்கிலாந்து அணி சர்வதேச அரங்கில் பங்கேற்கும் 1000வது டெஸ்ட் போட்டியாகும். இதில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 287 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து களமிறங்கிய இந்திய அணிக்கு, அணித்தலைவர் விராட் கோலி (149) சதம் விளாசி அசத்த, இந்திய அணி முதல் இன்னிங்சில் 274 ஓட்டங்களுக்கு ஓல் அவுட்டானது.

இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 1 விக்கெட்டுக்கு 9 ஓட்டங்கள் எடுத்து 22 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இந்நிலையில் மூன்றாவது நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த இங்கிலாந்து அணி இஷாந்த் வேகத்தில் தடுமாறியது.

இதில் இஷாந்த் சர்மா, இங்கிலாந்தின் பேரிஸ் டோவ், ஸ்டோக்ஸ், பட்லர் என மூன்று பேரையும் அவுட்டாக்கி அசத்தினார்.




ஷாம் கரன் (63) மட்டும் அரைசதம் அடித்து கைகொடுக்க, இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 180 ஓட்டங்களுக்கு ஓல் அவுட்டானது. இதன் மூலம் இந்திய அணிக்கு 194 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்தது.

தற்போதுவரை 35.3 ஓவர்களை சந்தித்துள்ள இந்திய அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 109 ஓட்டங்கள் குவித்துள்ளது.

தினேஷ் கார்த்திக் 17 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் கோலி 43 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (க)

# 7000 ஓட்டங்களை எடுத்து சாதனை படைத்த கோலி



இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலி, அதி விரைவாக 7000 ஓட்டங்கள் எடுத்த அணித்தலைவர் என்றபுதியசாதனையை படைத்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னின்ங்சில், விராட் கோலி 149 ஓட்டங்கள் குவித்தார். 40 ஓட்டங்களை கோலி எடுத்த போது, சர்வதேச அளவில் அதி விரைவாக 7000 ஓட்டங்களை குவித்த அணித் தலைவர் என்கிற சாதனையை படைத்தார்.

இதுவரை 105 டெஸ்ட்களில் விளையாடியுள்ள கோலி, 124 இன்னிங்ஸ்களில் 7000 ஓட்டங்களை கடந்துள்ளார். இதற்கு முன்பு, மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் ஜாம்பவான் பிரையன் லாரா 164 இன்னிங்ஸ்களில் 7000 ஓட்டங்களை எடுத்ததே சாதனையாக இருந்தது.

அதி விரைவாக 7000 ஓட்டங்கள் எடுத்த அணித் தலைவர்கள்,

விராட் கோலி (இந்தியா) - 124 இன்னிங்ஸ், பிரையன் லாரா (மேற்கிந்திய தீவுகள்) - 164 இன்னிங்ஸ், ரிக்கி பொண்டிங் (அவுஸ்திரேலியா) - 165 இன்னிங்ஸ், மைக்கேல் கிளார்க் (அவுஸ்திரேலியா) - 166 இன்னிங்ஸ், அலைஸ்டர் குக் (இங்கிலாந்து) - 171 இன்னிங்ஸ், அசாருதீன் (இந்தியா) - 193 இன்னிங்ஸ், சவுரவ் கங்குலி (இந்தியா) - 194 இன்னிங்ஸ், டோனி (இந்தியா) - 198 இன்னிங்ஸ், அர்ஜூனா ரணதுங்கா (இலங்கை) - 222 இன்னிங்ஸ், ஸ்டீபன் பிளம்மிங் (நியூசிலாந்து) - 224 இன்னிங்ஸ். (க)

# வோஷிங்டன் டெனிஸ் ; முரே அதிரடி

வோஷிங்டன் டென்னிஸ் ஓபனில் ஆண்டி முரே விடியற்காலை மூன்று மணி வரை விளையாடி ருமேனியா வீரரை வீழ்த்தியுள்ளார்.

வோஷிங்டன் ஓபன் டென்னிஸ் தொடர் வோஷிங்டனில் நடைபெற்று வருகிறது. காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இங்கிலாந்து வீரர் ஆன்டி முரே ருமேனியாவின் மேரியஸ் கோபிலை எதிர்கொண்டார்.

வலது பக்கம் இடிப்பில் ஏற்பட்ட காயம் காரணமாக 11 மாதம் ஓய்வு எடுத்த பிறகு தற்போது முரே களம் இறங்கினார்.

மழை காரணமாக ஆட்டம் மிகவும் காலதாமதமாக தொடங்கியது. முரேவிற்கு மேரியஸ் கோபில் கடும் சவாலாக விளங்கினார்.

இதனால் முதல் செட் டைபிரேக்கர் வரை சென்றது. இறுதியில் முர்ரே 6 (5) - 7(7) என தோல்வியடைந்தார்.

பின்னர் சுதாரித்துக் கொண்ட முரே 2 ஆவது சுற்றில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இதனால் 6-3 என 2-வது செட்டை எளிதில் கைப்பற்றினார்.

வெற்றியை தீர்மானிக்கும் 3-வது செட்டில் இருவரும் மல்லுக்கட்டியதால் ஆட்டம் நீண்டு கொண்டே சென்றது. இறுதியில் முர்ரே 7(7) - 6(4) எனக் கைப்பற்றி காலிறுதிக்கு முன்னேறினார். (க)

## கந்தரோடையில்...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் கடந்த சில நாள்களுக்கு முன் வீட்டிலிருந்து வெளியே சென்றிருந்தார்.

இந்த நிலையில் அவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் யாழ்.வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தலைவரின் இறப்புக்கான காரணம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்பே தெரிய வரும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

## வடக்கில் குற்றங்களை...

ஸாருக்கு தேவை என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற தென்னஞ்சோலை மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து தமிழில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமுதாய பொலிஸ் முறைமை என்பதைப் பற்றி இலங்கையின் மற்ற பிரதேசங்களைப் போல் வடக்கு மக்களும் தெரிந்து கொண்டுள்ளார்கள். நிரந்தர சமாதானம், அமைதி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கு சமுதாய பொலிஸ் சேவை அவசியம். இலங்கை பொலிஸாரின் நடமாடும் பொலிஸ் சேவை மூலம் நான்கு கோடி பெறுமதியான சேவை வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் நன்மைக்காகவும், நாட்டின் அபிவிருத்திக்காகவும் நாடு பூராகவும் இவ்வாறு பொலிஸார் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இந்த வேலைத்திட்டம் மூலம் வடக்கு மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் சிறந்த இணைப்பு ஏற்பட்டுள்ளது. வ்டக்கில் போதைவஸ்து, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு சமுதாய ஒத்துழைப்பு பொலிசாருக்கு தேவை. இலங்கை பொலிஸ் இந்த நாட்டு மக்களின் பொலிஸ். அதைப் பாதுகாப்பது பொதுமக்களின் கடமை. சமுதாய பொலிஸ் சேவை மூலம் வடக்கு மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் எதிர்காலம் சிறப்பாக அமையும் என நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (ம-250)

## பாராளுமன்ற உறுப்பினர்...

ரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருந்த போதும் அவ்வாறான எந்தவொரு முன்மொழிவும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும், அத்தகைய தீர்மானத்திற்கு தான் ஒருபோதும் இடமளிக்கப் போவ தில்லை என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கடந்த மூன்று வருட காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஜனாதிபதி என்ற வகையில் தனது சம்பளத்தை அதிகரிப்பதற்கு முன் வைக்கப்பட்ட முன்மொழிவுகளை தான் உறுதியாக நிராகரித்துவிட்டதாக குறிப்பிட்டார். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு பொருளாதார பிரச்சி னைகளை தீர்ப்பதற்கு முயற்சித்து வருகின்ற இச்சந்தர்ப்பத்தில், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு பொருத்தமானதல்ல என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம)

## சிறந்த பொறியியலாளர்...

மற்றும் மாணவர்கள் விடுதி ஆகிய கட்டடத்தொகுதிகள் நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

இவற்றை திறந்து வைத்து உரையாற்றும் போதே பிரதமர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், இலங்கை பொறியியல் துறையில் பிரவேசித்த தலை சிறந்த பொறியியலாளர்கள் யாழ்.மாவட்டத்தில் இருந்தே உருவாகினர். யாழ்.ஹாட்லி கல்லூரியே அதிகளவான பொறியலாளர்களை பிரசவித்தது.

ஆனால் அவற்றை 30 வருட யுத்தம் இல்லாமல் செய்துள்ளது. அன்று கிடைத்த பெறுபேறுகளை போன்று இன்று கிளிநொச்சி வளாகத்தின், பொறியியல் பீடமும், தொழிநுட்பபீடமும் செயற்படும் என்பது எனது நம்பிக்கை.

வடக்கை அபிவிருத்தியடைய செய்வதன் ஒரு அங்கமாகவே கல்வித் துறை காணப்படுகின்றது. யுத்தம் வடக்கையும், தெற்கையும் பாதித்துள்ளது.

அதன் மூலமாக நாம் பின்னடைவை சந்தித்துள்ளோம். வியட்நாம் யுத்தத்திற்கு பின்னரே அபிவிருத்தியடைந்தது. அதே போல் நாம் யுத்தம் நிறைவடைந்தன் பின்னரான இடைகாலத்தில் இருக்கின்றோம் என்றார். (ம)

## புலம்பெயர் அமைப்புகள்...

யதார்க கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

கொத்மலை -பூண்டுலோயாவில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே கூட்டு எதிரணி இவ்வாறு தெரிவித்துள்ளது.

அது மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் புதிய ஆட்சியை ஏற்படுத்த அமெரிக்கா உள்ளிட்ட புலம் பெயர் அமைப்புகள் 585 மில்லியன் டொலரை வழங்கின.

தற்போது சீனா, இந்தியா போன்ற நாடுகளில் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள அமெரிக்கா, கோத்தபாய இரட்டை குடியுரிமை பெற்றவர் அதனால் அவருக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என கூறுகின்றது.

முதுகெலும்பு இல்லாத ஆட்சியாளர்களை இலங்கையில் ஏற்படுத்தி, இலங்கையை கைப்பற்றிக்கொள்ளும் எண்ணத்திலேயே அவர்கள் இவ்வாறு தெரிவிக்கின்றனர்.

பிரதமர் ரணிலின் மூளை குழப்பமடைந்துள்ளதால் அவர், இவ்வாறான முடிவுகளை எடுக்கின்றார். மத்தள விமான நிலையத்தை விற்கவும், அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றுள்ளதாகவும் தற்போது ஒலுவில் துறைமுகத்தை விற்பதற்கும் அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

ஜனாதிபதியின் பெயரில் மைத்திரி என்ற இரக்க குணம் காணப்பட்டாலும் அவரிடம் அவ்வகையான குணம் இல்லை. மாறாக பொறாமை, பழி வாங்கும் எண்ணம் போன்றவையே மேலோங்கி காணப்படுகின்றது.

எனவே குரோத மனப்பான்மையை விட்டு சிறப்பான ஆட்சியை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். 100 நீதிமன்றங்களை அமைத்து சிறைகளில் அடைத்தாலும் அரசுக்கு எதிரான போராட்டத்தை நிறுத்த போவதில்லை என அது கூறியுள்ளது.(ம)

## யாழ்.குடாவில் அசாதாரண...

நாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் நிகழும் அமானுஷ்ய சம்பவங்களால் மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர். இந்த நிலையில் உள்ள மக்களை உடனடியாக காப்பாற்ற வேண்டும். இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாண அரசாங்க முகவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்பு கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வாள், கத்திகளை எடுத்து வந்து மக்களை அச்சப்படுத்தும் பல்வேறு குழுக்களின் செயற்பாடு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மக்களால் சுதந்திரமான வாழ்க்கையில் ஈடுபட முடியாத தேவையற்ற அச்சத்தில் வாழ நேரிட்டுள்ளது. இதனால் சிவில் பாதுகாப்பு குழு, யாழ்ப்பாணத்தின் ஏனைய பாதுகாப்பு பிரிவிற்கு முழுமையான ஆதரவு வழங்க வேண்டும் .

மிகவும் துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை விரைவில் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணத்தின் உயர் பாதுகாப்பு பிரதானியிடம் கேட்டுகொண்டதாகவும், இது தொடர்பில் தான் கலந்துரையாடல் மேற்கொண்டதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## எதிர்வரும் 7-ம் திகதி...

ஐக்கிய தேசியக் கட்சி 106 ஆசனங்களைப் பெற்றதுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 95 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. எனவே இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கம் அமைத்துக் கொண்டது. எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியூடாகத் தெரிவுசெய்யப்பட்ட 52 உறுப்பினர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்காது கூட்டு எதிரணியாகச் செயற்படுவதற்குத் தீர்மானித்தனர்.

எனினும் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக அங்கீகரிக்கப்பட்டதுடன் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் நியமிக்கப்பட்டார். எனவே கூட்டு எதிர்க்கட்சியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதனால் அவ்வெதிரணியை உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக ஏற்றுக்கொள்ளுமாறும் எதிர்க்கட்சித் தலைமை தமக்கு வழங்குமாறு தொடர்ந்து கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இவ்வாறான நிலையில் அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 16 பேர், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையுடன் அரசாங்கத்திலிருந்து விலகி தற்போது கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்துள்ளனர். இவ்வாறான நிலையில் உத்தியோகபூர் எதிர்க்கட்சி குறித்து கூட்டு எதிர்க்கட்சி மீண்டும் தமது கோரிக்கையை முன்வைத்துள்ளது. அதற்கிணங்க கடந்த வியாழக்கிழமை கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் சபாநாயகரைச் சந்தித்து கூட்டு எதிர்க்கட்சியை உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக ஏற்றுக்கொள்ளுமாறும் எதிர்க்கட்சித் தலைமைக்கு தினேஷ் குணவர்தனவை நியமிக்குமாறும் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆகவே அக்கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தீர்மானத்தை அறிவிப்பதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம)

## அரசே ஜனநாயகத்தை...

மறுக்கின்றனர் என்று குறிப்பிட்டு மீண்டும் கலந்தாலோசிப்பதாக குறிப்பிட்டு காலத்தினை மாத்திரமே கடத்தி வருகின்றனர்.

இவ்வருடத்தில் தேர்தல்கள் இடம் பெறும் என்பது வெறும் வார்த்தைகளாகவே காணப்படும் அரசாங்கம் மாகாண சபை தேர்தலை நடத்தாமல் 2020-ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முகம் கொடுக்கவே முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஜனாதிபதி தேர்தலிலும் பொது எதிரணியினரே அமோக வெற்றி பெறுவர். ஆனால் தற்போது பதவிக்காலம் நிறைவடைந்துள்ள மாகாண சபைகளில் முறையற்ற விதத்தில் நிர்வாகங்கள் இடம் பெற்று வருகின்றன. எதிர்வரும் நவம்பர் மாதம் மேலும் 3 மாகாணங்களின் பதவிக் காலங்கள் நிறைவடையவுள்ளன.

இதன் காரணமாகவே மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த அழுத்தங்களை கொடுத்து வருகின்றோம். பாராளுமன்றத்தில் நடு நிலையாக செயற்பட வேண்டிய சபாநாயகரும், எதிர்த்து பேச கூடிய எதிர்க்கட்சி தலைவரும் பிரதமரின் பங்காளிகளாகவே செயற்படுகின்றனர்.

தேசிய அரசாங்கம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்திட்டங்களும் ஒரு தரப்பினருக்கு மாத்திரமே சாதகமாக காணப்படுகின்றது. தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களது வேதனம் அதிகரிக்க தீர்மானித்துள்ளமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. இன்று நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பின்னடைவினை எதிர்கொண்டு வருகின்றனர் வாழ்க்கை செலவுகள் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன. அமைச்சர்களின் வேதனம் அதிகரித்தால் மக்களின் மீதான வரிச்சுமையும் அதிகரிக்கப்படும்.

இவ்வாறான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய அரசாங்கத்தில் காணப்படுகின்ற ஜனநாயக முறைகள் எத்தன்மையில் காணப்படுகின்றது என்பதை புரிந்துக் கொள்ள முடியும். பேச்சு சுதந்திரத்தை மாத்திரம் கொடுத்து விட்டால் ஜனநாயகம் முழுமையடைந்து விடாது. ஆகவே 2020-ம் ஆண்டு நிச்சயம் ஆட்சி மாற்றம் இடம் பெறும். அதன் பின்னரே நியாயமான சுதந்திரம் நிலைநாட்டப்படும் என தெரிவித்தார். (ம)

## சர்வதேச நீதிபதிகளுக்கு...

ள்ளார்.

எழுச்சிபெறும் பொலநறுவை எனும் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பொலநறுவையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த ஜனாதிபதி, நாட்டை பிளவுபடுத்தும் விதமாக நல்லாட்சி அரசாங்கம் ஒருபோதும் செயற்பட்டதில்லை. அதேபோன்று பிறர் நாட்டை பிளவுபடுத்தவும் நாம் அனுமதித்ததில்லை.

இதேவேளை, சர்வதேசத்தின் அழுத்தத்தை எதிர்கொண்டிருக்கும் எமது இராணுவ வீரர்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் என்ற வகையில் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

மின்சார நாற்காலி, சர்வதேச நீதிமன்றங்கள் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் போன்ற அழுத்தங்கள் இனி இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## வடக்கு அபிவிருத்தி...

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொறியியல் பீட மற்றும் மாணவர்கள் விடுதி ஆகிய கட்டடத்தொகுதிகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

குறித்த கட்டடங்கள் 5000 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் பெருமளவிலான பிரச்சினைகள் உள்ளன.

மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டிய தேவை உள்ளது.

சட்டரீதியான பிரச்சினைகள் உள்ளன.

இதேவேளை, இராணுவம் மற்றும் பொலிஸ் தொடர்பான பிரச்சினைகளும் நிலவுகின்றன.

காணிகள் விடுவிப்பது குறித்த பிரச்சினைகளுக்கு படிப்படியான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையிலும் 500 ஏக்கர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பிரச்சினைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தியது.

இந்தநிலையில் தற்போது அபிவிருத்தி தொடர்பில் முக்கிய அவதானம் செலுத்தப்படுகிறது. நாட்டின் பொருளாதாரம் சரிவினை எதிர்நோக்கியுள்ளது.

இதனை எதிர் கொள்ள பல்வேறு திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வடக்கில் துறைமுகங்கள், வானூர்தி தளம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுவதுடன், வடக்கின் சுற்றுலா துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்படுவதாகவும் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார். (ம)

செவன
திகதி 2018/08/04
சீட்டிழுப்பு இலக்கம் 106
ஆங்கில எழுத்து U
வெல்லப்பட்ட இலக்கங்கள் 08 10 52 66
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04-08-2018
சீட்டிழுப்பு இலக்கம் 862
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 3 7 4 0 5 8
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 2018/08/04
சீட்டிழுப்பு இலக்கம் 1348
எழுத்து 07
வெற்றி இலக்கம் 05 07 38 63 41 04
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 1841
ஆங்கில எழுத்து Z
வெல்லப்பட்ட இலக்கங்கள் 36 51 76 78
தேசிய லொத்தர் சபை

## பரீட்சை இன்று;...

நடைபெறுகின்றது.

மாணவர்களின் இடது பக்க சட்டையில் சுட்டெண்ணை எழுதி காலை 9 மணிக்கு முன் பரீட்சை மண்டபத்துக்கு அழைத்துச் செல்லுமாறு பெற்றோர், பாதுகாவலர்களிடம் பரீட்சைகள் திணைக்களம் கேட்டுள்ளது.

நாடு முழுவதும் 3 ஆயிரத்து 50 மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.

இம்முறை 3 இலட்சத்து 55 ஆயிரத்து 321 மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை தோற்றவுள்ளனர்.

இதேவேளை, இவ்வருடத்திற்கான க.பொ.த உயர்தர பரீட்சை நாளை திங்கட் கிழமை ஆரம்பமாகவுள்ளது. (ம)

## ஆவா குழுவுட...

காலமாக இடம் பெற்ற பல்வேறு வாள்வெட்டு மற்றும் வன்முறைச் சம்பவங்களின் பின்னர், யாழ்ப்பாணம் உட்பட மானிப்பாய், சுன்னாகம், கோப்பாய் பகுதியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டு, வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவர்களை உடனடியாக கைதுசெய்யுமாறு வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று மானிப்பாய் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது சாவகச்சேரி, சரசாலை, மறவன் புலவு பகுதியைச் சேர்ந்த 11 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து, 4 வாள்கள், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் செயின்கள் உட்பட இரும்பு ஆயுதங்களும் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களின் வீடுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் 18 வயது முதல் 20 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், இவர்களில் 4 பேர் இந்த வருடம் உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்து வருகின்றதாகவும் மானிப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-9-30-101)

## மன்னார் மனித...

சட்டதரணி சாலிய பீரிஸ் இதனை தெரிவித்தார். இந்த பணிகளுக்கு நீதியமைச்சின் ஊடாக நிதி வழங்கப்படுகின்ற போதிலும் தொடர்ச்சியான மீட்பு பணிகளுக்கு நிதி பற்றாக்குறை நிலவுவதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே இந்த மீட்பு பணிகள் கைவிடப்படாது தொடர்ந்து முன்னெடுப்பதை உறுதி செய்யும் வகையில் காணாமல் போனோர் அலுவலகம் அதற்கான நிதியை மாதாந்தம் வழங்கும் என அதன் தலைவர் சாலிய் பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம)


### துரித தபால்கள் பொதிகள் சேவை

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
3-5 வேலை நாட்களில்

| | |
|---|---|
| UK | -550/= |
| Germany | -650/= |
| France | -700/= |
| Australia | -800/= |

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(முட்டாஸ் கடை சந்திக்கு அருகாமையில்)
Hotline -0777554528
(C-3398)

### CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

GNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413
(C-3392)

### வேலைவாய்ப்பு

சேவை நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை
1. Billing staff (பெண்)
✦A/L சித்தி ✦ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. ✦யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. Packing Boy (ஆண்)
✦கொழும்பில் பணியாற்றுவதற்கான தகுதியினை கொண்டிருக்க வேண்டும். ✦வயது எல்லை 18 - 30. ✦உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0770277365/ 0774275311
(C-3444)

### வாடகைக்கு வீடு தேவை

யாழ் மாநகரசபைக்கு அண்மையான பகுதியில் சிறிய குடும்பம் வசிப்பதற்கான வீடு வாடகைக்குத் தேவை. (5262)
தொடர்பு: 0777078292

### பணியாளர் தேவை

வரவேற்பாளர் - மும்மொழி அறிவுடையோர்
பாதுகாப்பு/ பராமரிப்பு பணியாளர் - இரவு நேர வேலை
எமது விடுதிக்கு மேற்குறித்த பணியாளர்கள் தேவை. கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்டவர்கள் விரும்பப்படுவர்.
AKR HOTEL (Pvt) Ltd
கரடிப்போக்கு, கிளிநொச்சி.
0778025879
(C-3428)

### வேலைவாய்ப்பு

தனது 5-வது கிளை நிறுவனத்தை ஆரம்பிக்க யாழ் மாவட்டத்தில் இருந்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டத்தில் இருந்தும் பணியாட்கள் இணைக்கப்படவுள்ளனர். 10-ம் தரம், O/L படித்தவர்களுக்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடனும், A/L, Diploma படித்தவர்களின் திறமை, தகைமை அடிப்படையாக கொண்டும் பணிகள் வழங்கப்படும். 20,000/= முதல் 45,000/= வரை சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0768803383/ 0767958499
(5269)

### கட்டடம் வாடகைக்கு

யாழ்.நகரில் இருந்து 3km தூரத்தில் பலாலி வீதியில் கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0765460811
(5268)

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய விசாலமான, வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0779906328, 0771166090
(5272)

### Direct Importers of Motor Vehicles
### SMART KINGS (PVT) LTD

JAPAN நேரடி வாகன இறக்குமதியாளர்




(C-3423)
Tel: 021 221 6999
Hotline: 077 375 4040
No.12 Point Pedro Road, Jaffna. (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



| | |
|---|---|
| UK- 550 | /=Kg |
| கனடா-900 | /=Kg |
| ஜேர்மனி- 700 | /=Kg |
| நெதர்லாந்து-700 | /=Kg |

DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-3388)

### வாடகைக்கு தேவை

பிரபல கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கிளிநொச்சியில் A9 பிரதான வீதியில் அல்லது அதற்கு அருகாமையில் விசாலமான வீடு அல்லது கட்டடம் வாடகைக்கு தேவை (5266)
தொடர்பு - 0777-596148

### வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

### கடை வாடகைக்கு

கரடிப்போக்குச் சந்தியில் A9 வீதியோரமாக 950 சதுர அடி விஸ்தீரணமான கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு:
0778025879
(C-3428)

### மாபெரும் இசைநிகழ்ச்சி



அர்ச்சனா | ரமணி அம்மா | வர்ஷா | ஜஸ்கரன் சிங்

ஆகஸ்ட் 11 மாலை 4.00 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், நெல்லியடி.

ஆகஸ்ட் 12 மாலை 4.00 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சதுக்கம் [லிங்கம் கூல்பார் முன்பாக] யாழ்ப்பாணம்.

Rs.300/=, Rs.500/=, Rs.1000/= மற்றும் VIP ரிக்கட்டுக்கள்.

Event Management - Ceylon Art Creation ( K.T.பிரசாத்)
(C-3395)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்

நாதம் 177

விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 05.08.2018 தொலைபேசி : 021 222 3378

# தீர்வு வரும்



# தீர்வு வராது



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**ப**ண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

விதானையார் விசுவலிங்கம் ஏதோ யோசனையில் மூழ்கியிருந்தார். அவரின் யோசனையைக் கலைக்கும் வகையில் கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

என்ன விதானையார் ஏதோ யோசிக்கிறியள்.

ஏன்? நீங்கள் பேப்பர் பார்க்கிறல்லயோ. விதானையாரின் பதில் ஆலடியில் இருந்த அத்தனை பேரையும் தூக்கிவாரிப் போட்டது.

விதானையாரின் பதிலால் குழம்பிப்போன சாத்திரியார் சதாசிவம் அவசரப்பட்டவராக என்ன விதானையார் சொல்லுறியள் என்றார்.

சாத்திரியாரின் பதற்றத்தை உணர்ந்து கொண்ட விதானையார் விசுவலிங்கம் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு பதிலளித்தார்.

**விதானையார்:** அண்மையில யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில விதானையார் ஒருவரை வாள்வெட்டுக் குழுவொன்று அச்சுறுத்தியுள்ளதுடன் அவரின்ர லப்டொப், ரெலிபோன் போன்றவற்றையும் அடித்துச் சேதப்படுத்தியிருக்குது.

விதானைமாருக்கே இந்தக் கதி எண்டால் நாளைக்கு என்னெண்டு வேலை செய்யிறது.

விதானையாரின் கேள்வியோடு ஆலடியில் நிசப்தம் நிலவியது.

நிசப்தத்தைக் கலைக்க நினைத்த மாநாட்டுத் தலைவர் பண்டிதர் பரமலிங்கம் யாழ்ப்பாணத்தில வாள்வெட்டுக் குழுக்களின்ர அட்டகாசம்தானே மோசமாக இருக்குது என்றார்.

**வாத்தியார்:** என்ன செய்யிறது. இது பற்றியெல்லாம் கதைக்கிறதுக்கு ஆர் இருக்கினம். எங்கட முதலமைச்சர் கதைத்தாலும் அதனை விமர்சிக்கிறதுக்கு கொஞ்சப்பேர் கூலிக்கு வேலை செய்யினம். அப்படியெண்டால் வாள்வெட்டுக் குழுவுக்கும் ஆருக்கும் தொடர்பு என்பது தெரியுதுதானே!

**சாத்திரியார்:** வாத்தியார் வாள்வெட்டுக்குழுவை நிணைத்தாலே திரும்பவும் கனடாவுக்குப் போய் அங்க இருந்திடுவமோ என்று நினைக்கிறன். அங்க இருக்கிற என்ர பிள்ளையளும் ஏனப்பா யாழ்ப்பாணத்தில இருக்கிறியள். கனடாவுக்கு வாருங்களன் என்று கேட்கினம்.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். வாள்வெட்டுக் கலாசாரத்திற்குப் பிறகு யாழ்ப்பாணத்தில இருந்து ஒரு பகுதி மக்கள் வெளியேறத் திட்டமிட்டுள்ளதான தகவல்கள் வெளிவரத் தொடங்கியிருக்கிது.

**கங்காணி:** அப்ப வாள்வெட்டுக் குழுவை இயக்குறவியளின்ர நோக்கம் நிறைவேறுது எண்டு சொல்லுங்களன்.

**சாத்திரியார்:** இஞ்சே கங்காணியார் இந்தக் காலத்தில மௌனமாக இருக்கிறதுதான் உத்தமம்.


**கங்காணி:** அப்ப நாங்கள் என்னதான் கதைக்கிறது.

**சாத்திரியார்:** எங்கட கலைஞர் கருணாநிதிக்கு வருத்தம் சுகமோ. அவர் கட்டின மூன்று தாரத்தில மிஞ்சினவியளுக்கு எத்தனை பிள்ளைகள் எண்டு கதைத்தால் சோலி இருக்காது.

**விதானையார்:** அதை யேன் கேட்கிறியள் கலைஞர் கருணாநிதியை காவேரி வைத்தியசாலையில அனுமதித்த பிறகு இருபத்தொரு பேர் அதிர்ச்சியில இறந்திருக்கினமாம்.

**மூப்பர்:** இதென்ன நாசமறுப்பு. கலைஞருக்கு இப்ப 95 வயது. உடம்பு துண்டா இயங்குதில்லை. இதயத்துடிப்பும் சுவாசமும் தான் அவரின் உடம்பில இயங்குது. இப்படி இருக்கக்க இருபத்தொரு பேர் அதிர்ச்சியில இறந்தவியளாமோ?

**சாத்திரியார்:** கருணாநிதியின்ர தலையில அப்படியொரு விதி எழுதியிருக்குது.



## தொண்டைமானாறு கடற்கரையில் மோசங்கள் நடக்குதாம்

**விதானையார்:** கலைஞருக்கு சீரியஸ் எண்டதும் ஏக்கத்தில இறந்தவர்களுக்கு நாற்பது, ஐம்பது வயதாம்.

**வாத்தியார்:** என்னைப் பொறுத்தவரையில கலைஞர் கருணாநிதிக்கு இனி இறப்புத்தான் நிம்மதியைக் கொடுக்கும். மோசமான நிலையில இருக்கிறதைப் பார்க்கவே முடியாமல் இருக்குது. ஆகையால தி.மு.க. தொண்டர்கள் கலைஞர் கருணாநிதி சுகமாக இயற்கை அடைய வேண்டும் எண்டு நினைக்கிறதுதான் நல்லது.

**பண்டிதர்:** மெரீனா கடற்கரையில ஓர் இடம் கிடைத்துவிட்டால் கலைஞரின் இறப்பும் அறிவிக்கப்படுமெண்டல்லோ கதைக்கினம்.

**வாத்தியார்:** தமிழ் நாட்டில முதலமைச்சர்களாக இருந்தவர்களின்ர மரணங்கள் எப்பவும் குழப்பமாகத்தான் இருக்குது.

**விதானையார்:** கலைஞர் கருணாநிதி சிறந்த தமிழறிஞர் என்பதில மாற்றுக் கருத்திற்கிடமில்லை. ஆனால் எங்கட விடயத்தில அவர் திருகுதாளம் செய்தவர் என்பது இன்றுவரைக்கும் மறக்கமுடியாமல்தான் இருக்குது.

**வாத்தியார்:** உண்மைதான். கலைஞர் கருணாநிதி நினைத்திருந்தால் எங்கட விடயத்தில இந்திய மத்திய அரசின்ர நிலைப்பாட்டை மாற்றியிருக்கலாம். ஆனால் அவர் அதைச் செய்யல்ல. இனி என்ன செய்யிறது. எல்லாம் முடிஞ்சு போய்ச்சுது.

இவ்வாறு வாத்தியார் கூறும் போது மாநாட்டுத் தலைவர் பண்டிதர் பரமலிங்கத்தின் கையடக்கத் தொலைபேசி அலறியது. பண்டிதர் தொடர்பை ஏற்படுத்தினார். பண்டிதர் ஐயா நான் தொண்டைமானாறில் இருந்து கதைக்கிறன். இஞ்ச தொண்டைமானாற்றுக் கடல் வழிப்பக்கம் போக முடியாமல் இருக்குது. ஹோல் பேஸ் தோற்றுவிடும் போல...

எங்கிருந்தெல்லாம் வருகிற இளசுகள் கண்டபாட்டில நடந்து கொள்ளுகினம். இப்படியே நிலைமை போனால் நாளைக்கு எங்கட பெற்றார் மார் தலையில கைவைக்கிறதுதான் விதியாகிப் போகும். அத்தோட... என்று ஏதோ சொல்ல உன்னியவர் சற்று யோசித்தார்.

அவரின் தாமதத்தை உணர்ந்து கொண்ட பண்டிதர் ஒன்றுக்கும் யோசிக்காமல் சொல்லுங்க தம்பி. ஏதோ சொல்ல வந்திட்டு அதை நிறுத்திப் போட்டியள் போல.

இல்லை ஐயா எங்கட ஊர்களில பெண் பிள்ளைகள் படிக்கிற பள்ளிக்கூடங்களில அதிபர், ஆசிரியர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டியிருக்குது. அண்மையில ஒரு கல்லூரியில பெண் பிள்ளைகள் டான்ஸ் புரோகிராமிற்கு உடுப்பு மாத்துகிற அறையில யாரோ ஒரு பிரகிருதி கமரா போனை தயார் செய்து வைச்சிட்டாராம். அது தெரிய வந்திட்டுதாம். அதுதான் பெண் பிள்ளைகள் படிக்கிற பாடசாலைகளில இருக்கிற உடுப்பு மாற்றுகிற அறைகள் மற்றும் பாத்ரூம் போன்றவற்றில ஏதேனும் கமராக்கள், கமரா போனுகள் பொருத்தப்பட்டிருக்கோ என்று அதிபர், ஆசிரியர்கள் கண்காணிக்க வேணும். அதைத்தான் ஐயா சொல்ல வந்தனான்.

நல்லது தம்பி உங்கள் கருத்தை ஆலடி மாநாடு நிச்சயம் கவனத்தில எடுக்கும். இதுபோன்ற கருத்துக்கள் எங்களை விழிப்படையச் செய்யும் என்பதால இப்படியான தகவல்களை பொதுமக்கள் 0702202206 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தரலாம். பெயர் முக்கியமல்ல. சம்பவங்கள் உண்மையானவையாக இருக்க வேண்டும்.இப்படிப் பண்டிதர் கூறவும் தொலைபேசி இணைப்பு இரத்தாகவும் சரியாக இருந்தது.

தொலைபேசி சம்பாசனையை மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தனர். தொலைபேசி சம்பாசனை முடிந்த கையோடு எழுந்த கங்காணியார் பாடசாலை மைதானங்களில நடுகின்ற மரங்களையும் சிலர் வெட்டுவதாகக் கேள்வி. இதுபற்றியும் கவனம் செலுத்துறது நல்லது என்றார்.

என்ன மைதானங்களில நடுகிற மரங்களையும் வெட்டுகினமோ. ஏக்கத்தோடு மூப்பர் கேட்க அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# முதலமைச்சரைப் பலப்படுத்த தமிழ்மக்கள் எழுச்சி கொள்வர்



அடிப்படைப் பிரச்சினைகளில் கூட குரல் கொடுக்கின்ற தகைமையை இழந்து விட்ட கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறிவிட்டது.

ஒரு காலத்தில் ஒட்டு மொத்தத் தமிழ் மக்களினதும் நம்பிக்கைக்குரிய கட்சியாக இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலைமை என்ன என்பதை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை எந்தளவுக்கு சிதற உடைத்து அது இனி முளைக்கவும் மாட்டாது, தளைக்கவும் முடியாது என்றளவில் அதனை ஆக்கி விட்டதைப் பார்த்து இதுவே அந்தக் கட்சியின் வளர்ச்சி என்று நினைக்கின்ற மாவை. சேனாதிராஜா, துரைராஜசிங்கம் போன்றவர்களை நினைக்கும் போதெல்லாம் வேதனையைத் தவிர வேறு எதுவும் மிஞ்சாது.

அந்தளவிற்கு 23 ஆம் புலிகேசியின் போக்கில் அந்தக் கட்சியின் மூத்த தலைவர்கள் இருக்கின்றனர்.

இதுதான் என்றால் எந்தையும் முந்தையும் கட்டி வளர்த்த தமிழரசுக் கட்சியை நாமல்லோ வளர்த்தெடுக்க வேண்டுமென்று நினைத்து நேர்மையின் வழியில் தமிழினத்தின் நினைப்பில் வாழவேண்டிய அந்தக் கட்சியின் இளவல்கள் சிலர் அந்தக் கட்சியை உடைப்பதில் தீவிரம் காட்டுகின்றனர் எனும் போது, இது தமிழரசுக் கட்சியின் இறுதிக்காலம். அதனைத் தடுக்கவும் தவிர்க்கவும் முடியாது என்றளவில் நிலைமை வந்துவிட்டது.

இனி இது நமக்குத் தேவை வராது என்றளவில் தமிழரசுக் கட்சியை ஒரு சிலர் கொண்டு வந்து விட்ட பின்னர் அதனைத் திரும்பத் திரும்பப் பேசுவதால் ஆகப்போவது எதுவுமில்லை என்பது நிதர்சனமானது.

இந்த நிலையில் தான் புதிய அரசியல் தலைமை பற்றிய நினைப்பும் எதிர்பார்ப்பும் தமிழ் மக்களிடம் எழுந்துள்ளது.

அந்தப் புதிய தமிழ் அரசியல் தலைமையை உருவாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களிடமே இருக்கிறது.

அவ்வரை விட்டால் தமிழர்களுக்கான புதிய தமிழ் அரசியல் தலைமையை எவராலும் உருவாக்க முடியாது என்பது தெரிந்த உண்மை.

இதனால்தான் வடக்கின் முதலமைச்சரை அந்தப் பதவியில் இருந்து வெளியேற்ற வேண்டுமென்று கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் கருதி அதனை நிறைவேற்ற நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தனர்.

இரவோடு இரவாக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு சென்று ஆளுநரிடம் கையளித்தவர்களுக்கு தமிழ் மக்கள் தக்கபாடம் புகட்டினர்.

தங்களின் அரசியல் தலைவரை வெளியேற்ற விடமுடியாது. அவர் தங்களின் அரசியல் தலைவர். எனவே அவரை அந்தப் பதவியில் நிலைக்க வைப்பது எப்படி என்பது எங்களுக்குத் தெரியும் என்று சூளுரைத்த தமிழ் மக்கள்;

கடையடைப்பு, பேரணி எனப் பெரும் போராட்டத்தை நடத்த , தமிழரசுக் கட்சியின் தலைமை யாழ். ஆயரிடம் சென்று எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சி நிற்க, நிலைமை ஒரு மாதிரியாக சுமுகப்படுத்தப்பட்டது.

அன்றிலிருந்து இன்று வரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் பொது நிகழ்வுகளில் பயத்துடனேயே பங்கேற்கின்றனர். எந்தநேரமும் தமிழ் மக்கள் தங்களிடம் எந்தக் கேள்வியையும் எழுப்பலாம் என்ற அந்தப் பயம் இன்னமும் விடுபடவில்லை. இதன் உச்சம் தேர்தல் காலங்களில் தீவிரமாகலாம் என்பது வேறு.

## கீழ்த்தரமான விமர்சனங்களுக்கு தமிழ்மக்கள் பதிலடி கொடுப்பர்

இவை ஒரு புறமிருக்க, தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய வடக்கின் முதலமைச்சரை வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய ஒரு சிலர் கடுமையாக எதிர்க்கின்றனர். தாழ்தரத்தில் கருத்துரைக்கின்றனர் என்பது தான் தமிழ் மக்களை வேதனைப் படுத்தியுள்ள விடயம்.

இவ்வாறு முதலமைச்சரை கடுமையாக விமர்சிப்பவர்கள் தங்கள் விமர்சனத்தின் மூலம் தங்களின் இயல்பை பொதுமக்களுக்கு காட்டி நிற்கின்றனர்.

இந்த நாட்டின் நீதியரசராக, தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவராக, ஒரு பெரும் கனவானாக மதிக்கப்படுபவரை ஒரு சிலர் கண்டபாட்டில் விமர்சிக்கின்றனர் என்றால், அவர்கள் பற்றியதொரு கணிப்பை தமிழ் மக்கள் தங்களளவில் தீர்மானித்துக் கொள்வர்.

உண்மையில் இத்தகையவர்களை பாவங்கள் என்று சொல்வதைவிட வேறு வழியில்லை.

இவர்கள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களை மட்டுமே கடுமையாக விமர்சிக்க முடியும்.

ஏனெனில் தன்னை விமர்சிப்பவர்களை அவர்களளவில் கீழிறங்கி விமர்சிக்க மாட்டாதவர் முதலமைச்சர் மட்டுமே.

தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக் கூடிய யாரை விமர்சித்தாலும் அவர்கள் நீங்கள் முன்பு செய்தது தெரியாதா? என்று கேட்பார்கள்.

அந்தக் கேள்வி ஒன்று போதும் இவர்களைக் குலைநடுங்க வைப்பதற்கு.

பரவாயில்லை இத்தகையவர்களின் எதிர்ப்பு என்பது பெறுமதியற்றது. எனவே இதுபற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை.

ஆனாலும் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் அரசியல் தலைமை என்பதுதான் இங்கு முக்கியமானது.

அவரின் தலைமையில் தமிழ்மக்கள் புதிய அரசியல் வியூகம் அமைப்பதை தென்பகுதி அரசியல்வாதிகள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள் என்பதுடன் தென்பகுதி அரசியல்வாதிகளிடம் விலை போன தமிழ் அரசியல் வாதிகளும் அதனை ஜீரணிக்க மாட்டார்கள் என்பது தெரிந்த் உண்மை.

இவற்றையெல்லாம் எதிர்கொண்டு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் அரசியல் தலைமையை உருவாக்க வேண்டிய மிகப்பெரும் பொறுப்பை தமிழ் மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆம், நம்பிக்கையில் லாப் பிரேரணையைக் கொண்டு வந்தபோது அதனை முறியடித்து தங்கள் அரசியல் தலைவரை தமிழ்மக்கள் எங்ஙனம் பாதுகாத்தனரோ அதுபோல சிங்களப் பேரினவாதத்தின் ஊதுகுழலாக நின்று தமிழின அழிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் முதலமைச்சரை எதிர்க்கின்ற போது முதலமைச்சருக்குப் பக்கபலமாக தமிழ்மக்கள் எச்சந்தர்ப்பத்திலும் நின்றாக வேண்டும்.

தேவையாயின் அரசியல் போக்கிலித் தனங்களை வெட்டி விழுத்த தமிழ்மக்களின் எழுச்சி எந்நேரமும் வியாபகம் பெற்றாக வேண்டும்.

ஆம், இன்னும் இன்னும் முதலமைச்சரை எதிர்க்கின்றவர்களின் கீழ்மைத் தனங்கள் உச்சமடைந்தால் அதற்கு தக்கபாடம், புகட்ட தமிழ்மக்கள் கெம்பி எழவும் தயங்கமாட்டார்கள், தயங்கவும் கூடாது.

திருநீலகண்டன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம்
பகுதியில்
உங்கள் ஆக்கங்கள்
இடம்பெற
வேண்டும் என்றால்
உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி
வையுங்கள்.

# போட்டிபோடு



தலைமை ஆசிரியரிடமிருந்து சுற்றறிக்கை வந்திருந்தது. இந்த ஆண்டும் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நமது பள்ளியில் பல்வேறு போட்டிகள் நடைபெறுகிறது. ஆர்வமுள்ள மாணவர்கள் பங்கேற்கலாம். வெற்றி பெறுவோருக்குப் பரிசுகள் ஆண்டுவிழாவில் வழுங்கப்படும். பெயர்தர நாளை கடைசிநாள். இதுதான் சுற்றறிக்கையின் சாராம்சம். எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கான வகுப்பறை அது. வகுப்பாசிரியர் அறிக்கையைஒருமுறைஉரக்க வாசித்துவிட்டு நிமிர்ந்தார். சில மாணவர்கள் எழுந்து போட்டித் தலைப்புகளின் கீழ் தங்கள் பெயரைப்பதிவுசெய்தனர். பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி இரண்டிலும் பெயர்தர முத்து எழுந்தான்.

"டேய் முத்து! எப்படியும் உனக்குப் பரிசு கிடைக்கப் போறதில்ல! பிறகு எதுக்குடா பேர் கொடுக்குற?"- பின்னாலிருந்து அவன் நண்பர்கள் அவன் சட்டையைப் பிடித்து இழுத்தனர்.

அவர்கள் சொல்வது உண்மைதான். முத்துவிற்குப் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி இரண்டிலும் ஆர்வம் அதிகம். ஒவ்வொரு முறை போட்டி அறிவிக்கப்படும் போதும் அவன் அதில் தவறாமல் கலந்து கொள்வான். இருந்தும்என்னபயன்?ஒவ்வொரு முறையும்அவனது வகுப்புத் தோழர்களான கார்த்திக், விக்னேஷ் இருவரும் பரிசைத் தட்டிச் சென்று விடுவார்கள்.

(தொடரும்)

# கங்காரு



வயிற்றில் பையுடன் காணப்படும் விநோத விலங்கான கங்காரு அவுஸ்திரேலியாவிலும் நியூகினியாவிலும் அதிக அளவில் காணப்படுகின்றது.

இந்த விலங்குகளுக்கு முழு வளர்ச்சியடையாத நிலையில் தான் குட்டிகள் பிறக்கும். அந்தக் குட்டிகள் முழு வளர்ச்சியடையும் வரை தாய் தன் வயிற்றிலிருக்கும்பையில் வைத்து குட்டியை வளர்க்கும்.

கங்காருக்கள் மார்சுபியல் வகையில் மேக்ரோபோட் 'என்ற பிரிவினைச் சேர்ந்தவை. மேக்ரோபோட் என்பதற்கு மிகப் பெரிய பாதங்களைக் கொண்டவை என்பது பொருள்.

சிவப்பு கங்காரு, ஈஸ்டர் க்ரே கங்காரு, வெஸ்டர்ன் க்ரே கங்காரு, ஆண்டிலோப் கங்காரு என 4 வகைகள் உள்ளன. இதில், சிவப்பு கங்காரு மிகவும்பெரியது. வலிமையான பின்னங்கால்களையும் நீண்ட பாதங்களையுமுடைய கங்காருகள் மணிக்கு 40 முதல் 60 கிலோ மீற்றர் வேகம் ஓடும்.

கங்காருவின் வால் தசை மிகவும் வலுவானது. வேகமாக ஓடித் திரும்பும்போது கீழே விழாமல் சமன்படுத்தும் வேலையினை வால் செய்யும். எதிரிகளைத் தாக்கும்போது முன்னங்கால் அல்லது பின்னங்கால்களால் பலமான உதை கொடுக்கும்.

கங்காரு குட்டிகள் ஜோய் என்று அழைக்கப்படுகின்றன. பிறந்த கங்காரு குட்டி 2 கிராம் எடை மட்டுமே இருக்கும். சுமார் 6 மாதங்கள் அம்மாவின் வயிற்றுப் பையினுள் இருந்து முழு வளர்ச்சி பெறும்.

அவுஸ்திரேலியாவின் தேசிய முத்திரையில் இடம்பெற்றுள்ள பெருமை கங்காருக்கு உண்டு.

# பொது அறிவு

1)சாரணர் இயக்கத்தை உருவாக்கியவர்-பேடன் பவல்.
2)செஞ்சிலுவை இயக்கத்தை உருவாக்கியவர்-ஹென்றிடுனாட்
3)உலகின் மிகப் பெரிய கண்டம்- ஆசியாக் கண்டம்.
4)உலகில் மிகக் குறைந்த வார்த்தைகளை கொண்ட மொழி-இலத்தீன் மொழி.
5)உலகின் மிக நீளமான ஆறு-நைல் நதி
6)உலகிலே மிக அதிக மழை பெய்யும் இடம்-சீராப்புஞ்சி.
7)ஞாபகசக்தி அதிகமுள்ள பிராணி-யானை
8)சுதந்திர இலங்கையின் முதல் ஜனாதிபதி-வில்லியம் கோபல்லாவ.
9)சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர்-டி.எஸ்.சேனாநாயக்க

து.நிசாதனா
எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமம்.
யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்.

# கெப்லர்



யோகன்னஸ் கெப்லர் ஓர் செருமானியக் கணிதவியலாளர். அறிவியல் புரட்சியில் முக்கியமான ஒருவர். இவர் ஒரு வானியலாளராகவும் ஒரு சோதிடராகவும்கூடப் பெயர் பெற்றவர். இவர் எழுதிய Astronomia nova மற்றும் Harmonice Mundi ஆகிய நூல்களினூடு முன்வைக்கப்பட்ட கோள்களின் இயக்க விதிகளுக்காகப் பெரிதும் அறியப்பட்டவர்.

கெப்லர், கிராசு பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராகவும் இரண்டாவது உருடோல்பு பேரரசரின் அரசவைக் கணிதவியலாளராகவும் General Wallenstein அரசவைச் சோதிடராகவும் பணியாற்றியவர். இவர் கலிலியோ கலிலியின் சமகாலத்தவராவார். இவர் சிலவேளைகளில் "முதலாவது கோட்பாட்டு வானியற்பியலாளர்" எனக் குறிப்பிடப்படுகிறார்.



### முதல்வரை ஓரங்கட்ட நினைப் பவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**சயன் - யாழ்ப்பாணம்**

தம்பி ராசாக்களே! நீங்கள் முதல்வரை அவமதிக்கும் ஒவ்வொரு நிமிடத்திலும் முதல்வர் விக்னேஸ்வரன் தமிழர் மனங்களில் ஆழமாய் வேரூன்றுகிறார் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

அதுசரி பழமொழிகளையும்பாட்டுக்களையும்சொல்லி வசை பாடு. அடுத்த தடைவை உனக்கு "சீட்" கன் போம் என்று உசுப்பேத்தும் உங்களுக்கு எப்படி இது புரியும். ஒன்று மட்டும் உண்மை உங்களின் எந்த திருகுதாளமும் இனி எடுபடாது தம்பிகளா.

### உங்களுக்கும் நடிகை மும் தாஜ்க்கும் திருமணம் நடக்க கனவு கண்டேன் வியாசரே?

**தனு - அல்வாய்**

உன் கனவில் தீயை வைக்க. பிக்போஸ் வீடு படுற பாடு போதாதென்று வியாசர் வீடுமா. அது சரி இதற்கு என் மனைவி கும்தாஜ் ஒத்துக் கொள்ள வேண்டுமே.

### இந்த வன்முறைக் கலாசாரம் எங்கே போய் முடியும்?

**கலை - மிருசுவில்**

நடப்பதைப் பார்த்தால் எல்லாம் கையை மீறிச் சென்று விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. புனித பூமியாக போற்றப்படும் கோயில்வீதிக்கு அண்மையில் காதல் ஜோடிகள் சந்திக்கும் மையம் ஒன்றில் நடக்கும் கசமுசாக் களை ஒருவர் தொலைபேசியில் படமெ டுத்துக் காட்டினார். ஐயகோ என்று தலையில் அடிப்பதை விட வேறில்லை.

## இந்த வன்முறைக் கலாசாரம் எங்கே போய் முடியும்?



### தற்போது பந்து யார் கையில்?

**யுபா - கரவெட்டி**

நேர்மையாக விளையாடிக்கொண்டிருப்ப வர்களைப் பற்றிக் கேட்டால் சொல்லலாம். இது எப்போதுமே தங்கள் கைகளில் பந்து நிற்கும் படி செட்டப் செய்பவர்களை பற்றி என்ன சொல்ல. சத்தியமாக கூட்டமைப்பைச் சொல்ல வில்லை தம்பி.

### மதிப்பும் மரியாதையும் என் பது?

**செல்வா - இணுவில்**

இந்த இரண்டையும் மற்றவர்களுக்குக் கொடுத்து இதை மற்றவர்களிடமிருந்து நாம் வாங்க வேண்டும் என்பதை மறந்து நான் என்ன வும் செய்வேன். ஆனால் இந்த இரண்டும் எனக்குக் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களே அதிகம்.

### வேலைக்கு அனுபவம் கேட்ப வர்கள் திருமணத்திற்கு கேட் பதில்லையே?

**வேந்தன் - அச்சுவேலி**

பெண்ணுக்கு கொஞ்சம் கராத்தே தெரி யும் பரவாயில்லையா?

### ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு என்றாரே யேசுபிரான்?

**ஜெறோ - மாதகல்**

ஒரு கன்னத்தில் அறைந்தவர்கள் மறு கன்னத்திலும் அறை என்று பொறுமை யாய் நின்றால் அவன் செய்த தவறை உணர்ந்து திருந்த வழி பிறக்கும் என்பதே பொருள்.

ஆனால் இப்போது இரண்டு கன்னத்திலும் அறைந்து விட்டு வேறு கன்னம் இருந்தால் தா அறைகிறேன் எனும் கொடூர மனம் படைத்த வர்கள் மத்தியிலேயே நாம் வாழ்ந்து கொண்டி ருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது.




## மறக்கும் குணம் மனிதனுக்கு நல்லதுதானே வியாசரே?



### கதைத்தது ஒருநாள் ஆனால் மறக்க முடியவில்லை. இந்தக் காதல் உண்மைதானா?

**ஜனா - தனு - நெடியகாடு**

நாசமறுக்க. தெருவோரம் நிற்கும் கரம் சுண்டல் வண்டிக்காரனிடம் ஒருநாள் தான் சுண்டல் வாங்கிச் சாப்பிட்டிருப்போம் அதைக்கூட மறக்க முடியவில்லைத்தான்.

### ஜோக் ஒன்று சொல்லுங்கள் வியாசரே?

**கேதீஸ் - மாவிட்டபுரம்**

தொலைபேசியில், உன் மனைவியைக் கடத்தி வைத்திருக்கிறோம் ஐந்து இலட்சம் தந்தால்தான் விடுதலை செய்வோம். கணவன் ஓ... அப்படியா பத்து இலட்சம் தருகிறேன் நீங்களே வைத்திருங்கள்.

### இந்த காலகட்டத்தில் எவரையும் நம்ப முடியவில்லையே?

**லக்ஷன் - திருநாவற்கேணி**

மனிதர்களின் மனம் எப்படிப்பட்டது என்ப தற்கு ஒரு நல்ல உதாரணம் பிக்போஸ். பாருங்கள் மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது புரியும்.

### மனைவி என்பவர்?

**திசா - வரணி**

மனைவியும் மழையும் ஒன்று. வருமுன் எப்படா வரும் என எதிர்பார்த்து ஏங்கு வோம். வந்துவிட்டால் ஏன்டா வந்தது என புலம்புவோம். இதில் மழைக்கும் பின் கோடை - வரும். மனைவிக்குப் பின் புலம்பல் மட்டுமே இருக்கும்.

### மறக்கும் குணம் மனிதனுக்கு நல்லதுதானே வியாசரே?

**சேகர் - யாழ்ப்பாணம்**

மறக்கும் குணம் நல்லது தான். அதற்காக சில விடயங்களை மறப்பது முறையில்லை. முள்ளிவாய்க்காலில் எம் இனத்தை கொன் றொழித்ததை மறந்து விடமுடியுமா?

தமிழருக்கென்றிருந்த யாழ்.பொது நூலக த்தை எரித்து நாசமாக்கியதை மறந்து விட முடியுமா?

இனவெறி பிடித்து எம் இனத்தின் முதுகுகளில் சிறி அடையாளமிட்ட காட்டுமிராண்டித்தனத்தை மறந்துவிட முடியுமா? மறக்கவே முடியாது சிலவற்றை மீண்டும் மீண்டும் நினைப்பது தான் நல்லது.

### ரொனால்டோ-மெஸ்ஸி யார் சிறந்தவர்?

**துவா- கொக்குவில்**

கால்பந்தின் கடவுள்கள் என்று சொல் வதில் தவறேதும் இல்லை.

## இந்த காலகட்டத்தில் எவரையும் நம்ப முடியவில்லையே?

### கூட்டமைப்பின் தற்போதைய தேவை அபிவிருத்தியா? அரசி யலா?

**சுதன் - குப்பிளான்**

தங்கள் அபிவிருத்தி
தங்கள் அரசியல் இலாபம்.

இதுதான் தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கென்றுமாம் என்பது.



**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**



## இத்துன்பம் தீராதோ!

பிரசவ வலியை பொறுமையுடன் காத்தேன்
பிள்ளைச் செல்வம் கிடைக்கிறதுவென்று
பெருஞ் சுமையுடன் வாழ்கின்றேன் இன்று
போரால் தொலைந்த நீவருவாயென்று ..

வாய் விட்டழுது வயதாகிப் போகிறது
வயிறு குலுங்கி உடலும் தளர்கின்றது.
யுத்தமேடையில் காணாமல் போனாய்
யுகங்கள் கடந்தும் காத்திருப்பேன் வருவாயென்று

விழி சூர்ந்து பார்வை மங்கிப் போச்சுது
வீதியால் வருவது நீயாக இருக்குமென்று
நீள்தூரம் பார்த்துகண் வலியாகின்றது
நித்தம் தேட உயிர் களைத்துப் போகிறது

நான் நிம்மதியிழக்கும் போதெல்லாம்
நீயே ஆறுதல்கூறி என்னை ஆற்றிடுவாய்
உன்னையே நினைத்துதினம் அழுகின்றேன்
உனக்கது கேட்கவில்லை ஏனோ..

குருதியைப் பாலாக்கி உனக்குத் தந்தேன்
குடல் சுருக்கி உன்னைவளர்த்தேன்
காணாமல் போனோர் பட்டியலில் உன்னை
கண்ணீருடன் நான் சேர்ப்பதற்கா? சொல்

யசிதீபன்

## அழிப்பு

அகத்தில் நடந்ததை புறத்தில்
மறக்க முடியுமா
பகலவன் மறையும்
முதல் இராக்காலம் பூண்டது
முள்ளிவாய்க்கால்
அழுகுரல் ஓயவில்லை
வச்சு நெஞ்சம் படைத்தவர்
அச்சம் இல்லாமல் கொன்றனர்
அப்பனும் ஆத்தாளும்
சகோதரர் சகோதரிகள்
உற்றார் உறவினர் என
துடி துடித்தபடி பிணம் ஆனர்
மிஞ்சி இருந்தவர்கள்
அழுகுரல் ஓயவில்லை
குண்டு மழையும் குறையவில்லை
ஓடவும் முடியாமல்
ஒளியவும் முடியாமல்
தீயில் பொசுங்கிய பஞ்சாக
கருகிப்போன உயிரிகள்
கஞ்சி குடித்தாலும்
சொந்த மண்ணில் வாழ்ந்தவனை
கொன்று குவித்தவரை
மறந்து விட முடியுமா
அனலாக கொதிக்கிறது நெஞ்சு
தடயங்களென தொடர்கிறது அழிப்பு
விழுந்து விடமாட்டோம்
மீள்வோம் ஒருநாள்

எஸ்.ஏ.கோகுலன்
கோப்பாய்



## அவள் விடை பெறுகிறாள்

கழுத்தில் குப்பி இல்லை
கையில் துப்பாக்கியில்லை
மேனியில் போர் வீரனுக்கான
உடையும் இல்லை
காலில் சப்பாத்துகள் இல்லை
கட்டளையிட யாரும் இல்லை
நிலை எடுப்பதற்கு நிலமும் இல்லை
மனதளவில் மட்டும் கொள்கையில்
உறுதியாய் வாழ்ந்தவள்
சுகவீனத்தால் மரணித்துப் போகிறாள்
இறுதிநாள் அணிவகுப்பு மரியாதை
செய்ய யாருமில்லை
துப்பாக்கி வேட்டுக்கள் இல்லை
பூக்கள் அள்ளி எறிய கரங்கள் இல்லை
வித்துடலை சுமந்து செல்ல
தோழர்கள் இல்லை
புதைப்பதற்கு புதைகுழி இல்லை
தேசிய கீதம் இசைப்பதற்கு தேசம் இல்லை
காற்று மட்டும் அவள்
உடல் எரித்து செல்கிறது
எரியும் ஒளியிலே அவள் விழிகளும்
கனவு கண்ட தேசமும்

ஆ.முல்லைதிவ்யன்

## வாள் எடுத்த ராசாவே

05

வாள் எடுத்து பிறர்
வாழ்வழிக்கும் ராசாவே

தூக்கணாங்குருவிக்குஞ்சு
கூட்டிலிருந்து தவறிவிழ
குஞ்சுகளைப் பத்திரமாய்
தாயுடனே சேர்த்துவிட்டு
பாசமாய் எனை வந்து
பற்றி முத்தம் தந்தாயே
பாரியடா நீ என்று
பாசம் நான் பொழிந்தேனே
பாவியாய் நீ இன்று
வாளுடன் வீதியிலா?

வீதியில் உனைக்கண்ட
உற்றார் உறவினர்கள்
நீ கூடாத கூட்டங்கள்
கூடுகின்றாய் என்ற போது
கூடான் என் மகன்
கூடாத கூட்டமென்று
உனை மலையாய் நம்பினேனே

என் நம்பிக்கை விழுதுகளை
வீசி எறிந்தாயே - வாளால்
வீசி அழித்தாயே

ஐந்துக்கும் பத்துக்கும்
அடுத்தவர் கை ஏந்தி நிற்க
ஆயிரம் ரூபாவை உன்
பொக்கட்டில் வைப்பேனே
இடிந்ததடா என் கோட்டை
இனி என் செய்வேன் இறைவா!

பெற்ற மகன் - எமை
பெருமைப்படுத்துவான் என்று
பெருங்கோட்டை கட்டினோம்
அக்கோட்டை இடிந்ததடா
எம் வாழ்வில் பேரிடி வீழ்ந்ததடா

(அடுத்தவாரம் ராசா வருவான்..)

மாவை. நா. கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 407



## நாவடக்கம்

ஆக்ரோஷமாகப் பாயும்
ஜல்லிக்கட்டுக் காளையை
அடக்க முயலும்
பெண் வீராங்கனைகளே
அதுபோல நம்
நாவையும் அடக்கினால்
உலகில் வீண் பிரச்சினைகளை
நாம் என்றும் தவிர்த்திடலாம்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## சாதனைப் பெண்களே!

காளை அடக்குதற்கு
களமிறங்கிய கன்னியரே
முரட்டுக்காளை தனை
முன்வந்து நீர் அடக்கி
அடுக்களையில் மட்டுமன்றி
அகிலமெல்லாம் சாதிப்போம்
பாரினிலே சாதிக்கப் பிறந்தவர் நாம்
பாரதியின் கனவுப் பெண்கள்
என்று சாதித்து நிற்கின்றீர்
உம் சாதனையை மெச்சுகின்றேன்

சி.கஜா
முரசுமோட்டை

## துணிவுடன் போராடுங்கள்

காமுகர் கையில் சிக்கி
கற்பிழந்து தவிக்கும் பெண்கள்
தாமும் இம்மண்ணில் தகுதியான
வீராங்கனைகளென்று காட்ட
பாரம்பரிய விளையாட்டான
ஜல்லிக்கட்டுக்காளை அடக்க
துள்ளிப் பாய்ந்து மல்லுக்கட்டி
தினவெடுத்த காளையை
துணிந்து தீரமுடன் போராடி
அடக்கும் புதுமைப் பெண்களை
பாராட்டுவோம் மகிழ்வோடு
இளைஞர்களே திருந்துவீர்களா?

துரை, தென்மட்டுவில்

## நங்கையர் துணிவு

ஆண்களின் வீரத்திற்கு
குறைந்தவர்கள் அல்ல நாங்கள்
என எடுத்துக்காட்டும்
வீரத்தமிழ் நங்கையர்களே!
ஆண்களோடு பெண்களும்
சரி நிகர் சமனாக வாழ
கங்கணம் கட்டி
நிற்கும் மங்கையர்களே!
காளைகளை அடக்குவது
மட்டுமன்றி நம்மிடையே
நடமாடும்
மனிதக்காளைகளையும்
அடக்க திடசங்கற்பம் எடுத்து
நில்லுங்கள்
உங்கள் வீரம் வாழ்க!

அபிகுலமாலிகா
சங்கானை

## காளை அடக்கு

சங்க காலத்தில் காளையை
காளை அடக்கினால்
கன்னியவளுக்கு மாலை சூடலாம்
இருபதாம் நூற்றாண்டில்
கன்னியர்கள் காளையை
அடக்குகிறார்கள்
வீரம் காளையர்களுக்கு
மட்டுமல்ல
கன்னியர்களுக்கும் பொருந்தும்

உமா வேல்முருகன்

மாட்டுடன் மல்லுக்கட்டும்
மங்கையே
நேற்று நீ அடுப்படியில்
இன்றோ வீரமாய்
எழுந்துவிட்டாய்
இனி உன் வழி
சிறக்கும் நிச்சயம்

சரோ, அல்வாய்

# இவ்வார மௌனத்தின் தேடல் -408



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

## அவ(தாரம்)

அந்தக் காலத்தில்
காளையை
அடக்கிய ஆணுக்குத்தான்
பெண் என்று (ஆனால்)
காளையை அடக்குகிற
பெண்ணுக்கு
ஆண் மகனை விற்றால்
தகுமா...?
நிச்சயமாக
இந்தக் காலத்தில்
காமவெறி பிடித்த
ஆண்களை
அடக்கியாளும்
பெண்களுக்கு ஆண்
மகன்களை விற்றால்
அது மிகையாகாது

இரா.ஜெ.துஷ்யந்தா

## வீர விளையாட்டு

வீர விளையாட்டில்- நாம்
ஆண்களுக்கிங்கே
சளைத்தவர்கள் அல்ல
சாதனை செய்வோம்
என்றே இவர்கள்
புறப்பட்டார் பாரும்
காளையை அடக்குவது
காளையர் தாம் என்ற
நிலை மாறி
கன்னியருமிங்கே
கணப்பொழுதில்
காளையை அடக்கி
வீரம் காட்டி
உலகை வெல்லும்
பெருமை கொண்டார்
தமிழ் மரபு காத்தார்

சி.திவ்வியா
யா/ப/மெ/ம/வி



# தோற்றவர்களல்ல தோற்கடிக்கப் பட்டவர்கள்

சிறுகதை

**சனாவின் காதுகளுக்குள் புகுந்த அச்செய்தி அவளது மூளைக் குள்ளே புதுப்போர்க்களமமைத்தது. துயரங்கள் ஆயுதமாக, கண்ணீரால் போராடினாள் அந்த வேங்கை. காலங்கள்தான் மனக் காயங்களின் மருந்தாகும் என்று சொல்வார்கள்**

அழகாக எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் அந்தத் தொடர்கதையைப் படித்துக்கொண்டிருந்த சனா, இறைவனால் விடுகதையாய் படைக்கப்பட்ட தனக்கான விடையைத் தெரியாது விழித்தாள். விழிகளில் நீர் சுமந்தாள். கண்களைக் குளமாக்கினாள். பெருமூச்சை உட்கொண்டாள். ஜீரணமாகா எத்தனை துன்பங்களை இன்றுவரை புசித்துக்கொண்டாள் என்பது அவளுக்கு தெரியாது. தெளிந்த நீரோடையைப் போல சிறுதுள்ளலுடன் சிறகை விரித்துப் பறந்த இந்த அழகிய பறவையின் கால்களை வெட்டியது யாரோ?

"சனா" வெள்ளையும் கறுப்புமற்ற நிறமுடையவள். நல்ல உயரமுடைய மெலிந்த தேகத்திற்குச் சொந்தக்காரி. நீண்ட தலைமுடியில் நிம்மதியை இழந்த இளைஞர்கள் ஏராளம். இவளிடம் காதலன் பதவியைப் பெற்றுக்கொள்ள அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் ஏராளம். இருந்தும் எதனையும் பரிசீலிக்க இவள் விரும்பவில்லை. நாட்டுக்காக எதையாவது செய்யவேண்டுமென்ற துடிப்பு. அன்று பதினாறு வயதிலேயே அவளைப் போராளியாக்கி விட்டிருந்தது. அவளது கரம்பட்டுத் தவழ்ந்த துப்பாக்கி பல உயிர்களுக்கு நிரந்தர விசா கொடுத்தது. அவளது படையணியின் வீரம் எல்லோருக்கும் தெரிந்ததால் பல போர்க்களங்களை நேரிலே கண்டவள்.

பூமிப்பந்தின் பொய்கையில் தாமரையானவள் நெஞ்சிலே "ஆதவன்" மெல்லப் புகுந்து காதலனாக முயல்கிறான். இவள் தவிர்க்கிறாள். அவன் தவிக்கிறான். இறுதியில் காதல் வெற்றிக் கொடி கட்ட அவள் ஆதவனின் ஆதனமாகிறாள். தலைவனின் சம்மதத்துடன் திருமணம் காணக் காத்திருந்தன இந்த இரு இதயங்களும்.

மெல்ல மெல்லப் போரின் அறிகுறிகள் தலைகாட்ட எப்படியும் வெல்வோம், எதிரியை ஒழிப்போம். இருவரும் இணைந்து இனியதொரு காதல் கவிதை படைப்போமென இருந்த நேசப் பறவைகளிரண்டும் தேசங்காக்கத் துணிந்து இரு வேறு திசைகளில் பறந்தன.

இறுதியாக ஆதவனும் சனாவும் சந்தித்த நாள் தை மாதம் பத்தாம் திகதி. முப்பது நிமிடங்கள் இருவரும் இணைந்திருந்த தருணங்கள் சொர்க்கத்தை அவள் காலடியில் வைத்தது. கண்கள் நான்கும் பேசிக் கொண்டன புதுமொழியில். வார்த்தைகளை மறந்திருந்தனர் இருவரும். கைகளே தொட்டுக் கொள்ளாத காதலர்கள். ஆனால் அன்று ஆதவனின் நடத்தையில் பல மாறுதல்களை அவள் கண்டாள். அவள் மடிமேலே சில நொடிகள் தலை சாய்த்தான். இறுதி நொடி அவள் எதிர்பாராத தருணம். சனாவின் வலக் கன்னத்தில் ஓர் இன்ப அதிர்ச்சி. கண்ணடித்துச் சிரித்து. அவள் கன்னத்தில் செல்லமாய்த் தட்டி. அவன் கையசைத்துப் போகிறான் சிறு புன்னகையுடன் தூரமாய். அதிர்வடைந்த கன்னத்தில் தொட்டபடி ஏக்கம், சந்தோசம், அதிர்ச்சி, பூரிப்பு, வெட்கம் எல்லாம் இணைய அவன் சென்ற வழிமீது விழி நோக்கினாள். அவன் மறைந்து விட்டான். கண்களுக்குள் அவள் சிரித்துக் கொண்டே சென்ற விம்பம் அவளை இறக்கைகளைக் கட்டிக் கொண்டு பறக்கச் சொன்னது.

2009 பங்குனி 25 மாலை நேரம் செய்தி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. அங்கு மக்கள் சாப்பிடுகிறார்களோ இல்லையோ செய்திகளைக் கேட்காமல் ஒருபோதும் இருக்க மாட்டார்கள். இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் லெப்டினன் கேணல் ஆதவன் வீரச் சாவடைந்துள்ளார். புலிகளின் குரல் செய்தி தொடர்ந்து சென்றது. சனாவின் காதுகளுக் குள் புகுந்த அச்செய்தி அவளது மூளைக் குள்ளே புதுப்போர்க்கள மமைத்தது. துயரங்கள் ஆயுதமாக, கண் ணீரால் போராடினாள் அந்த வேங்கை. காலங்கள் தான் மனக்காயங்களின் மருந்தாகும் என்று சொல்வார்கள். ஆனால் காலங்கள் நீள நீள சனாவின் காயம் சீழ்பிடித்து பெரு வேதனையைக் கொடுத்தது. ஏனோ தெரியவில்லை அவள் உயிரை விட வில்லை. சில நேரங்களில் வீரச் சாவடைந்தவர் என அறி விக்கப்பட்டவர்கள் இராணு வத்தினரிடம் பிடிபட்டு உயிருடன் இருப்பதுண்டு.

ஆதவனின் சடலமும் கிடைக்காத பட்சத்தில் அவன் எங் காவது தனக்காய் வாழ்ந்து கொண்டிருப்பா னென எண்ணியதாலோ என்னவோ உயிரைக் கையிலே இறுக்கிப் பிடித்து வாழ்கிறாள்.

பல சமர்கள் கண்டவள் முள்ளிவாய்க்காலின் இறுதி யுத்தத்தில் பங்கெடுக்க எண்ணவில்லை. தன் இடம் விட்டுத் தப்பியோடி ஆட்களற்ற குடிசை ஒன்றிலே பெண் உடைகளை அணிந்து தனது ஜீன்சையும் சேட்டையும் கழற்றினாள். தன்புலி வேசத்தை மாற்றி நெற்றியிலே திலகமிட்டு பொதுமக்களில் ஒருத்தியாக நடையயில்கிறாள் வேகமாய்.

முகாம் வாழ்வு முடித்து தன் தாய் தந்தையரைத் தேடி அவர்களுடன் இணைந்துவிட்டாள். அன்று வன்னி மண்ணை முத்தமிட்டு நரப்போக்கின் ஓடைக்கரையில் ஓர் குடிலமைத்து வாழ்கிறாள்.

பற்றைகள் நிறைந்து மயானம் போல அந்த இடம் காணப்பட்டாலும் தன்னைப் பெற்ற பூமித்தாயை தடவி நேசிக்கிறாள் அவள். தாய் தந்தையர் இருவரும் வேலைக்குச் செல்ல தனித்திருந்த ஓர் அந்திப்பொழுது விளக்கேற்றிவிட்டு வீட்டுக்குள் சென்றவள் கண்மூடி இறைவனை வேண்டிய நொடிப்பொழுது.

இரண்டு வலிய கரங்களுக்குள் மாட்டுப்பட்டுத் தவியாய்த் தவித்தாள். வாய் துணிகளால் கட்டப்பட்டு கண்களும் மறைக்கப்பட்டன. எத்தனையோ பயிற்சிகளை எடுத்த அவளால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியிலே தோல்வியை மட்டுமே காண முடிந்தது. சில நொடிப் பொழு துகள் முடிய அப் பிடியே சாய்ந்து விட் டாள். " டொக் டொக்" எனப் பல சப்பாத்துக் காலடி ஓசை அவள் காதுகளுக்குள் வர மெல்லத் தன்னைச் சுதாகரித்து கண் கட்டுகளையும் வாய்த்துணிகளையும் அகற் றினாள் அவள்.

குடிசைக்குள் எட்டிப்பார்த்த முகத்தை மறைத்த உருவம் ஒன்று அவளருகில் வந்தது. கண்களில் ஓர் ஏக்கம், கவலை, மெல்ல அவள் தலையைத் தடவி விட்டுச் செல்கிறது. காரணம் அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.தனக்கு நடந்த விபத்தினால் இன்றுஓர் உயிரை வயிற்றிலே வளர்க்கிறாள் அவள். இன்று அவள் ஓர்தாய். பெற்றோரால் ஜீரணிக்க முடியாத துன்பம்.

சனா பேப்பரை மடித்து ஓரமாய் வைக்கிறாள். தன் வயிற்றை மெல்லத் தடவி ஓர் முடிவுடன் எழுதிகிறாள்.




தன்னுள் உள்ள உயி ரின் தந்தை யாரெனத் தன்னாலே கூடக் காட்ட முடியாத நிலை.

"அம்மா என்னைக் கொல்லப் போறியாம் மா? வேண்டாமம்மா, நான் உன்னைப் போல வளர்வேனம்மா. என்னைக் கொல்லாதே. எனக்கு வலிக்கும ல்லே. நானழுதாலும் உனக்குக் கேட்காதும்மா. ஓடி ஓடி ஒளிந்தாலும் உன் வயிற்றுக் குள் தானே என்னால் ஒளிய முடியும். வேண் டாம் அம்மா என்னை விட்டுவிடு"

சனாவின் காதுகளுக்குள் மழலை மொழி கேட்க அவள் தன் முடிவை மாற்றி எழுதுகிறாள் பெரு மூச்சுடன்... தமிழர்கள் தோற்கவில்லை, துரோகத்தால் தோற் கடிக்கப்பட்டவர்கள்.


இரா. நவதர்சினி நரா
வயாவிளான்



# பாகிஸ்தானில் பாதுகாக்கப்படுமா ஜனநாயகம்?

## சர்வதேச அரசியல் பார்வை





தெற்காசியாவில் மிகப் பெரிய ஜனநாயக நாடாக உருவாக வேண்டிய பாகிஸ்தான் இன்று ஜனநாயகத்தைப் பாதுகாக்க கடும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. 1947 ஆம் ஆண்டு மொகமட் அலி ஜின்னா தலைமையில் இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்த போது யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் இவ்வாறு கீழ்நோக்கிய ஜனநாயகத்திற்கு பாகிஸ்தான் செல்லும் என்று. ஜின்னாவின் மரணத்தைத் தொடர்ந்து ஜனநாயகத்தைத் தக்கவைப்பதற்காக பாகிஸ்தான் நடத்தும் போராட்டமானது மிகப் பரிதாபத்திற்குரியதாகும்.

காலனித்துவத்தின் பிடியில் இருந்து விடுபட்டு தனிநாடாக உருமாறிக் கொண்டாலும் காலனித்துவ ஆட்சிக் காலத்தின் இறுக்கமான இராணுவப் பண்புகளை பாகிஸ்தான் தொடர்ந்து பின்பற்றுகின்றது. பாகிஸ்தானை உதாரணமாகக் கொண்டே பாகிஸ்தானின் அறிஞரான ஹம்சா அலாவின் காலனித்துவம் தொடர்பான கோட்பாட்டை உருவாக்கினார்.

வெளியுலகிற்குத் தன்னை ஜன நாயகம் எனக்காட்டிக் கொண்டாலும் அது ஒரு எதிர் ஜனநாயகத்தையே பின்பற்றுகிறது. மக்களாட்சி, இராணுவ ஆட்சி என்ற ஹைபிறட் ஆட்சிக்குள் அகப்பட்டுக் கொண்டு அது வரலாற்றில் பயணிக்கின்றது. 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற ஒரு வெளிப்படைத் தன்மையான தேர்தலுக்குப் பின்னர் 2018 ஆம் ஆண்டே ஒரு வெளிப்படைத் தேர்தலை அது நடத்தியிருக்கின்றது. ஆனாலும் அதனையும் நிராகரிக்கின்றார்கள் மனித வுரிமைகள் ஆர்வலர்கள்.

ஐந்து வருட பதவிக் காலத்தைக் கொண்ட பாகிஸ்தான் தேர்தலில் சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் இன்றுவரை எந்தவொரு பிரதமரும் ஐந்து வருட பதவிக்காலத்தை பூர்த்தி செய்திருக்கவில்லை. இடைக்காலத்தில் ஆட்சி வீழ்ச்சியடைவது இராணுவ ஆட்சி என்று பாகிஸ்தான் ஜனநாயகம் அடிக்கடி தாக்குதலுக்கு உள்ளாகின்றது. நான்கு இராணுவ ஆட்சியாளர்களின் பிடியில் அது சிக்குண்டிருந்தது. இதன்மூலம் ஆட்சியில் இராணுவத்தின் செல்வாக்கை மதிப்பிட முடியும்.

தற்போது நடந்து முடிந்திருக்கின்ற தேர்தல்கூட முற்றுமுழுதாக இராணுவத்தின் பூரண ஒத்துழைப்பு மற்றும் அனுசரணையிலேயே இடம்பெற்றதாக இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற கட்சிகள் மற்றும் மனிதவுரிமை அமைப்புக்கள் குற்றம்சாட்டுகின்றன. 2013 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (பி.எம்.எல்.ந) நவாஸ் ஆட்சி இத்தேர்தலின் மூலம் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியாக இருந்த முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்றீக்- எ- கின்சாப (பி.டி.ஐ) கட்சி முதன்முதலாக பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுள்ளது. சட்டசபையின் 342 இடங்களில் 272 இடங்களுக்கு நேரடியாகத் தேர்தல் நடத்தப்படும். ஏனைய 70 இடங்களுக்கு பெண்கள் மற்றும் சிறுபான்மையினருக்கு விகிதாசார அடிப்படையில் ஒதுக்கப்படும்.

இதில் 272 இடங்களில் 270 இடத்திற்கான தேர்தல் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றது. அத்துடன் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், கைபர் பக்துங்க்வா ஆகிய மாகாண சட்ட சபைக்கான தேர்தலும் இடம் பெற்றது. இதில் உலகத்தின் கவனத்தை சட்டமன்றமான பாராளுமன்ற தேர்தலே ஈர்த்திருந்தது.

ஆளும் முஸ்லிம்லீக் கட்சியின் தலைவர் நவாஸ் ஷெரீப் ஊழல் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டு இருப்பதனால் அவரின் சகோதரரான சஹாபாஸ் ஷெரீப் தலைமையில் அக்கட்சி தேர்தலில் களமிறங்கியது. பிரதான எதிர்க்கட்சியான இம்ரான் கானின் பி.டி.ஐ. இம்ரான்கானை பிரதமர் வேட்பாளராக நிறுத்தி தேர்தலில் போட்டியிட்டது. மூன் றாவதாக பாகிஸ்தான் மக்கள் கட்சி (பி.பி.பி) முன்னாள் பிரதமர் பெனாஷீர் பூட்டோவின் மகனான 24 வயதையுடைய பிலாவால் பூட்டோ தலைமையில் போட்டியிட்டதுடன் இன்னும் பல மதவாத, தீவிரவாத கட்சிகளும் தேர்தலில் போட்டியிட்டன.

எனினும் பி.எம்.எல்.ந., பி.டி.ஐ. பி.பி.பி. ஆகிய கட்சிகளுக்கு இடையிலேயே மிகப் பெரிய போட்டி நிலவியது. 89 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. 4 இலட்சம் பொலிஸார், 3 இலட்சத்து 71 ஆயிரம் இராணுவ வீரர்கள் பணியமர்த்தப்பட்டும் இராணுவ ஆதிக்கம், தீவிரவாதிகளின் அச்சுறுத்தல், குண்டுவெடிப்பு, வேட்பாளர்கள் சுட்டுக்கொலை என்று மிகப்பெரிய ஜனநாயக அச்சுறுத்தலுக்கு மத்தியில் நடைபெற்ற தேர்தலில் இம்ரான் கானின் கட்சி மொத்தத் தொகுதிகளில் 116 இடங்களையும் பி.எம்.எல்.கட்சி 64 இடங்களையும் பி.பி.பி.கட்சி 43 இடங்களையும் கைப்பற்றியதுடன் ஏனைய இடங்களை உதிரி கட்சிகளும் சில சுயேட்சைக் குழுக்களும் பகிர்ந்து கொண்டன. தன்னுடைய 22 வருட அரசியல் வாழ்க்கைப் பயணத்தில் 65 வயதான இம்ரான்கான் பிரதமராகும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார். நீண்ட கடினமான பயணத்தின் ஊடாக அவர் இவ்இடத்தை இன்று அடைந்துள்ளார். ஆனாலும் ஆட்சி அமைப்பதற்கு 137 இடங்கள் தேவையாக இருப்பதனால் அவரால் கூட்டணி ஆட்சியையே அமைக்க முடியும்.

இம்ரான் கானின் ஆரம்பமே நெருக்கடியாக தொடங்குகின்றது. ஏனெனில், உதிரிக்கட்சிகளும் சுயேட்சைகளும் இந்த தேர்தல் முடிவை நிராகரித்திருப்பதனால் அவர்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைப்பதில் பல இடர்பாடுகளை இம்ரான்கான் சந்திக்கின்றார்.

எனினும் ஒகஸ்ட் 14 ஆம் திகதியான பாகிஸ்தான் சுதந்திர தினத்திற்கு முன்னர் அவர் ஆட்சியமைப்பதில் குறியாக உள்ளார். இதுபற்றி இம்ரான் கானின் கட்சியின் மூத்த தலைவர் நயீனுல் ஹக் குறிப்பிடும் போது தேவையான ஆதர வைப் பெற்று விடுவோம். எனவே இம்ரான் கான் ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதிக்குள் பிரதமராக பதவியேற்பார் எனக் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் சட்ட முறையின் படி தேர்தல் நடைபெற்று 21 நாட்களுக்குள் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கூட்டி உறுப்பினர்கள் பதவியேற்க வேண்டும் என்ற நிலையில் தீவிரமான கூட்டணி பேச்சுவார்த்தையில் அவர் ஈடுபட்டுள்ளார். தெற்காசியாவின் கூட்டணி அரசியல் கலாசாரத்தில் பாகிஸ்தானும் விதி விலக்கல்ல. இதனால் தன்னுடைய கொள்கையில் நெகிழ்வுப் போக்கினைக் கடைப்பிடித்து ஆட்சியமைக்க முனைவார் என்று நம்பலாம். இரான்கான் பிரதமராக பதவியேற்பது பாகிஸ்தான் அரசியலுக்குப் புதிதாகவும் இம்ரான்கானுக்கு மிகச் சவாலானதுமாகும். இதுவரை காலமும் குடும்ப ஆட்சிகளே பாகிஸ்தானில் நடைபெற்றது. அதனை பாகிஸ்தானிய மக்கள் நிராகரித்து புதிய ஓர் அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். இம்ரான் கானின் கிரிக்கெட்டின் முகம் அவரை இன்று வெற்றி பெற வைத்திருந்தாலும் அரசியலில் அதுவும் பாகிஸ்தான் அரசியலில் அவர் நின்று தாக்குப்பிடிப்பது என்பது மிகப்பெரிய ஒரு சவாலாகும்.

புவிசார் அரசியலுக்குள் அக்பட்டிருக்கும் பாகிஸ்தானை மீட்பது என்பது கடினமானதாகும். ஒரு பக்க எல்லையில் இந்தியாவின் நெருக்கடியும் மறுபக்க எல்லையில் ஆப்கானிஸ்தான் தீவிரவாத அச்சுறுத்தலும் இன்னோர் பக்கம் சீனாவின் ஆதிக்கம் பாகிஸ்தான் அரசியலை ஒரு அடி நகர்த்துவதற்கே கடினமானதாகும். உலக அரங்கில் பாகிஸ்தான் மீது ஏற்பட்டுள்ள எதிர்மறை விமர்சனங்கள், உள்நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரம், கிளைகள் விட்டுப் படர்ந்துள்ள தீவிரவாதம், ஆட்சியின் மூலை முடுக்கெல்லாம் ஆதிக்கம் செலுத்தும் இராணுவம் என்று ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் பூதங்களுக்கு மத்தியில் ஆட்சி செய்யவேண்டிய கட்டாயம் இம்ரான் கானுக்கு உண்டு. "மாற்றம்" என்ற ஒற்றைச் சொல்லின் ஊடாக வெற்றி பெற்றுள்ள இம்ரான் கான் ஓர் இராணுவ ஆதரவாளர், தீவிரவாதிகளின் அபிமானி என்ற விமர்சனங்கள் உள்வாரியாகவும் அவர் ஓர் கடும் போக்காளர் என்ற விமர்சனத்தை இந்தியா வெளிவாரியாகவும் முன்வைக்கின்றது. இதனை யெல்லாம் அவர் வெற்றி கண்டு ஆட்சியை முன்னெடுக்க வேண்டும்.

தேர்தல் முடிவில் தன் வெற்றி உறுதியானதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களைச் சந்தித்த போது சீனாவைப் போல பாகிஸ்தானை மாற்றும் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார். அத்துடன் இந்தியாவுடன் சகல பிரச்சினைகளையும் விட்டுக்கொடுப்புடன் போகத் தயார் என்றும் அறிவித்திருக்கின்றார். இந்தியா காஷ்மீர் விவகாரத்தில் ஒரு அடி முன்வைத்தால் பாகிஸ்தான் இரண்டு அடி முன்வைக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். நிச்சயம் பாகிஸ்தானின் எதிர்கால அரசிய லுக்கும் சீனாவின் ஊடுருவல் பலமாக அமையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

பூகோள பிராந்தியத்தில் தன்னுடைய முத்துமாலை திட்டத்தில் முதன்மை நாடாக சீனா பாகிஸ்தானைப் பார்க்கின்றது. அத்துடன் இந்தியாவுக்கு எதிராக சீனாவுடன் ஒரு விசுவாசமான உறவினை பாகிஸ்தான் பேண முயல்கின்றது. அதே போல் இந்தியாவை எதிர்க்க சீனாவும் பாகிஸ்தானுடன் நெருக்கம் காட்டுகின்றது. சீனாவைப் பொறுத்தவரையில் ஜனநாயக மறுப்பு என்பது அதன் அரசியல் பண்பாடு ஆகும். பாகிஸ்தான் வரலாறும் அதுவாகும். அதனால் ஜனநாயகத்தை கட்டிக் காக்க வேண்டும் என்ற தேவைக்கு அப்பால் நலன்களை அடையும் போக்கே இவ்விரு நாடுகளுக்கும் காணப்படுகின்றன.

இம்ரான் கானைப் பொறுத்தவரை அவர் ஆட்சியின் தலைமைப் பதவிக்கு வராவிட்டாலும் நீண்டகால பாகிஸ்தான் அரசியலில் பரீட்சயமானவர். பிரதமராக பதவியேற்று பாகிஸ்தானை வழிநடத்தும் ஆற்றல் அவரிடம் இருந்தாலும் அவரைச் சுற்றிக் காணப்படும் ஜனநாயக எதிர்ப்பு முட்கள் அவரை நிச்சயம் சுயாதீனமாக இயங்க விடாது. குறிப்பாக இராணுவத்தின் ஒரு பொம்மையாக அவர் செயற்பட வேண்டும். கிரிக்கெட்டில் எவ்வாறு தற்துணிவு முடிவுகளை தைரியமாக எடுத்தாரோ அவ்வாறு அரசியலில் அவர் எடுக்க வேண்டும் என்பதே ஜனநாயக ஆர்வலர்களின் கருத்தாகும்.

இம்ரான் கானிற்கு முன்னால் இரண்டு தெரிவே உண்டு. ஒன்று சட்டவாட்சி, யாப்புறு அரசாங்கம், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, மக்கள் இறைமை, சுதந்திர தேர்தல், சுயாதீன அமைப்புக்க ளின் செயற்பாடு, சமத்துவம், உரிமை, சுதந்திரம் ஆகிய ஜனநாய்கப் பண்புகளை தற்துணிவுடன் அமுலாக்குதல். மற்றையது மதவாதம், தீவிரவாதம், இராணுவவாதம் ஆகியவற்றுடன் தன்னையும் பங்காளராக இணைத்துக் கொள்வது. பாகிஸ்தான் வரலாற்றில் ஆட்சியாளர்களுக்கு இரண்டாவதே பழக்கப்பட்டது. இம்ரான்கானும்பாகிஸ்தானியர்தானே.

**எஸ்.கோகுலன்,**
**வட்டுக்கோட்டை**

## யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆற்றுகையான

# அரங்க விழா-2018

ஒரு நோக்கு...

உயிர்ப்புள்ள உன்னத நாட்களாய் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை தொடக்கம் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரையான மூன்று நாட்கள் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் பொலிந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெறுவெளி நுண்கலைத் துறை அமைந்த அரங்கவிழா- 2018 எழுப்பிய எண்ணங்களைப் பகிர்வது சுவையானதாகும்.

"அரங்கவிழா" என்று நுண்மை கொள்ளினும் அவைஞரைப் பொறுத்து அது நாடக விழாவேயாம். பொருளியல் மண்டபத்தில் நாடகம் பற்றியதாம் பொருண்மை வெளிப்பாடும், இராமநாதன் மண்டப முன்றலிலே தெருவெளி நாடகமாய் மாயமானும் வசந்தன் கூத்தும் கைலாசபதி கலை அரங்கில் நடனங்கள், நாடகங்கள் எனப்பல ஆற்றுகையும் நிறைந்ததுவாய் அரங்கவிழா ஊட்டங்கள் சேர்ந்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இயல், இசை, நாடகம் எனப்பல நிகழ்வுகளை காலத்திற்குக் காலம் ஆற்றிவருகிறது. கழகத்தின் பின்னெழுந்த கைலாசபதி கலை அரங்கில் கூட கருத்தரங்கும் கவியரங்கும் ஆய்வரங்கும் உரையரங்கும் என்று இயல் நிகழ்வுகள் பல இடம்பெற்றிருக்கின்றன. நுண்கலைப் பீட இசை நிகழ்வுகள் மட்டுமன்றி கம்பன் கழகம் முன்னெடுத்த இசைவேள்வி நிகழ்வும் இனிப்புத் தந்திருக்கின்றது. நாடக நிகழ்வுகளாக பேராசிரியர் பாலசுந்தரத்தின் ''காத்தவராயன்'' பேராசிரியர் மௌன குருவின் ''புதியதொருவீடு'', குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ''யார் கொலோ சதுரர்'', கலாநிதி ரதிதரனின் " ஒதல்லோ", திருமறைக் கலாமன்றின் இசை நாடகங்கள் போன்ற ஆற்றுகைகளையும் கைலாசபதி கலை அரங்கு கண்டேதான் வந்திருக்கிறது.

ஆயினும் தொடர்ச்சியாய் மூன்று நாட்கள் நாடக ஆற்றுகையாக 2018 அரங்க விழாவே அமைந்து சிறந்தது என்றிடல் பொருந்தும். அத்துடன் இது ஒரு தொடக்கம் தான். தொடர்ந்திட முயலுவோம் என்பது போல் உபவேந்தரும் உப பீடாதிபதியும் நுண்கலைத்துறை பீடாதிபதி சனாதனன், விரிவுரையாளர் நவதர்சினி ஆகியோரும் ஆரம்ப விழாவில் ஆற்றிய உரைகளை மனங்கொள்ளலாம்.

கண்டும் கேட்டும், உண்டும், மோந்தும், நீண்டியும் அனுபவிக்கும் ஐம்புல இன்பமும் தலைவியிடம் உள்ளது வாய் தலைவானாகும் வள்ளுவன் குறிப்பிடுவது போல, "ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள" என்று சேக்கிழார் செப்புவது போல இயல்களின் இயலுமையும் இசைகளின் இசைவிப்பும் இணைந்த வகையில் வெளிப்படுவது நாடகம் ஆகிறது. இதனால் தான் "நாடக வழக்கு" என தொல்காப்பியர் நவின்றதற்கு, "புனைந்துரை" வகையென்று நச்சினார்க்கினியர் பொருள்கொள்ள, "சுவைபட வருவன வெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல் நாடகம்" என்று பிற்பட்ட உரையாசிரியர் கள் விரித் துரைத்தனர்.

நாடகம் என்பது "போலச் செய்த" லாக இருந்தாலும் அது. 'நாட்டை அகத்துள் கொண்டது' என்றும் மறுதலையாய் அகத்தை நாடு அதாவது 'உன்னுள் நோக்கு' போன்ற கருத்துருக்கொள்ளத்தக்கது என்றும் ஔவை தி.க.சண் முகம் போன்ற அறிஞர்கள் குறிப்பிடுவர். அவற்றின்வழி அரங்க விழாவும் நாட்டு அகமாகவும், அகம் நாடுவதாகவும் அழகியலோடு அமைந்து சிறந்ததைக் காண முடிந்தது.

### 19.07.2018 வியாழனன்று மாலை

நாடகக் கலைஞர்களைக் கௌரவிப்புச் செய்வதாக நிறைந்த ஆரம்ப விழாவைத் தொடர்ந்து காத்தவராயன் சிந்து நடைக் கூத்து அவைக்கு விருந்தானது. 'மரபுவழி' என்று சொல்லி முட்டி மோதாமல் காலத்திற்கேற்றபடி கச்சிதமாய் அமைந்திருந்தது அது. கதிரவன் எழும்போதே கழுமரம் ஏறுகின்ற காத்தானைப் பார்த்த கண்கள் ஒரு மணி நேரத்திலும் அதனைச் சுவைக்கலாம்.

என்பதை அறிந்து கொண்டன.

அரங்கேறி நடித்தவரும், அணி இசையை வகுத்தோரும் அருமையாய் ஆற்றினார்கள். அவையும் நிறைந்திருந்து ஆற்றுகையுள் மூழ்கியது. நாடகம் அரங்கியலைப் பயிலுகின்ற மாணவரே ஆற்றுகையை நிகழ்த்தினார்கள் என்பதை அறிந்தபோது நாடகமும் வாழுமென்ற நம்பிக்கை அரும்பி




யது. பட்டநெறி முடிந்த பின்னும் பாடநெறி தொடருமெனின் அரும்பு அலருவதற்கு வாய்ப்புண்டு எனக்கொள்வோம்.

### 20.07.2018 வெள்ளியன்று காலை

நுண்கலை விரிவுரையாளர் பா.அகிலன் தலைமையில் கருத்தரங்கம் "சமகால அரங்கின் சவால்களும் பிரச்சினைகளும்'' என்னும் பொருள்பற்றி நிகழ்ந்தது. அறிஞர் பெருமக்களின் எடுத்துரைப்பும் அவையோடு சேர்ந்த கலந்துரையாடலும் இடம்பெற்றன.

மதியவேளை தெருவெளி நாடகமாய்,





இராமநாதன் மண்டப முன்றலில் ''மாய மான்'' நிகழ்ந்தது. கிளிநொச்சி மாணவரால் ஆற்றப்பட்ட அந்நிகழ்வில் காலத்தின் கோலங்கள் புள்ளியிடப்பட்டன. மாயமானின் புள்ளிகளை எண்ணுதல் ஆற்றாது இராமன் தொடர்ந்ததுபோல், இன்றைய சமூகத்தின் தொடரல்களைக் காட்டியது அத்தெருவெளி நாடக நிகழ்வு. சுற்றி நின்று ரசித்தோர் கர கோசம் எழுப்பி நிகழ்வினை ஊக்கினர்.

பிற்பகல் தொடக்கம் கைலாசபதி அரங்கில் "நாய்கடிக்கும் கவனம்'' , " இராவணேசன் யுத்தகாண்டம்'', '' சமகால நடனம்'' நிகழ்வுகள் இடம் பெற்றன.

"நாய்கடிக்கும் கவனம்'' ஓரங்க ஆற்றுகையாய், இருவர் நடிப்பிலே அவையை உள்வாங்கியது. கடன்பட்ட ஒருவரின் கனமான ஏமாற்று. கவினோடு கனதியாய் கருத்துக்கும் விருந்தாச்சு, கலைப்பயில்வு முடித்து வெளியேறும் மாணவரே கலையாக அதனை ஆக்கினார் என்ற செய்தி காதோடு காதாய்க் கதைக்க உரமாச்சு.

அடுத்த மன்னார்ப் பாங்கின் தென்மோடி வடிவத்தில், இராவணேசன் யுத்தகாண்டம் அளவாக்கி அவைக்கு வைத்தார். விரிவுரையாளர் சூசை ஆனந்தனின் நெறியாள்கை நன்றேதான். கட்டியக்காரனாய் நடிப்பும் நன்றேதான். ஆனாலும் ஒலி பெருக்கி சரியாய் உள்வாங்க மறுத்ததுவோ! அல்லது மரபுவழி முழங்கிய மத்தள ஓசையினால் சொல்லர்த்தம் குழம்பியதோ தெரியவில்லை, ஆட்டமும் நடிப்பும் எய்திநின்ற உயர்வை பாட்டின் வழி தொடர்ந்த கருத்தூக்கம் எட்டவில்லை.

தொடர்ந்து இடம்பெற்ற சமகால நடனங்கள் மூன்றும் குறியீட்டு வடிவங்களே. 'விளங்குவோர் புரிதலையொட்டி விளங்கும் வகை வேறாகும்' என்பது உண்மையாயினும் எண்ணுவதை ஓளவுக்காவது விளக்கும் முயற்சியை ஆற்றுகைப்படுத்துவோர் தொட்டாவது காட்ட வேண்டும் என்பதைக் குறிக்கத் தோன்றுகிறது. அழகியலில் பஞ்சமில்லை என் பதை ஏற்றுக்கொள்ள முடிந்தாலும் அருங்கருத்துக்கள் என்றும் சிதைந்துவிடக் கூடாதே!

### மாலை வேளையில்
### ''அரிச்சந்திர மயான காண்டம்''

இசைநாடக வடிவாய் எழுந்து உணர்வூட்டியது. கலைஞர் தைரியநாதன் மகனோடு இணைந்த குழுவினர் ஆற்றொழுக்காய் நாடகத்தை அருமையாய்ப் பின்னினார்கள். விடியவிடிய அரங்குகண்ட அரிச்சந்திரா முடிவுக் காட்சிகளை முன் வைத்து எழுந்தாலும் 'சம் பூர்ண அரிச்சந்திரா' தந்த சுவை யுணர்வை மயான காண்டத்திலே பொதிந்து நிரப்பியது. ''நடிகமணி'' மறைந்து நாட் சென்று போனாலும் அவர்வழியில் தொடர்ந்தாற்றும் கலைஞர்களைப் போற்றிடலாம். பக்க வாத்தியங்களாய் ஆர்மோனியமும் மிருதங்கமும் சுருதியும் லயமுமாய் இணைந்து மெரு கேற்றின என்பதும் குறிப்பிடத்தக்கதேயாம்.

இரவின் தொடக்கத்தில் வெளிக்களத்தில் ''வசந்தன் கூத்து'' கோலாட்ட நிகழ்வு போல் அமைந்தது என்றாலும் சந்தத்தின் பின்னல்களும் சதுர்செய்யும் பின்னணியும் இன்னுமொரு கலைவடிவாய் இதை மனத்தில் ஏற்றியது. இளைஞர்களும் யுவதிகளும் இனிதாக ஆற்றினார்கள். தடுக்கிய கோலொன்றால் தலையிலடி பட்டபோதும் தங்கூத்தை நிறைவாக்கிச் சென்றவரை வாழ்த்திடலாம். பக்க இசையினரும் பாங்களிந்து கைகொடுத்தனர்.

அடுத்த நிகழ்வாய் கைலாசபதி அரங்கில் ''கடவுளும் குட்டியும்'' சிறுவர் நாடகம் (Play) என்பது விளையாட்டு என்பதிலும் துள்ளல்கள் ஒழுங்குபடல் ஆட்டமாகும் என்பதிலும் கலைச்செயல்கள் குழந்தைகட்கு இனிப்பாகும் என்பதிலும் நாடகநெறியாளர் முத்திரை பதித்திருந்தார் என்றாலும் கருத்துத் தொடர்ச்சியைக் கண்டுணர்தல் கூடவில்லை. கதைக்காத கதைதான் காரணமோ? தெரியவில்லை!

நிறைவு நிகழ்வாய் "எந்தையும் தாயும்" (திருநோனகே) சிங்களத்தில் மொழி பெயர்ப்பாய் ஆற்றுகையானது. எண்பதுகளில் சூழ்ந்திருந்த இடர்களை உளங் கொண்டு குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய எழுத்துருவை நெறியாளர் சிதம்பரநாதன் பழக்கி அப்போ அரங்கேற்றம் செய் திருந்தார். அரசையா, ஜெனம், சுந்தரலிங்கம் என்னும் ஆன்ற பெருநடிகர் அப் போது நடித்திருந்தார். நாற்சார் வீடொன்றில் நடந்த இந்நாடகத் தைப்பார்த்துநெகிழ்ந்துபோனோர் ஏராளம் ஏராளம். இதனை ''மக்கள் களரியி''னைச் சேர்ந்த நடிகர்கள் சிங்களத்தில் வெளிப்படுத்தி சிறப்பாக ஆற்றினார்கள். அவையினில் சிங்கள மாணவரும் சிங்களம் தெரிந்தவரும் பலரிருந்து ரசித்தார்கள். மொழிவிளங்கா விட்டலோகானந்தன், சுமுது, அஜந்தன், லீலாவதி போன்ற நடிப்புச் செம்மல்கள் வேறொரு தளத்தில் நின்று ஆற்றுகையை உயர்த்தினார்கள். பேராசிரியர் பராக்கிரம நிரியல்ல ஆற்றுகைத் திறனால் அரங்கில் உயர்ந்து வென்றார்.

### 21.07.2018 சனிக்கிழமை காலை

விரிவுரையாளர் விமல் தலைமையில் "சமகால அரங்கப் பயில்வுகளைக் கையாளுதல்'' என்ற தலைப்பில் கலந்துரையாடலோடு நிகழ்வு தொடங்கியது.

மதியவேளை "சப்பிகள்" என்ற சிறுவர் நாடகம் கற்கைநெறி மாணவரால் காட்சி யானது. வெளிநாட்டு மோகமும் அதனால் வரும் துயரும் அவற்றோடு இணைந்த இன்னும் பல சிக்கல்களும் பிராணிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. ஆடல்கள், பாடல்கள், கிண்டல்கள், கேலிகள் என்றவாறு குறியீட்டுப் பாங்கில் நாட்டின் அகம் சொன்னார்.

தொடர்ந்து "கடவுளும் குட்டியும்" என்ற சிறுவர் நாடகம் மீளவும் அரங்கேறி அளிக்கை ஆனது. மீண்டும் பார்த்த போது புதிய கருத்துச் சில மனதேறி வென்றாலும் கருத்துத் தொடர்ச்சியைத் தொடுவதற்கு முடியவில்லை.

அடுத்து வந்து அரங்கை நிறைத்தது ''பறத்தல் மறந்த பறவைகள்'' நாடகம் புறாக்களைக் குறியீடாக்கிப் புனையப்பட்ட நாடக வடிவம் இது. மொழிபெயர்ப்பு நாடகமாய் முன்பும் இது நிகழ்ந்ததாக கண்டிருந்த சிலர் சபையில் கதைத்துக் கொண்டார்கள். சிறுவர் நாடகம்தான் என்றாலும் இதில்பெரியவர்க்காம்செய்திகளும்செதுக்கப் பட்டிருந்தன. (10 ஆம் பக்கம் பார்க்க...)

# இது நம்ம கதைகள்... 10

## சீனாவும் சிக்குன்குனியாவும்

சீனா இன்று பொருளாதாரத்தில் அடைந்துள்ள அபரிமிதமான வளர்ச்சி உலகையே வியக்கவைத்துள்ளது. தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரை சீனாவின் கால் பதியாத புலங்களே இல்லையெனலாம். மருத்துவத் துறையிலும் சீனாவின் பரிணாமம் உலகைக் கவர்ந்துள்ளது.

ஆயினும் சீனாவின் இத்தகைய வளர்ச்சியை திடீர்ப்பாய்ச்சல் என யாரும் வாதிட முடியாது. ஏனெனில் சீனா உலகின் ஆதி நாகரிக மையங்களிலொன்று. மாவோ சேதுங்கின் செம்புரட்சி சீனாவின் பாரம்பரியங்களைப் புரட்டிப்போட்டாலும் சீனாவின் தொன்மை வளர்ச்சி தொடர்ந்து கொண்டுதானிருந்தது. ஆயினும் கம்யூனிச இரும்புத்திரை தற்போது சற்று விலகத் தொடங்கும் தருணத்தில் தான் அது புலப்பட ஆரம்பித்துள்ளது.

சீன மருத்துவத் துறைக்கும், மருத்துவக் கற்கைக்கும் இன்று உலகளாவிய கிராக்கி காணப்படுவதை நாமறிவோம். ஆயினும் சீன பாரம்பரிய மருத்துவத்துறை கி.மு. 186 ஆம் ஆண்டுகளிலேயே ஸ்தாபனப்படுத்தப்பட்ட கட்டமைப்பைக் கொண்டிருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. கி.மு.100 இல் மருத்துவக்குறிப்புக்களடங்கிய "நீயிங்" எனும் நூல் பாவனையிலிருந்துள்ளது. மூலிகைப் பயன்பாடு, அக்குபஞ்சர் சிகிச்சைமுறை, உடலியக்க வலுவூட்டல் பொறிமுறை போன்ற குறிப்புக்கள் அதிலுள்ளடங்கியிருந்தன. கி.பி. 60 இல் இறந்தவர்களின் உடல்களை மருத்துவ ரீதியாக உடற்கூற்றியல் ஆய்வு செய்து தம் மருத்துவ முறைமையை செம்மைப்படுத்துவதில் சீனர்கள் வெற்றி கண்டிருந்தனர்.

எமது இவ்வாரக் கதை பண்டைய சீன மருத்துவத்துறை சார்ந்தது. சீனாவில் அந்தக் காலத்தில் மருத்துவர்களின் சிகிச்சை நிலையக் கூரைகளில் அவர்களிடம் சிகிச்சை பெறும் போது இறந்துபோன நோயாளர்களின் எண்ணிக்கைக்கு சமமான அளவு சிவப்பு விளக்குகள் எரிய விடப்பட வேண்டும் என்ற விதி காணப்பட்டது. நோயாளர்கள் திறமையான மருத்துவர்களை இனங்காணவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



. திடீரென சீனா முழுவதும் சிக்குன்குனியா காய்ச்சல் பரவத் தொடங்கியது. அக்காலத்தில் அதனை சுகப்படுத்துவது கடினமென்றும் நோய்த் தொற்றுக்குள்ளாகியவர் பெரும்பாலும் இறக்க நேரிடுமென்றும் அச்சம் நிலவியது.

சீனாவில் வாழ்ந்த மிகப் பெரும் செல்வந்தரொருவருக்கும் இந்நோய் தொற்றியது. சாகப்போகிறோம் என்ற அச்சம் மேலிட தன் வேலையாட்களை அழைத்து "நீங்கள் சீனா முழுவதும் தேடி தலைசிறந்த வைத்தியரைக் கூட்டி வந்து என் வியாதியை எப்படியாவது குணமாக்குங்கள். உங்களுக்கு பெரும் சன்மானம் தருவேன்" என்றான்.

எந்த மருத்துவர் வீட்டின் கூரையில் குறைந்த எண்ணிக்கையான சிவப்பு விளக்குகள் எரிகின்றதோ அவரே சிறந்த வைத்தியராக இருப்பார் என வேலையாட்கள் தீர்மானித்தனர். நாடு முழுவதும் சிறந்த மருத்துவரைத் தேடி அலைந்தார்கள். ஆனால் அது அவர்கள் நினைத்ததுபோல் சுலபமான வேலையாக இருக்கவில்லை. அநேகமான வைத்தியர்களின் வீடுகளிலும் 20 இற்கும் குறையாத சிவப்பு விளக்குகள் எரிந்தன. அதிகாலை முதல் மதியம் வரை தேடும் படலம் தொடர்ந்தது. இறுதியாக ஒரு இடத்தில் நான்கு விளக்குகள் மட்டுமே எரிந்தன. மகிழ்ச்சியடைந்தார்கள்.

அந்த மருத்துவரைச் சந்தித்து தங்கள் எஜமான் நோயுற்றிருப்பதையும், அவரைக் குணப்படுத்தக்கூடிய வல்லமையுள்ள மருத்துவராக உங்களையே தெரிவு செய்துள்ளோம் என்றும் சொன்னார்கள். தங்களுடன் வந்து தங்கள் எஜமானை குணமாக்கும்படி மன்றாட்டமாகக் கேட்டனர்.

மருத்துவரும் அவர்களுடன் புறப்பட்டார். இந்த மருத்துவரிடம் சிகிச்சை பெற்ற நோயாளார்களே குறைந்தளவில் மரணித்திருப்பதாக எஜமானிடம் வேலையாட்கள் தெரிவித்தனர். எஜமான் மகிழ்ச்சியடைந்தார்.

சிகிச்சையும் ஆரம்பமாகியது. எல்லோரும் ஆச்சரியப்படும் விதத்தில் அன்று நடுநிசிக்கு சற்று முன்னதாகவே எஜமான் குணமடைந்தார். எல்லோரும் மருத்துவரின் கைராசியையும் கெட்டித்தனத்தையும் வெகுவாகப் பாராட்டினார்கள். எஜமான் பெரும் தொகைப்பணத்தையும், பரிசுப் பொருட்களையும் மருத்துவருக்கு வழங்கினார். மருத்துவர் பிரியாவிடை பெறும் நேரம் வந்தது. அவரைக் கட்டித் தழுவியவாறு எஜமான் சொன்னார் "மருத்துவரே நீங்கள் உண்மையிலேயே மிகச் சிறந்த வைத்தியர் என்பதை நிரூபித்து விட்டீர்கள். உயிர் பிழைக்கமாட்டேன் என நினைத்த எனக்கு மறுவாழ்வு தந்தவர் நீங்கள். உங்களை என் வாழ்நாளில் மறக்கவே மாட்டேன். உங்களிடம் வைத்தியம் பார்த்தவர்களில் இவ்வளவு காலத்திலும் ஆக நான்கு நோயாளிகள் மட்டும் தான் சிகிச்சைக் காலத்தில் இறந்து போனதாக என் வேலையாட்கள் சொன்னார்கள். எவ்வளவு அற்புதமான வைத்தியர் நீங்கள். உங்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. அது சரிமருத்துவரே நீங்கள் எவ்வளவு காலமாக வைத்தியம் செய்கிறீர்கள்?" எஜமானின் பாராட்டிற்கும் கேள்விக்கும் புன்சிரிப்பொன்றை உதிர்த்த மருத்துவர் தன்னடக்கத்தோடு சொன்னார் "இன்று காலையிலிருந்தே வைத்தியம் செய்யத் தொடங்கியுள்ளேன்..."

அதைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்த எஜமான் மயங்கிக் கீழே சரிந்தார். பின்னர் அவர் எழுந்திருக்கவேயில்லை.

எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.


**எப்.எக்ஸ்.அன்ரன்**

# யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆற்றுகை...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இயலாத வர்கள் இயலாத்தன்மைகளுக்கே இயன்றவர்களையும் இழுப்பார்கள் என்ற செய்தியை உட்கொண்டு இயன்றவர்கள் இயன்றவரை விடிவுகளைத் தேட வேண்டும் என்பதையும் விளக்கியது இந்நாடகம். "முயற்சி திருவினை ஆக்கும்" என்ற பழமொழியையும் "தெய்வத்தால் ஆகாத தெனினும் முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்" என்ற வள்ளுவர் வாசகத்தையும் இந்நாடகத்தோடு ஓரளவு பொருத்திப் பார்க்க முடிந்தது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்ற பாரதியின் அவா வரவேற்கத்தக்கதேயாம்.

பிற்பகல் நிகழ்வாக "சில ம்பின் சீற்றம்" என்ற வில்லுப்பாட்டுடன் அரங்கு திரை விரித்தது. கலையுலகமேதை அமரர் சின்ன மணி கண பதிப்பிள்ளையின் சாயலை ஒட்டியமைந்த நிகழ்வாய் ஆற்றுகையானது. கடவாத்தியத்தில் "கலைவாணர் வில்லிசைக் குழு" என்றே பெயரும் பொறிக்கப்பெற்றிருந்தது. பிரதான பாகமேற்ற மதியழகன் ஆசிரியர் பாடலிலும் செய்கையிலும் பல நயங்கள் காட்டி நின்றார். பக்கங்களிலிருந்து பங்கேற்றுக் கொண்டோரும் தம்பங்கைச் செவ்வனே பண்ணி நிறைத்தார்கள். உதாரணமாய் மாதவி அரங்கேறி மக்கள் முன் ஆடியதைப் பாடலில் இசைத்த போது அபிநயத் தலையசைப்பால் அவைக்குச் சுவையூட்டினார். அருகிலிருந்து தாளம் இசைத் தவர் நேரச் சுருக்கத்தால் முழுமை குறைந்தாலும் நல்ல பல செய்திகளை நவில்வதற்கு வில்லிசையும் ஏற்றதொரு கலைவடிவே! என்பதை நாட்டினார்கள்.



அரங்கவிழாவின் அடுத்த ஆற்றுகையாய் "சுந்தரம் எங்கே?" சமூக நாடகம் அரங்கேறி வந்தது. பல தசாப்தங்களின் முன் அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகிய இருவரும், பல்கலைக்கழகத்தில் ஆற்றுகைகள் பலவற்றை அள்ளி நிறைத்தார்கள் என்பதை அறிகின்றோம்...

மரபுவழி நின்று "பாரம்பரிய அரங்கை" இராவணேசன், கர்ணன் போர், நொண்டி நாடகம் போன்றவற்றால் சு.வி.நெறிப்படுத்த, சமகாலச் சிந்தனை கொண்ட "இயல்புநெறி அரங்கை", பேராசிரியர் கணபதிப்பிள்ளைஅவர்கள் ஆற்றுகை செய்தார் எனலாம். அமரர்களான பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி போன்ற பெரும் படிப்பாளிகள் கூட பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களால் புடம் போடப்பட்டவர்கள் என்பதையும் அறிய முடிகிறது. இந்த வகையில் அமரர் கணபதிப்பிள்ளை அவர்களால் படைக்கப்பட்ட நாடகங்களுள் "ஒன்றுதான் சுந்தரம் எங்கே?" என்பதாகும்.

பேராசிரியர் கால ஆற்றுகை எவ்வாறோ தெரியவில்லை. ஆனால் இன்றைய ஆற்றுகை அவையை ஆலிங்கனித்தது என்பதை உணர முடிந்தது. தகப்பன், தாய், மகன், மகள், தங்கை, மைத்துனன், வாத்தியார், நண்பர்கள் எனப் பாத்திரங்கள் அனைத்துமே கதையோடு வாழ்ந்தன. உதாரணமாய் வசதிபடைத்த அம்மாவும் வாத்தியாரும் வந்திருந்தவர்களைக் களிப்பிலே ஆழ்த்தினர்.

ஒரு நல்ல கலைஞனின் படையல் என்றும் உண்ணப்படும் என்பதற்கு பேராசிரியரின் "சுந்தரம் எங்கே?" சாட்சியாய் அமைந்தது. இன்னொன்று இந் நாடகம் தோன்றி அரை நூற்றாண்டுக்கு மேல் ஆகிவிட்டதனாலும் யாழ்ப்பாணச் சமூக உறவுகள் பலதும் அப்படியே இருக்கின்றன என்பதனையும் காணமுடிந்தது. இதைவிட இந் நாடகத்திற்கான மேடை அமைப்பிலும் நெறி செய்த கலாநிதி. க.ரதிதரன் அவர்கள் வெற்றி கண்டுள்ளார் என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

அடுத்து இரவின் தொடக்கத்தில் முதலில் நிகழ்ந்தது யாழ்ப்பாணத்தின் தமிழ் நாடகப் பிதாமகர் என்று அழைக்கத்தக்க குழந்தை ம.சண்முகலிங் கம் அவர்களின் "உறவுகள்" நாடகமாகும். இதனையும் விரிவுரையாளர் கலாநிதி. க.ரதிதரன் அவர்களே நெறியாள்கை செய்திருந்தார் என்பதை அறிய முடிந்தது. அவர் அதில் கனதியான ஒரு பாத்திரமாயும் வாழ்ந்தார் என்பதையும் காண முடிந்தது. அவர் மட்டுமல்ல அவரோடு மேடை கண்ட அனை த்துப் பாத்திரங்களும் நல்ல முறையில் பவனி கொண்டன என்பதையும் அவையின் வெளிப்பாடு காட்டி நின்றது.

முன்பு குறிப்பிட்ட பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை "சுந்தரம் எங்கே?" நாடகம், காலங்கடந்தும் யாழ். மண்ணோடு எவ்வாறு தழுவிக் கொண்டதோ! அதனிலும் அதிகமாய் "உறவுகள் நாடகமும்" அவையிலிருந்தோரை அணைத்து நின்றது.

காட்டப்பட்டதான யாழ்ப் பாண வேலிகளும் வீடும் காட்டப்படாத பக்கத்துவீடும் எழும்ப இருந்த மதிற் சுவரும் கண்கள் வழியே கனவை விதைத்தன. இந் நாடகம், எண்பதுகளில் நாடக அரங்கக் கல்லூரித் தயாரிப்பாக நாடக ஆசிரியரின் நெறியோடு ஆற்றப்பட்டிருந்தது.

அரசையா, தேவராசா போன்றவர்கள் இணைப்போடு நாடக ஆசிரியர் குழந்தை மசண்முகலிங்கம் வேலு ப்பிள்ளை பாத்திரமாக நடித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அன்றும் அவையை ஆக்கிரமித்த உறவுகள் இன்றும் சபையைக் கவர்ந்தது என்பதைச் சொல் லித்தான் ஆக வேண்டும்.

நாடகத்தில் வரும் வேலுப்பிள்ளையின் தமிழறிவை வைத்து "பிரசங்கம்" பற்றிய ஒரு கிண்டல் வந்ததும் தவிர்த்திருக்கலாம் என்று நினைக்கத் தோன்றியது. ஏனெனில் ஆறுமுகநாவலரின் பிரசங்கமே ஒரு கால யாழ்ப்பாணத்தின் தமிழையும் சமயத்தையும் நிலை நிறுத்த உதவியது என் பதை மறுத்தல் நியாயமில்லை. நவாலியூர்சோம சுந்தரப்புலவர் கூட 'இலங்கை வளம்' பாடும்போது "...நல்லை வந்து அருளு நாவலன் கண்டனப் பிரசங்கமாமெனக் கதிரை மாமலை அருவி பாயுமே" என்று மெருகேற்றுவதை மனங்கொள்ள வேண்டும். ஏனெனில் ஏனைய கலை களை அணைக்கும் கலையாக நாடகம் இருக்க வேண்டுமேயன்றி உதைக்கும் கலையாக அமைதல் சிறப்பன்று.

நிறைக்குமுன் சில விடயங்கள்

பல்கலைக்கழகத்தில் அரங்க விழா வருடாவருடம் நிகழ்ந்து நிறைக்க வேண்டும்.

போர்க்காலத்தின் முன் யாழ்ப்பாணம் எங்கணும் மன்றங்கள், கழகங்கள், நாடக நிகழ்வுகளை ஆற்றி மகிழ்வித்தன. அத்தோடு நாடகப் போட்டிகளும் அங்கங்கே நிகழ்ந்தன. உதாரணமாய் அரியாலை சனசமூக நிலையம், மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையம் போன்றவை எண்பதுகளின் அரைப் பகுதிவரை முன்னெடுத்த நாடகப் போட்டிகளில் ஐம்பதுவரையான நாடகங்கள் பங்குபற்றின.


போர்க்கால நெருக்குதல்கள் பெரும்பங்கைத் தின்ன பல்கலைச் சீண்டல்களும் மீதியை எறிந்தன வென்பதை மறுக்க முடியாது. பெருமன்றங்களின் பெருந்தயாரிப்புக்களையே "இவை நாடகத் தயரத்தில்லை" என்பது போல் பரிகசிப்புக்கள் தொடங்க வலுவான ஒரு சில மன்றங்கள் விமர்சனங்களை உள்வாங்கி உயர்ந்தாலும் வலுக்குறைந்த மன்றங்கள் பல ஒதுங்கிக் கொண்டன என்ற உண்மையை உணர வேண்டும்.


இன்று தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் போன்றவற்றாலும்ஏனையபலஜனரஞ்சகநிகழ்வுகளாலும் மேடை நாடகங்கள் நெருக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என்பது வேறுகதை. ஆயினும் 'மக்கள் களரி'யினர் முத்திரைச் சந்தியடியில் முகாந்திரமிட்டு நிகழ்த்திய "வெண்கட்டி வட்டம்", "சரண்தாஸ்", "மாயப்பட்டாடை" போன்று இன்னும் பல நாடகங்களுக்கும் திருவிழாக் காலங்களில் நல்லூர் வீதியில் தே.தேவானந் ஆற்றும் நாடக நிகழ்வுகளுக்கும் மக்கள் திரள்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஏன்? திருமறைக்கலாமன்றின் தவக்கால ஆற்றுகைகளுக்கு நுழைவுச்சீட்டுக்களுக்கு முண்டியடிக்க வேண்டிய நிலையும் உண்டு.

ஆக, பல்கலைக்கழக வெறுவெளி நுண்கலைத் துறை தொடர்ந்தும் இதில் முயல வேண்டும், நாடகங்கள் பலவற்றை அரங்கேற்றம் செய்ய வேண்டும், துறை சார்ந்த மாணவர்கள் வெளியேறும் போது "ஊரில் இதை விளைப்பேன்" என எண்ணிப் போக வேண்டும். முத்தமிழால் நிறைந்த மொழி முனைகள் பல கொண்டு வரட்சியை விரட்டி வசந்தத்தைப் பெருக்கட்டும். அரங்கவிழாவிற்கு உழைத்த பலருக்கும் வாழ்த்துக்கள் பற்பல.

**ச.மார்க்கண்டு (மாக்கி)**
**ஓய்வுநிலை ஆசிரியர்**

# இரண்டு கைகளாலும் பந்துவீசும் மோகித்






அண்ணே... ஒரு பட் மட்ச் வெச்சுக்கலாம் வர்றீங்களா' என சென்னை 600002 படத்தில் சீனியர்களை வம்புக்கு இழுக்கும் சுள்ளான்கள் போலவே இருக்கிறார் மோகித் ஹரிஹரன். ஜெர்கின், வலது கையில் இறப்பர் வளையம், இடது கையில் சிவப்பும், மஞ்சளுமாய் சில கயிறுகள், காலில் கறுப்பு கயிறு, ஹவாய் செப்பல் என பக்கத்து வீட்டு பையனைப் போன்ற தோற்றம்.

சென்னை விவேகானந்தா கல்லூரி முதலாமாண்டு பிசிஏ மாணவன். குழந்தைத்தனம் இன்னும் முற்றிலுமாக விலகாத பதின்மவயது. அம்பி போல சிறிது வெட்கத்துடன் தயங்கி தயங்கி பேசும் மோகித், மைதானத்தில் ரெமோவாக பட்டையைக் கிளப்புவார் என்பதுதான் ஹைலைட். கிரிக்கெட் விளையாட்டில் இடது கை, வலது கை ஆட்டக்காரர்கள், பந்துவீச்சாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், மோகித் இரண்டு கைகளையும் பயன்படுத்தி பந்துவீசுவதில் வல்லவர். இவரது இந்தத் திறமை பலரையும் வியக்கவைத்துள்ளது.

டி.என்.பி.எல் மூன்றாவது சீசன் தற்போது நடைபெற்று வருகிறது. கடந்த சீசனில் திருச்சி அணிக்காக ஆடிய மோகித், இந்த முறை காஞ்சி வீரன்ஸ் அணிக்காக களமிறங்கி இருக்கிறார். இந்த சீசனின் 12-வது லீக் போட்டி திண்டுக்கல் என்.பி.ஆர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் திண்டுக்கல் டிராகன்ஸ், காஞ்சி வீரன் அணிகள் மோதின. திண்டுக்கல் டிராகன்ஸ் வெற்றிபெற்றது. காஞ்சி வீரன்ஸ் தோல்வியைத் தழுவினாலும், அணி இக்கட்டான நிலையில் இருக்கும் போது, இடது, வலது என இரண்டு கையாலும் பந்துவீசி அசத்தியதுடன், 77 ஓட்டங்களையும் தனது அணிக்காக பெற்றுத்தந்தார். 77 என்பது கொண்டாடப்படவேண்டிய எண்ணிக்கை. ஆனால், அவரது இரு கை பந்துவீச்சு, அவரது ஓட்டக்கணக்கைபின்னுக்குத் தள்ளிவிட்டது.

கிரிக்கெட் வீரர்களில் சிலர் இடது கை பழக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். சிலர் வலது கை பழக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். சிலர், சில வேலைகளுக்கு இடது கையையும், சில வேலைகளுக்கு வலது கையையும் பயன்படுத்துவார்கள். உதாரணமாக, சச்சின் டெண்டுல்கர் வலது கை பட்ஸ்மன். ஆனால், இடது கையால் எழுதுவார். செளரவ் கங்குலி இடதுகை பட்ஸ்மேன். ஆனால், பந்துவீச வலது கையைப் பயன்படுத்துவார். வலது கை பழக்கமுள்ள டேவிட் வார்னர் இடது கை பட்ஸ்மன். இப்படி கிரிக்கெட் வரலாற்றில் இரண்டு கையையும் மாறி மாறி பயன்படுத்தும் ஜாம்பவான்கள் இருக் கிறார்கள். ஆனால், இரண்டு கைகளையும் பயன்படுத்தி பந்து வீசும் ஆற்றல் படைத்தவர்கள் யாரும் இல்லை. தற்போது இந்திய அளவில் விதர் பாவைச் சேர்ந்த உள்ளூர் கிரிக்கெட் வீரர் அக்ஷய் கர்னேவார் என்ற வீரர் மட்டுமே இரண்டு கைகளில் பந்துவீசி வருகிறார். அந்த வரிசையில் மோகித்தும் இணைந்துள்ளார்.


திண்டுக்கல்லில் ஒரு விடுதியில் த்ங்கியிருந்த மோகித்தைச் சந்தித்தேன். பேட்டி என்றதும் 'எதுக்குண்ணா...' என்றபடியே வெள்ளந்தி சிரிப்பும், கண்களில் மின்னி மறையும் கூச்சம் கலந்த முகபாவனையுடன் நெளிந்த படியே அமர்ந்த மோகித்தைப் பார்க்கும்போது.

காத்திருக்கும் வரை நமது பெயர் காற்றென்றே இருக்கட்டும்.

புறப்பட்டு விட்டால் புயலென புரியவைப்போம் என்ற மு.மேத்தாவின் கவிதை வரிகள்தான் எண்ண அலைகளில் மேலெழுந்து நின்றது.

நான் சென்னை பையன். அப்பா ரயில்வே ஸ்டாஃப் என் அண்ணாவும் கிரிக்கெட்டர் தான். டி.என்.பி.எல் போட்டிகள்ல திருச்சி அணிக்காக விளையாடுறான். என் அப்பா கிரிக்கெட் வீரர். ரயில்வே அணிக்காக நாற்பது வருஷம் விளையாடியிருக்கார். சிறந்த கோச். சின்ன வயசுலயே அப்பாவோட கிரவுண்டுக்குப் போயிடுவேன். ஏழு, எட்டு வயசுல இருந்தே கிரிக்கெட் ஆடிகிட்டு இருக்கேன். இன்னிக்கு வரைக்கும் அப்பாதான் எங்க கோச். கிரிக்கெட்ல இருக்கிற சின்ன சின்ன நுணுக்கங்களைக் கத்துக்கொடுப்பார். அப்பா பல ஜாம்பவான்களோட கிரிக்கெட் ஆடியிருக்கிறார். அவரோட அனுபவங்களை எங்களுக்கு சொல்லி கொடுத்திருக்கார். அப்பா இந்தியா டீம்ல ஆடணும்னு விரும்புனார் ஆனா, அது நடக்கலை. எங்களை எப்படியாவது இந்திய அணிக்காக ஆடவெச்சுடணும்னு இலட்சியத்தோட இருக்கார்."

"அப்ப எனக்கு பதினொரு வயசு இருக்கும். சும்மா விளையாட்டுக்காக ரெண்டு கையிலயும் பௌவுலிங் பண்ணிட்டே இருப்பேன். அதைப் பார்த்துட்டு அப்பா தான் என்க் ரேஜ் பண்ணுனாரு. இப்ப ரெண்டு கையாலயும் என்னால பந்துவீச முடியுது. நான் ஆஃப் ஸ்பின்னர். ரெண்டு கையிலயும் இப்ப கன்ட்ரோல் கிடைக்குது. "இன்னும் இதை ஷார்ப் பண்ணணும்'னு அப்பா சொல்லுவார். நானும் ஷார்ப் பண்ணி கிட்டே இருக்கேன். பேசிக்கலி நான் ஒரு பட்ஸ்மன். அப்பா என்னை பட்ஸ்மனா உருவாக்கத்தான் நினைச்சார். இப்பவும், 'பட்டிங்ல கவனம் செலுத்து'ன்னுதான் சொல்லிகிட்டே இருப்பார். ஆனா, ரெண்டு கையாலும் பௌவுலிங் போடுறதால என்னோட பட்டிங் திறமை வெளிய தெரியாம போக சான்ஸ் இருக்குன்னு தோணும். அதே மாதிரிதான் ஆகிடுது. திண்டுக்கல் டிராகன்ஸ் கூட ஆடுன மட்ச்லதான், ரெண்டு கையையும் பயன்படுத்தி பௌவுலிங் போட்டேன். அது உலகம்முழுக்க ரிலே ஆனாதால சட்டுனு பத்திகிச்சு. நான் ரெண்டு கையிலயும் பந்து வீசுறது ட்விட்டர்ல டிரெண்ட் ஆச்சு. அன்னிக்கு நான் 77 ஓட்டங்கள் எடுத்திருந்தேன் அதை எல்லாரும் மறந்துட்டாங்க.




கே.எல் ராகுல், விராட் கோலி எனக்கு பிடிச்ச கிரிக்கெட்டர்ஸ். டி.என்பி.எல் ஆரம்பிச்ச பிறகு. வெளியே தெரியாம இருந்த பல திறமையான வீரர்கள் வெளிய வந்திருக்காங்க. இந்த போட்டி உலகம் முழுக்க ஒளிபரப்பாகுறதால, திறமையா விளையாடுற வீரர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கிது. தமிழ்நாட்டுல இன்னும் திறமையான பல கிரிக்கெட் வீரர்கள் இருக்காங்க. டி.என்பி.எல் மாதிரி அந்தந்த மாவட்ட அளவுல அடிக்கடி போட்டிகள் நடத்தணும். அப்பத்தான் பல திறமைசாலிகள் கிடைப்பாங்க. எங்களுக்கு களம்அமைச்சுக்கொடுத்த டி.என்பி.எல்-க்கு நன்றி" என்றார் மோகித்.

எதிர்கால கிரிக்கெட்டில் மோகித் பல உச்சங்களைத் தொட வாழ்த்தி விடைபெற்றேன்.

மோகித் ஹறிஹறனின் தந்தை, ரவிசங்கரிடம் பேசினேன். "என்னோட பை யன்றதால சொல்லல. அவன் நல்ல கிரிக்கெட்டர். சின்ன வயசுல இருந்தே என்கூட பிராக்டீஸ் வந்து வந்து கிரிக்கெட் அவனோட உடம்புல ஊறிப் போச்சு. பெரிய பையன் ஜகன் நாத். 19 வயதுக்குட்பட்டோருக்கான இந்திய அணியில் விளையாடி இருக்கான். அவன் நல்ல பட்ஸ்மன். ஹறிஹறனும் திறமையான பையன் தான். ஆப் ஸ்பின் நல்லா போடுவான். விளையாட்டுத்தனமா ரெண்டு கையிலயும் பௌவுலிங் போட்டுகிட்டு இருந்தான்.

அதை முறைப்படுத்தி முறையா பயிற்சி எடுத்துகிட்டான். இப்ப அதுவே அவனோட தனிப்பட்ட அடையாளமாகிப்போச்சு. லெப்ட் ஹேண்ட் பட்ஸ்மனுக்கு ரைட்ல பௌவுலிங் போடுவான், ரைட் ஹேண்ட் பட்ஸ்மனுக்கு லெப்ட்ல பௌவுலிங் போடுறது ஒரு நுணுக்கம். அது அவனுக்கு கைவந்திருக்கு. அவன சிறந்த பட்ஸ்மனா உருவாக்கனும்னு நினைச்சேன். ஆனா, அதுக்கும் மேல இப்ப ஓல்ரவுண்டரா இருக்கான். இந்திய அணிக்காக என் பசங்க விளையாடணும் அது தான் என்னோட கனவு என்றார்.

ஒரே வேலையையும்இரண்டு கையாலும்செய்யக்கூடிய திறமை படைத்தவர்களை, ஆம்பி டெக்ஸ்ட்ரஸ் (Ambidextrous) என ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள்.

இது லத்தீன் வார்த்தை. லத்தீன் மொழியில் ஆம்பி என்றால் இரண்டும் என்று அர்த்தம்.

டெக்ஸ்டர் என்பதற்கு இடது அல்லது ஃபேவரபில் (**Favorable**) என்று பொருள். ஆம்பி டெக்ஸ்ட்ரஸ் என்றால் இரண்டும் சுலபமாக பயன் படுத்துதல் என்று பொருள்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : நீர்க்குமிழி
இசை : வி.குமார்
இயற்றியவர் : உவமைக்கவிஞர் சுரதா
பாடகர் : சீர்காழி கோவிந்தராஜன்



ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா
கண் மூடினால் காலில்லா கட்டிலடா
பிறந்தோம் என்பதே முகவுரையாம்
பேசினோம் என்பதே தாய்மொழியாம்
மறந்தோம் என்பதே நித்திரையாம்
மரணம் என்பதே முடிவுரையாம்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

சிரிப்பவன் கவலையை மறைக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை
வந்தவர் யாருமே நிலைத்ததில்லை
தொகுப்பார் சிலரதை சுவைப்பதில்லை
தொடங்குவார் சிலரதை முடிப்பதில்லை

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

சிரிப்பவன் கவலையை மறைக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவன் அல்லவோ திறக்கின்றான்

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா...

# மனம் கொண்டது மாளிகை

(நிமிடக்கதை)

அன்புநிறைந்த சங்குநாதவாசகர்களே உங்கள் அனைவருக்கும் ஜிம்மிக்குட்டியின் இனிய ஞாயிறு வணக்கம் உரித்தாகட்டும்.

எனக்கு இப்ப கொஞ்ச நாளாக மனசே சரியில்லை. ஏன்தான் இந்த மனிசர் இப்பிடி கெடுப்பிடுச்சுத் திரியினமோ. மனத்திருப்தி தான் உலகிலேயே பெரிய செல்வம் என்று எங்கட பெரியவர் அடிக்கடி சொல்லுறவர். பழைய சோறுக்குள்ள உப்புத் தண்ணியையும் கொஞ்சம் புழுப்புளியையும் கரைச்சு விட்டு பச்சைமிளகாயையும் வெங்காயத்தையும் கடிச்சுக்கொண்டு குடிச்சுப் போட்டு மண்வெட்டி பிடிச்சு தறை கொத்துற உழைப்பாளியைப் போய் பாருங்கோ. ஆறு கறியோட சாப்பிட்டாத்தான் சாப்பாடோ... ருசிக்குச் சாப்பிடாமல் பசிக்குச் சாப்பிடுற மனிசரும் சாப்பாட்டுக்காக உயிர் வாழாமல் உயிர் வாழுறதுக்காக சாப்பிடுற மனிசரும் இந்த மண்ணில நிறைஞ்சு இருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும். சாப்பாடு சரியில்லை எண்டு சாப்பாட்டுக் கோப்பையோட சுழற்றி எறியிற ஆம்பிளை இருக்கிற வீட்டில பிள்ளைகள் எப்பிடி வளரும். உப்புக் காணாட்டி உப்பை விட்டுச் சாப்பிடலாம்தானே. உப்புக் கூடினால் சோற்றைக் கொஞ்சம் சேர்த்துச் சாப்பிட்டால் சுவை சமப்பட்டிடும் தானே. அதைவிட்டுட்டு சும்மா வீட்டை இரண்டு படுத்துறதும் ஒரு பழக்கமே. சை–கேவலம்...இந்த வயிற்றுக்குத்தானே இந்தப்பாடு– ''நாகாக்க'' எண்டு சும்மாவோ சொன்னவை. கதைக்கிறதையும் கவனமாக அளந்து கதைக்கவேணும். நாக்குச் சுவைக்கு அடிமைப்பட்டு வயிற்றை குப்பைத் தொட்டியாக்கிப் போட்டுபிறகு அல்லல்டக் கூடாது. எப்பிடியும் வாழலாம் எண்டிறதை விட்டுட்டு இப்பிடித்தான் வாழவேணும் என்ற கொள்கைப்பிடிப்போடை ஒழுங்கு முறையா வாழ்ந்தால் ஏற்றத்தாழ்வோ முரண்பாடோ தோன்றவே தோன்றாது. ம்...இந்த நாய்ப் பிறப்புக்கு விளங்குது. மனிசருக்கு எப்பதான் விளங்கப்போகுதோ...

ம்...யோகமக்கா வாறா. மகள் கைக்குழந்தையோட பின்னாலை வாறா. திண்ணையில இருக்கினம். பெரியவர் குழந்தையை தொட்டுப் பார்க்கிறார். வயிற்றுப் பக்கத்தை மெல்லத்தடவிப் பார்க்கிறார். குழந்தை வலிச்சு வலிச்சு அழுகுது. பெரியவர் தலையை ஆட்டிக்கொண்டே குழந்தையின்ர தாயைப் பார்க்கிறார்.

"ஏன்மகள்...வெயிலுக்க போட்டு வந்து தலையிலை ஊத்தினனீங்களோ?"

ஓகோ...தாய்ப்பால் ஊட்டுற அம்மாக்கள் கவனமாக இருக்க வேணும் எண்டதை மறந்து போகுதுகள் போலை. பிள்ளை அழுகிற வழிவைத்பார்த்தேபெரியவர்நோயையும் நோய்க் காரணியையும் கண்டு பிடிச்சிட்டார்.

"ஐஞ்சு மாசக் குழந்தையை கவனமாப் பார்க்க வேண்டாமே. அது பச்சைக்குழந்தை. வாய் திறந்து கதைக்குமே...சும்மா ஆஸ்பத்திரியெண்டு அலையாமல் பத்தியமாய்ச் சாப்பிடுங்கோ. உச்சி வெயிலுக்கை வெளியிலை திரியாதையுங்கோ..."

பெரியவர் சாய்மனைக் கதிரையில் சாய்ந்து கொள்கிறார்.

"நேற்று அந்த சனசமூக நிலையத் திறப்புவிழாவுக்கு போனனான். ம்...ஒவ்வொரு வீட்டு முற்றத்திலையும் இரண்டு வாழைக்குட்டி. அதுக்குக்கீழைமண்பானையிலதண்ணி வைச்சு சிரட்டையினால மூடி வைச்சிருக்கினம். சும்மா ஐஸ் வோட்டர் மாதிரி சில்லெண்டுது. அருவித் தண்ணிமாதிரி இருக்குது. குளிர் சாதனப்பெட்டி எந்த மூலைக்கு. மெழுகின தரையிலை சப்பாணி கொட்டிக் கொண்டு குடும்பமே இருந்து கொண்டு சாப்பிடுதுகள். அழகான சின்னக் குடும்பம். அமைதியான இடம். அன்பும் அன்புதான். கண்டிப்பும் கண்டிப்புத் தான். ஒப்பீடு இல்லாத திட்டமிடல், சின்ன மரக்கறித் தோட்டம், வரவுக்கேற்ற செலவு. கோயில் குளமென்று ஒண்டாத்தான் போய் வருவினம். வெளியாட்களின்ரை தலையீடுகள் கிடையாது. குழந்தைகளும் நல்ல ஆரோக்கியமாத் தான் இருக்கினம். மஞ்சள் கயிற்றை கழுத்தில போட்டிருந்தாலும் ஏதோ வைரநகையணிந்திருப்பது போன்ற நிறைவு. எப்பவும் சிரிச்ச முகமாகத்தான் இருக்குதுகள். ம்...கள்ளன் வந்தாலும் கதவை தைரியமாய்த் திறந்து விடுவினம். வெட்டாமல் கொத்தாமல் வெருட்டிப் பார்த்திட்டு விட்டிடுவாங்கள். எல்லோரும் வீட்டு வாசல்லை ரொக்கப் பணத்தையும் நகை நட்டையும் பொத்திப் பொத்தி வைத்திருக்கிற நிலைமை மாற வேண்டும். பெறுமதியான விடயங்களாக எளிமையையும் கல்வி அறிவையும் சேர்த்து வைச்சால் கள்ளன் வந்து மினைக்கட மாட்டான். வெளித்தோற்றத்தாலை கிடைக்கிற பெருமையும் மதிப்பும் அர்த்தமற்றது என்பதை மக்கள் எப்போது உணருவார்களோ... ம்...மனம் நிறைஞ்சிருக்கும். வாழ்வில் இந்தப் பகட்டுகளுக்கு முக்கியத்துவம் கிடையாது. சிலர் பெறுமதி வாய்ந்த பணம், நகைகளை வைத்திருப்பதால எல்லோரிடமும் இதையே எதிர்பார்த்து திருட்டு முயற்சி மேற்கொண்டு அது கிடைக்காத போது உயிர் அச்சுறுத்தல் செய்கின்ற துயரம் எமது இனத்திற்கேயுரிய சாபக்கேடுதான். மடியிலை கனமும் இல்லை. வழியிலை பயமும் இல்லை என்ற பொன்மொழி எத்தனை அர்த்தம் நிறைந்தது. ம்... மனிதம் தொலைந்துபோன மண்ணில மரணம் தாண்டவமாடும் கொடூரம் ஒழிய வேண்டுமானால் மனம் வெளுக்க வேண்டும்.



போதையில்லாத பூமி உருவாக வேண்டும். மனித உயிர்கள் மிகவும் மலிவாகிப்போன மயான பூமியில் இரத்தமும் தசையும் அற்பமான பொருட்கள் ஆகிட்ட நிலை மாறுமா?" பெரியவர் முகத்தைத் துடைத்துக் கொள்ளுறார். அவராலை தாங்க முடியல்லை. சோர்ந்து களைச்சுப் போனார். "ம்.. இந்த நிலை என்று மாறுமோ..." சாப்பிட்டிட்டுபடுக்கப் போறன். ஏதாவது சத்தம் கேட்டால் குலைக்கக் கூடப் பயமாக் கிடக்குது. ம்...போட்டு வாறன்.

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

# அழகுக் கண்கள் அடர்ந்த புருவங்கள் ஆசையா?

கருவளையம் இல்லாத பளிச் கண்கள், கறுத்த அடர்த்தியான புருவங்கள், இமைகள்... இப்படி அமைந்தால் எப்படி இருக்கும் என்கிற ஆசை எல்லோருக்கும் உண்டு. "இந்த ஆசையை வீட்டிலுள்ள பொருட்கள் மூலமே சாத்தியப்படுத்தலாம்"

**கருவளையம் வராமல் இருக்க...**

தினமும் எட்டு மணிநேரத் தூக்கம் அவசியம்.

⅄ கணனி, மொபைல் என்று தொடர்ச்சியாகப் பார்த்துக் கண்களைச் சோர்வடைய வைக்கக் கூடாது.

⅄ வெயிலில் செல்லும் போது சன் கிளாஸ் போட மறக்க வேண்டாம்.


⅄ குளிர்ந்த நீரில் நனைத்த பஞ்சை தினமும் பத்து நிமிடங்கள் கண்களின் மேல் வைத்து எடுக்கலாம்.

⅄ தூங்கும்போது தலையைச் சற்று உயர வைத்துத் தூங்கினால் முகத்துக்கும் கண்களுக்கும் இரத்த ஓட்டம்பாய்ந்து கருவளையம்வராது.

கருவளையம் மறைய...

⅄ தக்காளிச்சாறு, எலுமிச்சைச் சாறு இரண்டையும் சம அளவு கலந்து கண்களின் கீழே தடவி பத்து நிமிடங்கள் கழித்துக் குளிர்ந்த நீரால் கழுவி வர படிப்படியாகச் சரியாகிவிடும்.

⅄ உருளைக்கிழங்கைக் கழுவி தோலுடன் துருவிச் சாறெடுத்து அந்தச் சாற்றில் பஞ்சை நனைத்து கண்களின் மேல் வைத்து சில நிமிடங்கள் கழித்து எடுத்து வர கருவளையம் மறையும்.



⅄ பாதாம் எண்ணெயை தினமும் கண்களின் கீழே தடவிவர கருவளையம் நீங்கும்.

⅄ காய்ச்சாத பாலை கண்களைச் சுற்றித் தடவுவதும் நல்ல தீர்வாகும்.

புருவம் மற்றும் கண் இமைகள் உதிராமல் இருக்க...

எட்டுச்சொட்டு விளக்கெண்ணெய். பத்து சொட்டு ஒலிவ் எண்ணெய் இரண்டையும் சேர்த்து லேசாகச் சூடாக்கி அதில் இரண்டு துளசி இலையைப் போடவும். எண்ணெய் ஆறியதும் எடுத்து வைத்துக் கொண்டு தினம் விரல்களால் தொட்டு புருவம் மற்றும் இமைகளில் தடவி வரவும். இமை முடிகள் கொட்டாது. கொட்டினாலும் சரியாகி விடும்.

சிவந்த கண்கள் குளிர...

கண்கள் சிவந்துபோனால் முதலில் வெதுவெதுப்பான நீரில் கைக்குட்டையை நனைத்துக் கண்களுக்குச் சில நிமிடங்கள் ஒத்தடம் கொடுத்து விட்டு பிறகு குளிர்ந்த நீரில் ஒத்தடம் கொடுக்கவும். சோர்வு நீங்கி, கண்கள் பால்போல வெண்மையாகும்.

கண் கட்டிகள்... கெட் அவுட்!

இன்னொருவர் பயன்படுத்திய கண் மையைப் பயன்படுத்தாமல் இருப்பது மற்றும் வாரம் இருமுறை எண்ணெய்க்குளியல் செய்வது ஆகியவை கண்களில் கட்டி வருவதைத் தவிர்ப்பதற்கான வழிகள். கட்டி வந்துவிட்டால் வெள்ளரிச் சாறு எடுத்து அதில் பஞ்சை நனைத்துக் கண்களின் மேல் தினமும் ஒரு வாரத்துக்கு வைத்துவர, சரியாகிவிடும்'

கவிதை எழுதட்டும் கண்கள்!

# கஜினிகாந்த்

## திரை விமர்சனம்



தமிழ் சினிமாவில் அடல்ட் கதை மூலம் தொடர்ந்து இரண்டு ஹிட் படங்களை கொடுத்தவர் சந்தோஷ். எனக்கும் பமிலி படம் எடுக்கவரும் என்று ஒரு தெலுங்கு படத்தின் ரீமேக் உரிமையை வாங்கி சந்தோஷ் எடுத்திருக்கும் படம் தான் கஜினி காந்த். சந்தோஷ் தன்னை நிரூபிக்கும் இடத்தில் இருக்க, ஆர்யாவோ ஹிட் கொடுத்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் இருக்கின்றார். இருவரின் குறிக்கோளும் வெற்றிபெற்றதா? பார்ப்போம்.

தர்மத்தின் தலைவன் படம் பார்க்கும் போது ஆர்யா பிறக்கின்றார். அதன் காரணமாக என்னவோ ஆர்யாவிற்கு மறதி கொஞ்சம் தூக்கலாகவே உள்ளது.

இந்த மறதியால் ஆர்யா மிகவும் கஷ்டப்படுகின்றார், பிச்சைக்காரனுக்கு பைக் சாவியை கொடுக்கும் அளவிற்கு மறதி என்றால் பாருங்கள் இப்படிஒரு மறதிநோயை வைத்துக்கொண்டு சாயிஷாவை பார்த்தவுடன் காதலிக்கின்றார்.

அதைத் தொடர்ந்து சாயிஷாவிடம் தன் மறதியை மறைக்கவும், சாயிஷாவின் தந்தை சம்பத்திடம் எப்படியாவது நல்ல பெயர் எடுத்து அவருடைய மகளை கரம் பிடிக்கவும் ஆர்யா படும்பாடே இந்த கஜினிகாந்த்.

பாஸ் என்கின்ற பாஸ்கரன் படத்திற்கு பிறகு முழுக்க முழுக்க ஒரு காமெடி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

ஓரளவிற்கு நன்றாகவும் தன் பணியை செய்து கொடுத்துள்ளார்.

ஆனால், அதே நேரத்தில் பாஸ் என்கின்ற பாஸ்கரன், வாசுவும் சரவணனும் ஒன்னா படிச்சவங்க படத்தில் பார்த்து பழகி போன ஆர்யா தான் இந்த கஜினி காந்திலும்.



ஆர்யாவிற்கு பக்க பலமாக சதீஷ் தமிழ்படம்-2வை தொடர்ந்து இதிலும் அவருடைய காமெடி காட்சிகள் ரசிக்க வைக்கின்றது. குறிப்பாக இரண்டாம் பாதியில் ஆள் மாறாட்டம் செய்யும் காட்சிகள் சிரிப்பு சரவெடி.

இவர்களை விட ஆர்யா மற்றும் அவருடைய தந்தையாக வரும் 'ஆடுகளம்' நரேன் கூட்டணி இன்னும் சிரிக்க வைக்கின்றது. சாயிஷா பார்க்க அழகாக இருக்கின்றார், ஆனால், நடிப்பதற்கு பெரிதும் வாய்ப்பு இல்லை.

படம் கலகலப்பாக சென்றாலும் அடுத்தடுத்த காட்சிகள் நாம் கணிக்கும் வகையிலேயே உள்ளது. அதைவிட தெலுங்கில் ஒரிஜினல் பதிப்பை பார்த்து விட்டால், தமிழில் பார்க்க சுவாரஸ்யம் குறைவாக தான் இருக்கும். ஏனெனில் அந்த அளவிற்கு அப்படியே காட்சி மாறாமல் எடுத்துள்ளனர்.

படத்தின் ஒளிப்பதிவு கண்களுக்கு குளிர்ச்சி தான், செம்ம கலர்புல்லாக உள்ளது. இசை பெரிதும் ஈர்க்கவில்லை, பாடல்கள் ஏதும் மனதில் நிற்கவில்லை.

படத்தின் இரண்டாம் பாதி, செம்ம கலகலப்பாக செல்கின்றது. ஆர்யா - சதீஷ் - நரேன் சம்மந்தப்பட்ட காட்சிகள் சிரிப்பிற்கு கரண்டி.

யூகிக்கக்கூடிய காட்சிகள் அடுத்தடுத்து வருவது.

படத்தின் பாடல்கள் ஏதும் மனதை ஈர்க்கவில்லை, அத்தனை மறதியை வைத்துக் கொண்டு ஆர்யாவை ஒரு விஞ்ஞானி போல் காட்டியிருப்பது லொஜிக் ஓட்டை.

மொத்தத்தில் கஜினிகாந்த் சந்தோஷிற்கு குடும்ப படமும் எடுக்க வரும் என நிரூபித்து விட்டார். பமிலியுடன் கண்டிப்பாக 'இந்த சந்தோஷ் படத்தை பார்க்கலாம்.

# அட்லீ - விஜய் படத்தின் இசையமைப்பாளர் யார்?

அட்லீ-விஜய் மூன்றாவது முறையாக இணைகிறார்கள் என்றே தகவல் ரசிகர்களுக்கு குஷி தான். AGS நிறுவனம் தயாரிக்க இருக்கும் இப்படம் குறித்து வேறு எந்த தகவலும் அதிகாரபூர்வமாக வெளியாகவில்லை.



ஆனால் அவ்வப்போது சில விடயங்கள் படம் குறித்து வெளியாகிய வண்ணம் உள்ளன. தற்போது படத்தின் இசையமைப்பாளர் குறித்து சமூக வலைதளத்தில் ஒரு பிரபலத்தின் பெயர் அடிபடுகிறது. அது வேறுயாரும் இல்லை இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான் என்று தான் கூறப்படுகிறது.

மெர்சலில் தளபதியை ரசிக்க வைத்த ரகுமான் சர்காரிலும் கலக்க இருக்கிறார். இதற்கு நடுவில் அடுத்த படத்தின் இசையமைப்பாளரும் ரகுமான் தான் என்கின்றனர்.

# அரசியலில் ரஜினி, கமலுக்கு ஆதரவு இல்லை - முன்னணி நடிகர்



சுப்பர்ஸ்டார் ரஜினி மற்றும் கமல் ஆகியோர் தற்போது தீவிர அரசியலில் இரங்கியுள்ளனர்.

அட்டகத்தி படத்தின் மூலம் பிரபலமானவர் தினேஷ். இவர் தற்போது அண்ணனுக்கு ஜே என்ற அரசியல் படத்தில் நடித்துள்ளார். இந்நிலையில் அவர் அண்மையில் எனக்கு அரசியலில் இறங்க ஆர்வம் உள்ளது. ரஜினி, கமல் ஆகியோருக்கு ஆதரவு அளிக்க மாட்டேன் என கூறியுள்ளார்.

மேலும் இவர் தினகரனை ஆதரிப்பேன். இப்போது அவர் நன்றாக செயற்படுகிறார்" என கூறியுள்ளார்.

# கடிகார மனிதர்கள்

## திரை விமர்சனம்

கடிகார மனிதர்கள் தலைப்பை பார்த்ததும் புரிந்திருக்கும் படத்தின் கதை காலத்தின் பின்னால் ஓடும் ஏழை மனிதர்களை பற்றியது என்று.

நடிகர் கிஷோர், கருணாகரன் மற்றும் லதாராவ் ஆகியோர் நடிப்பில் உருவாகியுள்ள இந்த படம் வாடகை வீட்டில் உள்ளவர்கள் படும் இன்னல்களை காட்டியுள்ளது.

வறுமை காரணமாக சென்னையை தேடி வருகிறது கிஷோர் மற்றும் லதாராவ் குடும்பம். அவர்களுக்கு மூன்று குழந்தைகள். வண்டியில் வீட்டு சாமான்களை ஏற்றிக்கொண்டு புரோக்கர் உதவியுடன் தெருத்தெருவாக வீடு தேடுகின்றனர்.

5 பேர் கொண்ட குடும்பம் என்பதால் எந்த வீட்டு ஓனரும் இவர்களுக்கு வீடு தர முன்வரவில்லை. 3500 ரூபாய்க்கு மேல் இவராலும் வாடகை கொடுக்க முடியாது. பின்னர் இறுதியாக இவர்களுக்கு ஒருவர் மட்டும் வீடு தர முன்வருகிறார். ஆனால் 4 பேர் மட்டுமே இருக்க வேண்டும் என அவர் கூற புரோக்கர் இவருக்கு இரண்டு குழந்தைகள் மட்டும் தான் இருக்கிறார்கள் என பொய் கூறிவிடுகிறார்.



இந்த பொய்யை மறைக்க கிஷோர் அவரின் கடைசி பையனை ஒரு பெட்டியில் போட்டு தினமும் வீட்டுக்குள் கொண்டு வந்து மீண்டும் காலையில் அதே பெட்டியில் ஸ்கூலுக்கு கொண்டு சென்று விடுவார்.

அதே காம்பவுண்டுக்குள் குடிவரும் கருணாகரனுக்கும் ஹவுஸ் ஓனர் மகளுக்கும் காதல் - அது தனி ட்ராக்கில் செல்கிறது.

இப்படியே தொடரும் வாடகை வீடு வாழ்க்கையில் காலம் கடக்க கடக்க அவர்கள் சொன்ன பொய்யால் அதிக பிரச்சினைகள் வருகிறது.

அதையெல்லாம் எப்படி சமாளித்தார்கள், அவர்களால் சொந்த வீடு வாங்கமுடிந்ததா என்பது தான் மீதிக்கதை

வாடகை வீடு கஷ்டங்களையும், வீட்டு உரிமையாளர்களின் அராஜகத்தையும் வெட்ட வெளிச்சமாக காட்டியதற்கும், பொய் சொல்லாமல் பலருக்கும் வீடு கிடைக்காது என தற்போதைய சமூக பிரச்சினையை காட்டியதற்கும் அறிமுக இயக்குநர் வைகறை பாலன் அவர்களை பாராட்டலாம். கிஷோர், லதா ராவ் நடிப்பு பர்ப்பெக்ட். கருணாகரனின் காதல் சீன்களை சாம் C.S மியூசிக் தூக்கி நிறுத்துகிறது.

ஆனால் மெதுவாக செல்லும் திரைக்கதை பார்ப்பவர்களை கொஞ்சம் அதிகமே சோதிக்கிறது. ஒரு சைக்கிள் ரேசை ஏதோ F1 ரேஸ் அளவுக்கு பில்டப் கொடுத்ததெல்லாம் டூமச்.



மொத்தத்தில் கடிகார மனிதர்கள் எதார்த்த சினிமாவை ரசிப்பவர்கள், அதிக பொறுமை இருப்பவர்கள் கண்டிப்பாக பார்க்கலாம்.

# தேர்தல் தொடர்பான சட்டங்கள் இழுபறி நிலையில் தொடர்கிறது

## எமக்கு அதிகாரங்கள் இல்லை– தேசப்பிரிய தெளிவுபடுத்தல்



ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான உலகளா விய பிரகடனத்தின் 21 ஆவது பிரிவில் ஜனநாயக நாடொன்றில் ஆட்சி அதிகாரம் மக்களின் விருப்பமாக அமைய வேண்டும். அந்த விருப்பமானது சரியான நேரத்தில் நடத்தப்படும். உண்மையான வாக்களிப்பின் ஊடாக தெரிவிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் தாமதமடைதல், தேர்தலை நீதியற்ற வகையில் நடத்துதல் போன்றன குற்றமானவை என இந்நாட்டின் தேர்தல்கள் ஆணைக்குழு பகிரங்கமாகவே குறிப்பிடுகின்றது. அவ்வாறான பின்புலத்தினுள் மாகாண சபைகளுக்கான தேர்தல் காலம் தாழ்த்திக் கொண்டிருப்பது தொடர்பில் குற்றம் சுமத்தப்படுவது தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கேயாகும்.

இந்நிலையில், தேர்தல் நடத்தப்படாது தாமதிக்கப்படுவது தொடர்பில், தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுடன் மேற்கொண்ட நேர்காணல்.

**கேள்வி: - தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரே! அடுத்து எந்தத் தேர்தல் நடத்தப்படுகிறது?**

பதில் : - தற்போது கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளின் காலம் கடந்து போயிருக்கின்றது. ஒக்டோபர் மாதத்தில் மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடையவுள்ளது.

இந்த ஆறு சபைகளினதும் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவதாயின் நடத்துவதற்கான நெருங்கிய தினம் ஜனவரி 5ஆம் திகதியாகும். பாராளுமன்றத்தின் கட்சித்தலைவர்கள் அனைவரும் ஜனவரி 12ஆம் திகதியோ அல்லது அதற்குமுன்னரோ மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றார்கள்.

தென் மற்றும் மேல் ஆகிய மாகாண சபைகளை உரிய காலத்திற்கு முன்னர் கலைத்தால் எட்டு மாகாண சபைக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் வைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. ஊவா மாகாண சபையின் பதவிக்காலம் மாத்திரம் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத்தில் முடிவடைகின்றது.

**கேள்வி: - மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடுவது தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரே என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார். புதிய முறையினை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுமாயின் பழைய முறையில் ஏன் தேர்தலை நடத்த முடியாது?**

பதில் : - அவர் அவ்வாறு கூறியுள்ளமை தொடர்பில் என்னால் பதிலளிக்க முடியாது. எனினும் இவ்விடயத்தைத் தெளிவு படுத்த வேண்டியது முக்கியம்.

மாகாண சபைகள் தொடர்பில் உள்ள சட்டமானது 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் சட்டமாகும். அந்தச் சட்டத்தின் கீழ் 2017 ஒக்டோபர் மாதத்தில் முடிவடைந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலை காலம் முடிவடைந்த சில வாரங்களில் நடத்துவதற்கு நாம் ஆயத்தமானோம்.

அதனிடையே 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றிக் கொள்வதற்கு பாராளுமன்றம் நடவடிக்கை மேற்கொண்டது. அந்தப் புதிய முறையின் கீழ் விகிதாசார முறை க்குப் பதிலாக கலப்பு விகிதாசார முறை மாற்றப்பட்டது.

இது சரியாக முதல் வீட்டை உடைத்துவிட்டு புதிய வீடொன்றைக் கட்டுவதைப் போன்றதாகும். குறைந்தது பழைய அத்திபாரம் கூட இல்லை. எனவே தற்போது மீண்டும் விகிதாசார முறையில் மாகாண சபைத்தேர்தலை நடத்துவதாயின் 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க திருத்தச் சட்ட த்தை முழுமையாக நீக்க வேண்டி வரும்.

பாராளுமன்றத்தின் சட்டத்தை நீக்கிவிட்டு பழைய சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு முடியுமாயின் நாம் அநேகமான விடயங்களை மாற்றியமைப்போம்.

எம்மால் அவ்வாறு மாற்றங்களைச் செய்வதற்கு அதிகாரங்கள் இருக்குமாயின் செலவு அறிக்கையினை சமர்ப்பிக்க, செலவுகளை வரையறுக்க, இளைஞர்களுக்கு கண்டிப்பான பிரதிநிதித்துவத்தை வழங்க, போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தாம் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்று சான்றிதழைக் கோருவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். எனினும் அவ்வாறு செய்வதற்கு எமக்கு அதிகாரங்கள் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி யையோ வேறு அரசியல்வாதிகளையோ அசௌகரியங்களுக்கு உள்ளாக்குவதற்கான தேவை எமக்கில்லை. அவரது கருத்தை அவர் தெரிவித்திருக்கின்றார். எமது தெளிவை நாம் வழங்குகின்றோம்.

**கேள்வி:- மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லையா?**

பதில்:- கலாநிதி தவலிங்கத்தின் தலைமையில் சமர்ப்பிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை பெப்ரவரி 14 ஆம் திகதி மாகாண சபை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. அமைச்சர் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அது பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டது. எனினும் இன்னமும் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்த அறிக்கைக்கு அமைய பாராளுமன்றத்தில் அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப் பட வேண்டும்.

நாம் ஏப்ரல் மாதத்திலும், மே மற்றும் ஜூன் மாதங்களிலும் இது தொடர்பில் செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்து மூன்று கடிதங்களைப் பாராளு மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு அனுப்பினோம். இப்போது நாம் எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம். பாராளுமன்றத்தில் நம்பிக்கை வைக்குமாறு சபாநாயகர் கூறியிருக்கின்றார்.

**கேள்வி:- நீங்கள் என்ன தான் கூறினாலும் அரசியல் வாதிகள் விரலை நீட்டுவது தேர்தல் ஆணைக்குழுவிற்கேயாகும்?**

பதில்:- அதனையிட்டு வேதனையாக உள்ளது. கிரிக்கெட் போட்டி ஒன்று தோல்வியடைந்தால் துடுப்பாட்டக்காரரையும், பந்து வீச்சாளரையும் குற்றம் கூறுவதில் பலனில்லை. மொத்த அணியும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். அதே போன்று மொத்தப் பாராளுமன்றமும் பொறுப்புக்கூற வேண்டும். அதே போன்று தற்போது கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் பிரிவுகளின் மக்களுக்கும் இது தொடர்பில் பொறுப்புள்ளது. கேகாலை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களது கூட்டமைப்பினால் எனக்கு ஒரு நினைவூட்டல் வழங்கப்பட்டது. அது தவிர முகநூலில், தபால் அட்டைகள் மூலம் பேசுவதற்குப் புறம்பாக மக்களின் அக்கறையின்மையும் பிரச்சினையே.

**கேள்வி:- பிரதான அரசியல் கட்சிகளைப் போன்று சில புதிய அரசியல் கட்சிகளிலிருந்தும், முக்கியமான நபர்கள் சிலரும் 2020ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக பேச்சுக்கள் அடிபடுகின்றன. அவர்களிடையே மகிந்த தேசப்பிரியவின் பெயரும் உள்ளதே?**

பதில்:- தேர்தல் ஆணைக் குழு அமைக்கப்பட்டு மூன்றாவது கூட்டத்தின்போது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தேர்தலில் போட்டியிடும் விருப்பத்தில் இருந்தால் அவ்வாறானவர்கள் ஆணைக்குழுவிலிருந்து வெளியேறி குறைந்தது இரண்டு வருடங்களுக்குப் பின்னரே தேர்தலில் போட்டியிட வேண்டும் என நான் பிரேரணை ஒன்றை முன்வைத்தேன். எமது அதிகாரிகளுக்கும் நாம் கூறியிருக்கின்றோம். எவரேனும் ஒருவர் தேர்தலில் போட்டியிட விரும்பினால் அவ்வாறானவர்கள் காலதாமதமின்றி ஆணைக்குழுவிலிருந்து விலகிவிட வேண்டும் என்று அறிவித்திருக்கின்றேன்.

தமது உறவினர் ஒருவர் பேருந்தில் ஏறும் வரை பேருந்தை நிறுத்தி வைத்துக் கொண்டிருப்பதற்கு எதிர்ப்பைக் காட்டும் நாம் எமது அழுத்தங்கள் இருக்கும் போது தேர்தலைக் கேட்பது சரியானதா?

இந்தியாவின் தேர்தல் ஆணைக் குழுவின் டி. என். செஷான் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். பிரதான தேர்தல் ஆணையாளராக இருந்த கலாநிதி கில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அமைச்சரவை அமைச்சரானார். எனினும் அவ்வாறான நிலை நல்லதல்ல.

அறுபதாம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து எமது குடும்பம் அரசியல் தொடர்புகளைக் கொண்டிருந்த குடும்பம். அரசியல் எனக்கு விளங்கக்கூடிய ஒரு விடயம். எனினும் நான் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை.

வெற்றியடைவது, தோற்றுப் போவது என்பது வேறு விடயம். அவற்றை விட சுய கௌரவம் மற்றும் மனச்சாட்சி போன்றன மிகவும் முக்கியமாகும்.

**கேள்வி:- அரச நிறுவனம் ஒன்று புதிய ஊடகப்பயன்பாட்டினால் மக்களோடு நேரடி தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் இந்த நூற்றாண்டில் முன்மாதிரியாக ஆகியிருப்பது தேர்தல் ஆணைக்குழுவாகும். அவ்வாறான தேர்தல் ஆணைக்குழுவின் சமூக வலைத்தளச் செயற்பாடுகளை பலவீனமாக்குவதற்கான நிலை உள்ளதா?**

பதில்:- தேர்தல்கள் ஆணைக் குழு சமூக வலைத்தள பயனாளர்களுடன் மேற்கொள்ளும் தொடர்புகளை ஒரு போதும் நிறுத்தப் போவதில்லை. இன்றும் வாக்காளர்களைக் கணக்கிடுவதற்கு ஒன்லைன் மயப்படுத்துவது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

அதே போன்று எம்மோடு இணைந்துள்ள நூற்றுக்கும் மேற்பட்ட சமூக வலைத்தள பயனாளர்களுடனும் இணைந்து செயற்பட்டுக் கொண்டு செல்கின்றோம்.

நான் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளும் செயற்பாடுகளைச் சற்றுக் குறைத்துள்ளேன். தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ கணக்கின் ஊடான தொடர்பாடல் நடவடிக்கைகளை செயற்றிறன்மிக்கதாக முன்னெடுத்துச் செல்கின்றோம். எனினும் எனது நண்பர்களுடன் இருக்கும் சமூக வலைத்தளத்தொடர்புகள் அவ்வாறே வைத்துக் கொள்கின்றேன்.

வாக்காளர்களுக்கு வழங்குவதற்கான செய்தி ஒன்று என்னிடமுள்ளது. அனைவரும் தமது பெயர்களை வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்து கிராம அதிகாரிகள் ஊடாக தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். இதுவரை உங்களுக்கு வாக்காளர் விண்ணப்படிவங்கள் கிடைக்காவிட்டால் தேர்தல்கள் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

ஓகஸ்ட் 10ஆம் திகதிக்குப் பின்னர் முறையீடுகள் மூலம் மாத்திரமே வாக்காளர் உரிமை கோர முடியும். 2019 ஜனவரி 8 ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதியினால் முடியும். அவ்வாறு நடந்தால் இந்த வாக்காளர் பட்டியல் மூலமாகத்தான் தேர்தல் நடத்தப்படும். நீங்கள் ஜனநாயகத்தை விரும்புபவர்களாயின் அதன் நடைமுறை வெளிப்பாடான வாக்களிப்புக்காக உங்களுக்கு இருக்கும் உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

**மஞ்சுல சமரசேகர**
**தமிழில்:-**
**எம்.எஸ்.முஸப்பிர்**

# facebook

# தண்ணீர்த் தாகம்

பங்குனி மாதம் வெயில் மிகவும் காய்தலாக அடித்துக் கொண்டிருந்தது. வீதியில் அவ்வளவு நடமாட்டமில்லை. தூரத்தில் மாத்திரம் ஒருவன் குடை பிடித்துக் கொண்டு வியர்க்க விறுவிறுக்கத் தார் றோட்டில் அவசரமாய்ப் போய்க்கொண்டிருந்தான்.

அதற்கப்பால் ஒரு கட்டை வண்டி "கடா கடா" என்று ஆடி ஆடி வந்து கொண்டிருந்தது. பன்னிரெண்டு மணி வெளியே யாரும் தலை காட்டவில்லை. பகல் முழுவதும் வெயிலிலே திரியும்நாய்கூட சுவரோரத்தில் கிடந்த சிறு நிழலில் இளைத்துக் கொண்டிருந்தது. அவ்வளவு உக்கிரமான வெயில், பலர் பகலுறக்கம் போட்டார்கள். சிலர் புழுக்கம் தாளாமல் தவித்தார்கள். செட்டியார் பத்திரிகையோடு தூங்கி வழிந்து கொண்டிருந்தார்.

அந்த அரசமரத்தின் கீழ் தான் பகல் முழுவதும் மீனாட்சிக்கு வேலை. நியாயஸ்தலத்துக்குப் போகும் கிளை வீதியும் பெரிய தெருவும் கோணமாய்ச் சந்திக்கும் சந்தி அது. அந்த அரச மரத்தைச் சுற்றி வெயில் கடுமைக்கும் உகந்த குளிர் நிழல், தட்டுச் சுளகிலே சின்னச் சின்னக் கூறாகக் கத்தரிக்காய், பிஞ்சு மிளகாய் நன்றாக அடுக்கிப் பக்குவமாக வைக்கப்பட்டிருந்தன. அவளுக்குச் சோம்பேறித்தனமோ கொட்டாவியோ இல்லை.

அன்றைக்கு வியாபாரம் அவ்வளவு ருசியாகவில்லை. கோடு கலைந்ததும் பள்ளிக்கூடம் விட்டதும்தான் வியாபாரத்தின் ருசி தெரியும். கொண்டு வந்த பெட்டியை காலி செய்து விட்டே, வீடு திரும்புவாள். அப்பொழுது அவள் உள்ளத்தில் எழுவது ஆனந்தக்கடல் தான்.

தலையைக்கோதிக்கொண்டே பள்ளமான அடியிற் சாய்ந்தாள். அரசமிலைகளை இடையிடையே அசைக்கும் காற்று அவள் கூந்தலையும் ஆட்டிக்கொண்டிருந்தது. ஒரு காகம் மாத்திரம் கொப்பிலே இருந்து பலத்த தொனி வைத்தது. அவளைப் பார்த்தால் யாருமே இழிகுலத்தவள் என்று சொல்லமாட்டார்கள். அவளுடைய சிவந்த மேனியும் கருவண்டுக் கண்களும் யாரையும் கொள்ளை கொண்டு விடும். அவள் ஜாதியைப் பற்றி யாருமே கேட்டதில்லை.

அப்படி அவர்கள் அறிந்திருந்தால் எப்பவோ அவள் வியாபாரத்தில் மண் விழுந்திருக்கும். ஊரார் மாத்திரம் அவளிடம் எதுவும் வாங்குவதில்லை. அவர்களுக்குத்தான் விடயம் தெரியுமே?

வெயில் எரிய எரிய அவளுக்குத் தாகம் எடுக்கத் தொடங்கியது. பொறுத்துப் பார்த்தாள். நாவறளத் தொடங்கியது. இனி அவளால் சகிக்க முடியாது மெதுவாக அவற்றைப் பெட்டியிலே போட்டுக்கொண்டு கிளம்பினாள். பக்கத்தில் வீடுகளில்லை. அவையெல்லாம் காய்கறி விளையும் பூமியும் பற்றைக்காடுகளுந்தான்.

செழித்த கமுகுகளும் வாழைகளும் அங்கே கிணறு இருக்க வேண்டுமென்பதை ருசுப்படுத்தின. மெல்ல மெல்ல வீட்டின் அருகே வந்தாள். தெருவழியே ஓடிய சேற்றுத் தண்ணீர் இன்னும் அந்த எண்ணத்தைப் பலப்படுத்தியது. உள்ளே பெட்டியை வைத்துவிட்டு அங்கும் இங்கும் பார்த்தாள் யாரையும் காணவில்லை.

கிணற்றைக் காணக்காண மேலும் தாகம் அவளை வாட்டியது. அடிநாவிலே சொட்டு ஜலமில்லால் வறண்டு போயிற்று. அந்த வெயிலின் அகோரத்திற்கு யாருக்குத்தான் தாகமில்லை!

கிணற்றுக் கட்டிலே விளக்கி வைத்த செம்பிலே நிறைய குளிர்ந்த ஜலத்தைக் காண அவள் உள்ள



மும், வாயும் அதிலே ஆழ்ந்து போயிற்று, பாவம் அந்த விடாயை அடக்க இன்னொருவிடாய் உதவியாய் இருந்தது. தான் அந்த விடாயைத் தீர்க்க அருகதையற்றவள் என்பதை அவள் அறிவாள். இழிகுலத்தில் பிறந்த பெண்கள் எல்லாம் தாகசாந்தி செய்யக்கூடாது என்று கடவுள் கட்டளையிட்டிருக்கிறார் என்பது அவள் அபிப்பிராயம். அந்தச் செம்பை மாறி மாறிப்பார்த்தாள். யாரையும் காணவில்லை.

என்னடி செய்தாய் பாதகி என்று மிரட்டல் கேட்டது அதிகார தோரணையில்.

ஏங்கி விலவிலத்துப் போனாள் மீனாட்சி, உடம்பு சொட்ட வியர்த்தது. நெஞ்சு திக்திக் என்று அடித்துக் கொண்டது. கண்கள் மிரள மிரள விழித்தன. அவள் தான் செய்த களவு பிடிபட்டதை எண்ணிக் கல்லாய் சமைந்து போனாள்.

உனக்கு அவ்வளவு மமதையா சிறுக்கி என்று ஆத்திரத்தோடு ஓடிவந்தார் நடேசய்யர். விபூதியைப் பொத்திக்கொண்டே கைகள் ஆத்திரத்தால் அங்குமிங்கும் எதையோ தேடின. கோபாக்கினி கண்களிலிருந்து பறந்தது.

அவ்வளவு நெஞ்சுத் துணிவு, கிணற்றுக்குக் கிட்ட வந்து செம்பு சலத்திலும் தொட்டுவிட்டாயே? அனுஷ்டான ஜலத்தில் தொட உனக்கு அவ்வளவு தைரியம் வந்துவிட்டது பல்லைக் கடித்து ஆத்திரத்தோடு அவளை விழுங்கப்போனார். பாவம் பெண் அல்லவா? கோயிலுக்குப் போனால் எப்படிப் பிராயச்சித்தம் செய்வது என்று விட்டுவிட்டார் போலும்.

மூதேவி நாயே, இனி என்னுடைய கிணற்றை நான் என்ன செய்வது? அனுஷ்டான பாத்திரத்தை வைத்துவிட்டு விபூதி எடுத்து வருவதற்கிடையில் இப்படிச் செய்துவிட்டாயா? இனி இந்தச் செம்பை...! நீ அந்தக் கதிரவன் மகளல்லவா? என்னுடைய் அனுஷ்டான ஜலத்தைத் தொட்ட நீ கொள்ளையிலே போகமாட்டாயா? சிவன் வதைக்க மாட்டானா?

(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1478

### புனிதன்

நீ வாழும் காலத்தில் யார் யாரையெல்லாம் சிரிக்க வைத்தாயோ அவர்கள் தான் நீ இறந்த பிறகு அழுகின்றனர்



யார் யாரையெல்லாம் அழ வைத்தாயோ அவர்கள் தான் சந்தோசப்படுகின்றனர்...!

### சுகந்தன்

முயற்சியே செய்யாமல் தோல்வியடைவோமென நினைப்பதைவிட பெரிய முட்டாள்தனம் வேறு எதுவுமே இல்லை



### கஜியந்தன்


விதி விளையாடுதுன்னு சொன்னா



ஸ்கோர் எவ்வளவுன்னு கேட்கிறான் சேர்..

### நித்தியா

உழைப்பு இன்றி உயர்வு இல்லை



உழையுங்கள் ஊக்கமாக எறும்பைப்போல...!

### கல்யாணி

வெறும் வளர்ச்சி எவரையும் மனிதனாக்குவதில்லை. சிந்தனைதான் மனிதனை உருவாக்குகிறது



அதுதான் நான் பள்ளிக்கூடம் போகாம சிந்திக்கிறன்

### ஐஸ்வரியா

மனம் நினைத்தால் மலையைக்கூடப் புரட்டலாம், நினைக்காவிடில் புத்தகத்தைக்கூட புரட்ட முடியாது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 143

# ஆயுளை அதிகரிக்கும் இயற்கையின் இனிய வரம் பழங்கள்



மனித குலவிருத்தியின் ஆரம்ப காலத்திலே பழங்கள் மனிதனின்பிரதான உணவாக இருந்து வந்தது. பழங்கள் உண்பது ஆரோக்கியத்துக்கு நல்லது என்பது அனைவரும் அறிந்ததே. இந்தப் பழங்களின் மகிமையை அறிந்ததாலேயே முருகக்கடவுள் கூட பழம் சம்பந்தமான ஒரு பிரச்சினை காரணமாக கோபங் கொண்டு பழனிமலை வரை போனதாக சொல்லப்படுகிறது. இயற்கையன்னை எமக்களித்துள்ள ஏராளமான கொடைகளில் ஒரு முக்கிய இடத்தைப்பிடிப்பது விதவிதமான சுவைகளையும் நிறங்களையும் கொண்ட பழங்கள் ஆகும்.



பழங்கள் நீரிழிவு உள்ளவர்களுக்கு நல்லதல்ல என்று கருதப்பட்ட காலம் நன்றாக இருந்தது. ஆனால் பழங்களை தினமும் உண்டு வந்தால் வகை 2 நீரிழிவு எனப்படும் நீரிழிவு நோய் வருவதற்கான ஆபத்து குறைகிறது என்று ஆராய்ச்சிகள் உறுதி செய்கின்றன.

சுமார் இரண்டு இலட்சம்பேரின் உணவுப்பழக்கம் மற்றும் உடல் ஆரோக்கியம் சம்பந்தமான 25 வருட தரவுகளை ஆராய்ந்து பார்த்ததில் இந்த முடிவு தெரிய வந்துள்ளது. அதே நேரம் பழச்சாறு குடிக்கும் வழக்கம் இருப்பவர்களுக்கு வகை 2 வருவதற்கான ஆபத்து அதிகரிக்கிறது என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். எனவே பழங்களை பழச்சாறாக்கி உண்பதிலும் பார்க்க பழங்களாக உண்பது சிறந்தது என கருதப்படுகிறது.

**பழங்கள் ஒவ்வொன்றுக்கும் பற்பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. ஆனால் மருத்துவச்சிறப்பியல்புகள் அனைத்தையும் ஒருங்கே தன்னகத்தே கொண்ட ஒரு மருத்துவப் பழமாக ஜம்புப் பழமே விளங்குகின்றது.**

**சுவைமிக்க இந்தப்பழம் கலோரி பெறுமானம் குறைந்தது. நிறை அதிகரிப்பை ஏற்படுத்தமாட்டாது. நீரிழிவு நோயாளரில் கூட குருதி வெல்லத்தின் அளவை அதிகரிக்க மாட்டாது. அதிகளவு நீர்த்தன்மையும் நார்த்தன்மையும் கொண்டது.**

**தாகம் தணிக்கும். மலச்சிக்கலைத் தவிர்க்கும். ஊட்டச்சத்துக்கள் நிறைந்தவை. பசியைப் போக்கும், குடிப்பதற்கான இயற்கையான ஆரோக்கிய பானம் தயாரிப்பதற்கு இது ஒரு சிறந்த பழமாகும்.**

**சிறுவர்களும் சுகதேகிகளும், சகலவிதமான நோயாளர்களும் உண்பதற்கு ஏற்ற ஒரு கனியாக இது விளங்குகிறது. அத்துடன் இது குருதி கொலஸ்ரோலின் அளவைக் குறைப்பதற்கு உதவுவதாகவும் நம்பப்படுகிறது.**



**மாம்பழங்கள் போன்ற இனிப்புச்சுவை கூடிய பழங்களை செம்பழ நிலையில் உண்பது சிறந்தது. அத்துடன் மாம்பழத்தைத் தோலுடன் உண்பதே நல்லது என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் தோலில்தான் அதிக அளவு விற்றமின் சி காணப்படுகிறது. மேலும் கல்சியம், பொட்டாசியம், சோடியம் மற்றும் பொஸ்பரசு இதில் அதிக அளவு உள்ளது.**

**வாழைப்பழமானது எக்காலத்திலும் கிடைக்கக்கூடிய முக்கனி. இது எமது பிரதேசத்தில் நன்கு விளையக்கூடிய மலிவான, சுவையான பழமாகும். உண்ணக்கூடியதாகவும் இருக்கின்றது. இதில் அடங்கியுள்ள சத்துக்கள் இது ஏனைய பழங்களுக்கு சற்றும் சளைத்ததல்ல என்பதற்கு சான்று பகர்கின்றது.**


**இரும்புச்சத்து அதிகமுள்ள மாதுளை இரத்தத்தில் அளவை அதிகரிக்க உதவுகிறது. அத்துடன் மாதுளம்பழங்களிலே பல எண்ணற்ற மருத்துவக் குணங்கள் இருப்பது ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டு வருகின்றது.**

விதைகள் கொட்டைகள் என்பனவும் உடலில் பல அனுகூலமாக விளைவுகளை ஏற்படுத்துவது அறியப்பட்டு வருகிறது. எவ்வெளவுக்கெவ்வளவு கொட்டைகளை சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிக காலம் வாழலாம் என்று நியூ இங்கிலாந்து மருத்துவ சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு அறிக்கை ஒன்று கூறுகிறது.

அமெரிக்காவில் 30 ஆண்டு காலகட்டத்தில் சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்த முடிவுகள் வந்துள்ளன. தினமும் ஒரு கையளவு கொட்டைகளை சாப்பிடுவதால் எந்த ஒரு காரணத்தாலும் ஏற்படும் இறப்பதை 20 சதவீதம் என்ற அளவில் குறைக்கிறத்து என்று இந்த ஆய்வு கூறுகிறது.

கச்சான், கடலை, கசுக்கொட்டை மாதுளம்விதை, பாதாம்பருப்பு, கௌப்பி, பயறு போன்றவை உடல் ஆரோக்கியத்தை பேண உறுதுணையாக இருக்கின்றன.

பழங்கள் மிக வேகமாக சமிபாடடையக் கூடியவையாதலினால் இவற்றைத் தனியாக உண்பது நல்லது. பொதுவாக இரவில் ஏனைய உணவுகளைத் தவிர்த்து பழங்களை மட்டும் உட்கொள்வது சாலச்சிறந்தது.



**கலப்படமற்ற இயற்கையின் இனிய வரங்களான பழங்கள், விதைகள் என்பவற்றை அதிகம் உண்டு ஆரோக்கியம் பெறுவோம்.**

மேலைத்தேய நாடுகளில் இயற்கையான பொருட்களிற்கு மதிப்பு அதிகம். அவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொள்வது கடினமாக இருந்தும் அதிக விலை கொடுத்து இயற்கையான உணவுகளை வாங்க எத்தனை முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் எம்மைச் சுற்றி மலிவான, இயற்கையான பொருட்கள் எவ்வளவு இருந்தும் அதிக விலை கொடுத்து பொதி செய்யப்பட்ட பொருட்களை வாங்க ஆசைப்படுகின்றோம்.

ஒரு பொருளைப் பேணியிலோ அல்லது போத்தலிலோ பொதி செய்ய முன்பு அது பலவிதமான வெப்பநிலை மாற்றங்களுக்கும் உலர்த்துதல்களுக்கும் உட்படுத்தப்படுகின்றன. இதன் போது அதன் இயற்கையான மூலக்கூறுகளில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் இவை பழுதுபடாமல் இருப்பதற்காக இவற்றிற்குப் பல்வேறுபட்ட இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படுகின்றன. இவை ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல.

எனவே இயற்கை அன்னையான உடன் உணவுகளை உண்பதில் ஆர்வத்தை வளர்த்து ஆரோக்கியம் பெறுவோம்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 468 5555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**